பக்கங்கள்: 20

விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 02 | வள்ளுவர் ஆண்டு 2049 | ஆடி 06 ஞாயிற்றுக்கிழமை 22.07.2018 | கதிர் 258

**இனி து ரகசியம் அல்ல!**

பாதுகாப்பு அமைச்சின் அனுமதி பெற்று மாகாண அமைச்சர் அனந்தி சசிதரன் துப்பாக்கி வைத்திருக்கின்றார் என்று தமிழ்க் கூட்டமைப்பின் போனஸ் பட்டியல் உறுப்பினர் அஸ்மின் மாகாண சபையில் கூற, அது இப்போது பெரும் சர்ச்சையாக உருவெடுத்திருக்கின்றது பக்கம் 03

## ரயில்வே ஊழியர் இன்று இரவு முதல் சட்டப்படி வேலை



கொழும்பு, ஜூலை 22

ரயில் தொழில்நுட்ப சேவை அதிகாரிகள் மற்றும் தொழில்நுட்ப உதவியாளர்கள் ஆகியோர் இன்று நள்ளிரவு முதல் சட்டப்படி வேலை செய்யத் தீர்மானித்துள்ளனர்.

தமது கோரிக்கைகளுக்கு இதுவரை செவிசாய்க் பக்கம் 18

## ‘1990’ இலவச அம்புலன்ஸ் சேவையை யாழில் ஆரம்பித்து வைத்தார் பிரதமர்





யாழ்ப்பாணம், ஜூலை 22

இந்திய அரசின் நிதி உதவியுடன் சுகப்படுத்தும் சேவை (சுவசெரிய) என்னும் ‘1990’ இலவச அம்புலன்ஸ் சேவை வடக்கில் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் மாநகர சபை மைதானத்தில் நேற்று மாலை இடம்பெற்ற இந்த நிகழ்வில் பிரதமர் ரணில் விக்கிரம பக்கம் 18

## மரணதண்டனை விடயத்தில் ஜனாதிபதி உடும்புப் பிடி!



கொழும்பு, ஜூலை 22

போதைப்பொருள் கடத்தலில் ஈடுபடுபவர்களுக்கு மரணதண்டனை வழங்கப்பட வேண்டும் என்ற தீர்மானத்தில் எதுவித மாற்றங்களும் இல்லை என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன திட்டவட்டமாக அறிவித்திருக்கின்றார்.

போதைப்பொருள் பக்கம் 18

### ஏனைய பிரதேசங்களை விட

# வடக்கில் அபிவிருத்தி மிகவும் குறைவுதான்

### கிளிநொச்சியில் ஒப்புக்கொண்டார் ரணில்



கிளிநொச்சி, ஜூலை 22

நாட்டின் ஏனைய பிரதேசங்களோடு ஒப்பிடுகையில் வடக்கில் அபிவிருத்திகள் மிகவும் குறைவுதான் எனக் கிளிநொச்சியில் வைத்து ஒப்புக்கொண்டார் பிரதமர் ரணில் விக்கிரசிங்க.

நிதி அமைச்சின் 18 கோடி 50 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட கிளிநொச்சி தானியக் களஞ்சியசாலையை நேற்றுப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க திறந்து வைத்தார். அங்கு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். பக்கம் 18

## தானியக் களஞ்சியத்தை திறந்து வைத்தார் ரணில்



கிளிநொச்சி, ஜூலை 22

நிதி அமைச்சினால் 18 கோடி 50 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட கிளிநொச்சி பக்கம் 18

## மீளவும் பணிப்புறக்கணிப்புக்கு அதிபர், ஆசிரியர்கள் முஸ்தீபு

கொழும்பு, ஜூலை 22

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து இலங்கை ஆசிரியர், அதிபர் சங்கங்கள் இணைந்து எதிர்வரும் 26ஆம் திகதி வியாழக்கிழமை பணிப்புறக் பக்கம் 18

## யுத்தத்தின் பின் வடக்கில் வர்த்தக வளர்ச்சி பூச்சியம்

### பிரதமர் முன்னிலையில் விக்கி காட்டம்



யாழ்ப்பாணம், ஜூலை 22

யுத்தம் முடிந்த பின்னர், கடந்த 4 வருட அமைதிக் காலத்தில் வட பகுதியின் வர்த்தக நடவடிக்கைகளின் வளர்ச்சியை ஆராய்வோமானால் விடை வெறும் பூச்சியமாகவே காணப்படுகின்றது.

– இவ்வாறு நேற்று மாலை பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவையும் வைத்துக் கொண்டு பக்கம் 03

## துயரில் வாழ்ந்த வடக்கு மக்களை முன்னேற்றவே இந்திய உதவிகள்

### அம்புலன்ஸ் சேவை ஆரம்ப நிகழ்வில் இணையம் மூலம் மோடி தெரிவிப்பு



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஜூலை 22

வடக்கில் முதன்முதலாக இந்தச் சேவையைத் தொடங்குவதற்கான காரணம் உள்ளது. வட மாகாணத்தில் வாழும் மக்கள் துக்கத்திலும் துயரிலும் வாழ்ந்து வந்திருந்தார்கள். பக்கம் 18

## இலங்கை - இந்திய நட்பை யாருமே மதிப்பிடமுடியாது

### யாழ்ப்பாணத்தில் ரணில் பெருமிதம்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஜூலை 22

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இணையற்ற நட்பு உண்டு. அந்த நட்பை யாராலும் மதிப்பிட முடியாது.

– இவ்வாறு குறிப்பிட்டார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க.

இந்திய அரசின் நிதி பக்கம் 18

காலைக்கதிர் Kalaikkathir



# கடற்சார் பாதுகாப்பு, சமுத்திரம் சார்ந்த பிரச்சினைகள் தொடர்பான இலங்கை – ஜப்பான் 3 ஆவது கலந்துரையாடல் வெற்றிகரமாக நிறைவு

கடற்சார் பாதுகாப்பு, மற்றும் சமுத்திரம் சார்ந்த பிரச்சினைகள் தொடர்பான 3 ஆவது இலங்கை – ஜப்பான் கலந்துரையாடல் நடைபெற்றது.



வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற இந்த கலந்துரையாடல் இரண்டு நாடுகளுக்கு இடையிலான விரிவான பங்குடைமை பற்றிய இணை பிரகடனத்தில் எதிர்பார்க்கப்பட்ட ஒத்துழைப்பின் முக்கியவொரு தூணாக அமைகின்றதுடன் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் 2015 ஆம் ஆண்டின் ஜப்பானுக்கான விஜயத்தின்போது நிறைவடைந்தது.

கடல்சார் பிரதேசங்களின் பாதுகாப்பு, பாதுகாவல் மற்றும் சமுத்திரம் சார்ந்த பிரச்சினைகள் சார்ந்த ஒத்துழைப்பின் முக்கியத்துவமானது ஜப்பானுக்கான இலங்கை தலைவர்களால் மேற்கொள்ளப்பட்ட உயர் மட்ட விஜயங்களில் தொடர்ந்தும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

கடல்வழி மற்றும் வான்வழி சுதந்திரத்தை உறுதிசெய்வதற்கும், தடுக்கப்படாத வர்த்தகம் உட்பட சட்டத்தின் ஆட்சிக்கு இணங்க கடற்சார் ஒழுங்கமைப்பை பேணவும் இந்த விடயங்கள் தொடர்பில் ஒத்துழைப்பை விரிவுபடுத்த இரண்டு நாடுகளும் அர்ப்பணித்துள்ளன.

இந்த கலந்துரையாடல் இந்து – பசுபிக் மற்றும் இந்திய சமுத்திர பிராந்தியம் நிலைமை பற்றிய விடயங்கள், துறைமுகங்கள் மற்றும் கப்பல் தொடர்பான ஒத்துழைப்பு, கடற்சார் பாதுகாப்பு மற்றும் பாதுகாவல் மற்றும் பிராந்திய பல்தரப்பு முன்னெடுப்புகள் பற்றிய விடயங்கள் தொடர்பாக கவனஞ் செலுத்தியது.

இரண்டு கண்காணிப்பு கப்பல்கள் மற்றும் பல்வேறு பயிற்சி வாய்ப்புக்கள் வழங்கியமை உட்பட ஜப்பான் அரசாங்கத்தால் இலங்கை கடற்சார் பாதுகாப்பின் கடற்கரை பாதுகாப்புதிறன்களை மேம்படுத்தல்தொடர்பில்ஜப்பான் அரசால் வழங்கப்பட்ட விரிவான ஆதரவிற்கு இலங்கை அரசால் பாராட்டு தெரிவிக்கப்பட்டது.

கூட்டத்தின் போது, இரண்டு தரப்புகளும் ஜப்பான் கடற்சார் சுயபாதுகாப்பு படைகள் மற்றும் இலங்கை கடற்படை, இலங்கை வான்படை மற்றும் இலங்கை கடற்கரை காவல் ஆகியவற்றுக்கு இடையில் ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கு இணங்கின.


மேலும், இரண்டு தரப்புகளும் ஆசியான் பிராந்திய அமைப்பு (ARF) மற்றும் கடற் கொள்ளையை தடுத்தல் மற்றும் ஆசியாவில் கப்பல்களுக்கு எதிரான ஆயுதக்கொள்ளை பற்றிய பிராந்திய ஒத்துழைப்பு உடன்படிக்கை உட்பட இந்த விடயங்கள் பற்றிய கலந்தரையாடல்கள் தொடர்பில் அதிகரித்து வரும் முக்கியத்துவத்தை உணர்ந்து பல்துறை வேலைச் சட்டகங்கள் பற்றியும் கலந்துரையாடின.

இக்கலந்துரையாடலில் ஈடுபட்ட இலங்கை தூதுக்குழு வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் சமுத்திர அலுவல்கள் மற்றும் காலநிலை மாற்றப் பிரிவின் பணிப்பாளர் சசிகலா பிரேமவர்தனவால் தலைமை வகிக்கப்பட்டதுடன் ஜப்பான் தூதுக்குழுவானது ஜப்பான் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் தென்மேற்கு ஆசிய பிரிவு பணிப்பாளர் சோகோ யொசிடாகெ தலைமை தாங்கினார்.

இலங்கை தூதுக்குழு வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு, பாதுகாப்பு அமைச்சு, துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை அமைச்சு, இலங்கை வான்படை மற்றும் இலங்கை கடற்கரை காவற்படை ஆகியவற்றின் பிரதிநிதிகளை உள்ளடங்கியிருந்ததுடன், ஜப்பான் தூதுக்குழு வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு, ஜப்பான் தூதரகம், கொழும்பு, பாதுகாப்பு அமைச்சு, மற்றும் ஜப்பான் கடற்கரை பாதுகாப்பு காவல்படை பிரதிநிதிகளை உள்ளடக்கியிருந்தது.

(க)

# மன்னார் புதைகுழியில் பால் பற்களுடன் 3 சிறுவர்களின் மண்டையோடுகள் மீட்பு



மன்னாரில் மேற்கொள்ளப்பட்டு வரும் மனிதப் புதைகுழி அகழ்வின் போது கண்டுபிடிக்கப்பட்ட எலும்புக்கூடுகளில் சிறுவர்களின் எலும்புக்கூடுகளும் இருக்கின்றன என சட்ட மருத்துவ அதிகாரி டி.சமிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மன்னர் நகர நுழைவாயிலில், ச. தொ.ச. கட்டடப் பகுயில் மனித எலும்பு எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டமையை அடுத்து அந்தப் பகுதியில், கடந்த மே மாதம் தொடக்கம் அகழ்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதன்போது, இதுவரை 40 வரையான எலும்புக்கூடுகள், கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

எனினும், இந்தப் புதைகுழியில் 50 இற்கும் மேற்பட்டவர்களின் எலும்புக்கூடுகள் இருக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அதேவேளை, கண்டுபிடிக்கப்பட்ட எலும்புக்கூடுகளில், குறைந்தபட்சம் மூன்று சிறுவர்களுடையவை என்று சட்ட மருத்துவ அதிகாரிகலாநிதிசமிந்தராஜபக்ஷதெரிவித்துள்ளார்.

இவர்களின் மண்டையோடுகள் பால் பற்களுடன் இருக்கின்றமை கண்டறியப்பட்டுள்ளன என்றும் அவர் கூறியுள்ளார்.

முன்னதாக, 12 வயதுக்குட்பட்ட சிறுவர்களின் எலும்புகளும் இருக்கின்றன என தொல்பொருள் அகழ்வாராய்ச்சியாளர் ராஜ சோமதேவாவும் கூறியிருந்தார்.

அதேவேளை, இந்த புதைகுழியில் சடலங்கள் முறைப்படியாக அடக்கம் செய்யப்படவில்லை என்பதையும் விசாரணையாளர்கள் உறுதி செய்துள்ளனர்.

பெரும்பாலான சடலங்கள், ஒன்றின் மீது ஒன்று போடப்பட்டு – புதைக்கப்பட்டிருப்பதாக மன்னார் மாவட்ட சட்ட மருத்துவ அதிகாரி கலாநிதி சமிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

இந்த புதைகுழியில் உள்ள கடைசி எலும்பு எச்சம் வரை அகழ்வு செய்வதற்கு நிதி போதாது என்றும் இதனால் இந்த விசாரணைகள் நிறுத்தப்படக் கூடிய அச்சம் காணப்படுகிறது என்று அவர் தெரிவித்துள்ளார்.

# கடலில் மீட்கப்பட்ட வெளிநாட்டவர் மூவரையும் நாடு கடத்த உத்தரவு

கொழும்பு, ஜூலை 22

இலங்கை கடற்பரப்பில் படகு விபத்துக்குள்ளான நிலையில், காப்பாற்றப்பட்ட 3 வெளிநாட்டவர்களையும் நாடு கடத்துமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

கடற்படையினரால் காப்பாற்றப்பட்டு விளக்கமறிய லில் வைக்கப்பட்ட சோமாலிய நாட்டவர்கள் மூவரை நாடு கடத்துமாறு காலி பிரதான நீதிவான் நேற்று முன்தினம் உத்தரவிட்டுள்ளார்.

இலங்கை கடலில் இருந்து 107 கடல் மைல் தூரத்தில் விபத்துக்குள்ளான நிலையில், இந்த மூவரையும் இலங்கை கடற்படையினர் காலி துறைமுகத்துக்கு அழைத்துச் சென்றிருந்தனர்.

இவர்கள் விபத்துக்குள்ளான படகு மற்றும் இயந்திரத்தை விடுவிக்குமாறு உத்தரவிட்ட நீதிவான், இந்த மூவரையும் நாட்டை விட்டு வெளியேற்றுமாறு உத்தரவிட்டுள்ளார்.

கடந்த 4 ஆம் திகதி இந்த மூவரும் காப்பாற்றப்பட்ட நிலையில், நேற்று முன்தினம் வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தமை குறிப் பிடத்தக்கது.

# இந்தியாவுக்கான தூதுவராக ஒஸ்ரின் பெர்னாண்டோ?



இந்தியாவுக்கான புதிய தூதுவர் பதவிக்கு ஒஸ்ரின் பெர்னாண்டோவின் பெயர், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் முன்மொழியப்பட்டுள்ளது.

அதேவேளை, பிரித்தானியாவுக்கான தூதுவர் பதவிக்கு என்.எம்.ஏ.குணசேகரவும், தென்னாபிரிக்காவுக்கான தூதுவர் பதவிக்கு அனுருத்தகுமார மல்லிகாராச்சியும் ஜனாதிபதியால் முன்மொழியப்பட்டுள்ளனர்.

இவர்களின் நியமனத்தை, உயர் பதவிகளுக்கான நாடாளுமன்ற குழு உறுதி செய்ய வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தியாவுக்கான இலங்கையின் தூதுவராகப் பணியாற்றும் சித்ராங்கனி வகீஸ்வராவுக்குப் பதிலாகவே, ஒஸ்ரின் பெர்னாண்டோ பெயரிடப்பட்டுள்ளார்.

ஜனாதிபதியின் செயலராக இருந்த ஒஸ்ரின் பெர்னாண்டோ அண்மையில் அந்தப் பணியில் இருந்து விலகியிருந்தார்.

இவரது முறைப்படியான நியமனம் எப்போது ஆரம்பிக்கும் என்பது தொடர்பாக எந்த தகவலும் வெளியாகவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# ‘றிவிர’ வார இதழ் இணை ஆசிரியரிடம் 4 மணி நேரத்துக்கும் மேல் விசாரணை!

‘றிவிர’ சிங்கள வாரஇதழின் இணை ஆசிரியரான திஸ்ஸ ரவீந்திர பெரேரா பயங்கரவாத தடுப்புப் பிரிவு பொலிஸாரால் நேற்றுமுன்தினம் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்.



கடந்த ஜூன் 24 ஆம் திகதி , றிவிர இதழில் வெளியிடப்பட்ட செய்தி தொடர்பாகவே நேற்று முன்தினம் திஸ்ஸ ரவீந்திர பெரேராவிடம் விசாரணை நடத்தப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டது.

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழேயே, அவரிடம், நேற்றுமுன்தினம் காலை 10 மணி தொடக்கம், 2.15 மணி வரை விசாரணைகள் நடத்தப்பட்டன.

ஒட்டுசுட்டானில்கடந்த ஜூன் 22 ஆம் திகதி, கைப்பற்றப்பட்ட கிளைமோர் உள்ளிட்ட வெடிபொருள்கள் தொடர்பாக தேசிய பாதுகாப்புச் சபையில் சமர்ப்பிக்கப்பட்ட புலனாய்வு அறிக்கை சம்பந்தமாக வெளியிடப்பட்ட செய்தி குறித்தே இந்த விசாரணைகள் நடத்தப்பட்டுள்ளன.

(க)

# வாழ்வாதாரத்திற்கு கிடைத்த பசுவை வெட்டி இறைச்சியை கொண்டு சென்ற கயவர்கள்!



கிளிநொச்சியில் ஒரு ஏழை பெண் தலைமைத்துவ குடும்பம் ஒன்றுக்கு வாழ்வாதார உதவியாக வழங்கப்பட்ட பசுமாட்டை இரவோடு இரவாக திருடிச் சென்று இறைச்சிக்காக வெட்டியுள்ளனர்.

கடந்த வியாழக்கிழமை இரவு ஜெயந்தி நகரில் அமைந்துள்ள அவரது தற்காலிக வீட்டு வளவில் கட்டியிருந்த பசுவைத் திருடிச் சென்று ஜெயந்திநகர் மீனாட்சிஅம்மன் கோவிலருகில் வைத்து வெட்டி இறைச்சியை எடுத்துக் கொண்டு எச்சங்களை விட்டுச்சென்றுள்ளனர்.

மூன்று மாவீரர்களின் சகோதரியும், காணாமல் ஆக்கப்பட்ட முன்னாள் போராளியின் மனைவியும் முன்னாள் போராளியுமான இரண்டு பிள்ளைகளின் தாயாரான பெண்ணுக்கு வழங்கப்பட்ட பசுவையே இவ்வாறு வெட்டியுள்ளனர்.

மிகவும் வறுமைக் கோட்டுக்குள் வாழ்ந்து வரும் இவருக்கு யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தொண்டு நிறுவனம் ஒன்று இப் பசுவை வாழ்வாதார உதவியாக வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(க-70)

# பாசாங்கு செய்கிறார் முதல்வர் குழப்பத்துக்கு அதுவே காரணம்

## சாடுகின்றார் சுமந்திரன் எம்.பி.

(எஸ்.நிதர்ஷன்)

வடக்கு மாகாண சபையில் தற்போது ஏற்பட்டுள்ள அமைச்சரவை தொடர்பான பிரச்சினைக்கு நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை அப்படியே அமுல் படுத்தினால் தீர்வு காண முடியும் எனத் தெரிவித்த தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் ஊடகப்பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன், முதலமைச்சர் விக்னேஸ்வரன் வேண்டுமென்றே விளங்க வில்லை என்பதுபோல பாசாங்கு செய்கின்றமைதான் குழப்ப நிலைக்குக் காரணம் எனவும் கூறினார்.

சாவகச்சேரியில் நேற்றுக் காலை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவரது செய்தியாளர் சந்திப்பின் கேள்வி – பதில் விவரம் வருமாறு:-

கேள்வி : யாழ்ப்பாணத்தில் அண்மைக் காலமாக வன்முறைச் சம்பவங்கள் அதிகரித்துள்ளன. இந்நிலையில் அண்மையில் சட்டம், ஒழுங்கு அமைச்சர், பொலிஸ்மா அதிபர் ஆகியோர் வந்து சென்ற பிறகும் அந்த நிலைமை நீடிக்கின்றதே ?

பதில்: இந்தச் சம்பவங்களைக் கட்டுப்படுத்த மாகாண சபைக்குச் சட்டஒழுங்கானது முறையாகப் பகிரப்படவேண்டும். அத்தோடு இந்தப் பிரதேசத்திலுள்ள பொலிஸார் இப் பிரதேசத்திற்குரிய மொழியைச் சொந்த மொழியாகக் கொண்டவர்களாக இருக்கவேண்டும். அவ்வாறு இல்லை என்றால் இந்தச் சம்பவங்களைக் கட்டுபடுத்துவது மிகக் கடினமானதாகும்.

ஆனால் அந்த நிலைமை ஏற்படும் வரை நாம் பாரத்துக் கொண்டிருக்க முடியாது. சட்டம் ஒழுங்கு அதிகாரத்தைக் கைகளில் வைத்திருக்கின்ற மத்திய அரசு விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டும். இது தொடர்பாக நாம் கடுமையான அழுத்தங்களைப் பிரயோகித்து வருகின்றோம். அதனாலேயே சட்டம், ஒழுங்கு அமைச்சர் யாழ். வந்தார். இவ் வன்முறைச் சம்பவங்களைக் கட்டுபடுத்துவது தொடர்பாக நாம் யாழ்ப்பாணத்திற்கு வந்துள்ள பிரதமருடனும் பேசவுள்ளோம்.

கேள்வி : வடக்கு மாகாண சபையின் அமைச்சரவை தொடர்பாக நீதிமன்றம் கட்டளையொன்றை வழங்கிய பின்னரும் தொடர்ந்தும் பிரச்சினை காணப்படுகின்றதே ?

பதில் : நீதிமன்றம் வழங்கிய கட்டளையில் எந்தப் பிரச்சினையும் இல்லை. அந்தக் கட்டளையை அப்படியே அமுல்படுத்தினால் சுமுகமாக மாகாண சபை ஆட்சியை நடத்தமுடியும். ஆனால் வடக்கு மாகாண முதலமைச்சர் அதனை வேண்டுமென்றே விளக்கமில்லை என்பதுபோல பாரங்கு செய்து அதனை அமுல்படுத்தாமையாலேயே தற்போது குழப்ப நிலை நீடிக்கின்றது.

கேள்வி : வடக்குமாகாணப் பெண் அமைச்சர் ஒருவர் கைத் துப்பாக்கி வைத்திருக்கிறார் என உறுப்பினர் அஸ்மின் கூறிய நிலையில் அது தொடர்பாகப் பெண் அமைச்சர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளாரே ?

பதில் : மாகாண சபையில் பேச்சுச் சுதந்திரம் இருப்பதாகச் சட்டத்தில் கூறப்படுகின்றது. இந்நிலையில் மாகாண சபையில் பேசப்படுகின்ற விடயங்கள் தொடர்பாக எவருக்கும் விமர்சிக்கவோ அல்லது விசாரிக்கவோ அதிகாரம் கிடையாது – என்றார். (ஐ-7)

### யுத்தத்தின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காட்டத்துடனும் விசனத்துடனும் தெரிவித்தார் வடக்கு முதலமைச்சர் நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரன்.

யாழ்ப்பாணம் வர்த்தக தொழில்துறை மன்றம் மற்றும் தேசிய வர்த்தக அபிவிருத்தி அதிகாரசபை ஆகியவற்றின் ஆதரவில் புதிய தொழில்முனைவோருக்கான கௌரவிப்பும் விருது வழங்கும் வைபவமும் நேற்று மாலை யாழ்ப்பாணம் செல்வா பலஸில் நடைபெற்ற போது அதில் கௌரவ விருந்தினர் உரையாற்றினார் முதல்வர். அப்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு:-

பிரதமரும் முக்கிய அமைச்சர்களும் கலந்துகொண்டிருக்கின்ற இத்தருணத்தில் வடமாகாணத்தின் தொழில் முயற்சிகள் பற்றிய சில முக்கிய விடயங்களை வெளிக்கொண்டு வருவது பொருத்தமானது என எண்ணுகின்றேன்.

வடமாகாணத்தைப் பொறுத்தவரையில் கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக தொடர்ச்சியான யுத்தம் நடைபெற்ற காலத்தில் கூட இப் பகுதியின் வர்த்தக நடவடிக்கைகள் மிகுந்த நெருக்கடிகளின் கீழும் ஓர் ஒழுங்கான முறையில் மேற்கொள்ளப்பட்டு வந்தன. அக்காலத்தில் அனைத்துத்தர வர்த்தக முயற்சிகளும் பல சிரமங்களுக்கு மத்தியிலும் சிறப்பாக நடைபெற்றமையை இத்தருணத்தில் பெருமையுடன் அறியத்தருவதில் மகிழ்வடைகின்றேன். அத்துடன் அக் காலத்தில் பெரிய, நடுத்தர, சிறிய வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்ட வர்த்தகர்களினதும் மேலும் அனைத்துத்தர பொது மக்களினதும் கைகளில் பணப்புழக்கம் போதுமானதாக இருந்தது.

ஆனால் யுத்தநிலை முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட பின்னர் அமைதியான சூழ்நிலையில் கடந்த 9 வருடங்களில் வடபகுதியின் வர்த்தக நடவடிக்கைகள் என்ன வகையில் வளர்ச்சியடைந்திருக்கின்றது என்பது பற்றி ஆராய்வோமானால் விடை வெறும் பூச்சியமாகவே காணப்படுகின்றது. தொடர்ச்சியாக வடபகுதியின் வர்த்தக நடவடிக்கைகள் பல பின்னடைவுகளை சந்தித்த வண்ணமே உள்ளன.

எமது உள்ளூர் வர்த்தகர்களின் வர்த்தக முயற்சிகள் பல்வேறு இரகசியக் காரணிகள் மூலம் முடக்கப்படுகின்றன. இதை நான் வர்த்தகர்களுடன் பேசித் தெரிந்து கொண்டே வெளியிடுகின்றேன்.

முதலாவது இங்கிருக்கும் வர்த்தகர்களின் வர்த்தக நடவடிக்கைகள் சிறப்பாக நடைபெறமுடியாத வகையில் வடமாகாணத்திற்கு வெளியே உள்ள வர்த்தகர்களின் பாரியளவிலான உள்நுழைவுகள் வர்த்தக நடவடிக்கைகளை பாதிப்புக்களை ஏற்படுத்தியுள்ளன. இராணுவம் கூட உணவகத் தொழிலில் ஈடுபட்டு வருகின்றது.

யுத்தத்திற்குப் பின்னர் எமது புலம் பெயர்ந்த மக்கள் இங்கு வந்து நம்பிக்கையுடன் முதலீடுகளைச் செய்ய ஏற்ற சூழல் இங்கு உருவாக்கப்படவில்லை. தெற்கில் இருந்து வந்து முதலீடுகள் நடைபெற வேண்டும் என்பதே அரசாங்கத்தின் குறிக்கோளாக இருக்கின்றது. வடக்கு கிழக்கு மாகாணங்களை பொருளாதார ரீதியில் தம்மை மிஞ்சி மேம்படவிடக்கூடாது என்ற எண்ணம் தெற்கில் உள்ளதோ நான் அறியேன். முதலமைச்சர் நிதியம் இன்று வரை முடக்கப்பட்டிருப்பதும் இந்த வாறு சிந்திக்கத் தூண்டுகின்றது.

அடுத்து வடமாகாண வர்த்தக நடவடிக்கைகள் தொடர்பான விடயங்களை கையாள்வதற்கும் பிற விடயங்களை கவனிப்பதற்குமாக வடமாகாண அமைச்சு அமைக்கப்பட்டுள்ள போதும் எம் அமைச்சின் அதிகாரங்களை மீறி மத்திய அரசின் அனுமதியுடன் வடபகுதியில் பல வர்த்தக முயற்சிகள் பாரிய அளவில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இவை வடமாகாணத்தில் பலகாலமாக வர்த்தக முயற்சிகளில் ஈடுபட்டு வந்த பெரிய, நடுத்தர, சிறிய அளவிலான அனைத்து வர்த்தகர்களையும் பாதிப்புக்குள்ளாக்கியிருப்பது கவலையளிக்கின்றது. போரின் பின்னர் விசேடமான கவனிப்புக்கு உள்ளாக்கப்பட வேண்டிய வடகிழக்கு மாகாணங்கள் தெற்கின் ஆக்கிரமிப்புக்கே உள்ளாக்கப்பட்டுள்ளன.

யுத்தத்தின் பின்னரான காலப் பகுதியில் இங்கு ஆரம்பிக்கப்பட்ட பல நுண்கடன் நிதி நிறுவனங்களின் பசப்பு வார்த்தைகளில் ஏமாந்து அவர்களின் இயல்புக்கு மேற்பட்ட வகையில் பாரிய கடன் தொகைகளை கடனாகப் பெற்று அவற்றை மீளச் செலுத்த முடியாமலும் அவற்றின் அதிகரித்த வட்டித் தொகைகளைக் கட்ட முடியாத நிலையிலும் தமது சொத்துக்கள் அனைத்தையும் இழந்து கடுமையான மன விரக்திக்குட்பட்ட பல வர்த்தகர்களின் செய்திகள் பற்றி நாம் அறிந்திருக்கின்றோம்.

ஏனைய பகுதிகளில் இருந்து வருகை தந்து இப் பகுதிகளில் வர்த்தகங்களில் ஈடுபடுபவர்கள் பற்றி எமக்கு ஆட்சேபனை இல்லாதபோதும் அவர்களின் வர்த்தக நடவடிக்கைகள் இங்குள்ள ஒட்டுமொத்த வர்த்தகர்களின் வர்த்தக நடவடிக்கைகளுக்குப் பாதிப்பு ஏற்படுத்தாத வகையில் அமையுமாயின் அவ்வாறான வர்த்தகங்கள் வரவேற்கக்கூடியன. தற்போதைய நிலையில் இப்பகுதிகளில் உள்ள வர்த்தக மூல வளங்கள் மற்றும் மனித வளங்கள் அனைத்தும் பிற தேவைகளுக்காக அதுவும் வடபகுதிக்கு வெளியேயான பகுதிகளின் முன்னேற்றகரமான நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படுவது இப் பகுதியின் வளர்ச்சியை பின்னோக்கித் தள்ளுவதான ஒரு நடவடிக்கையாகவே நாம் பார்க்கின்றோம்.

அண்மையில் கொக்கிளாய், கருவாட்டுக்கேணி போன்ற இடங்களில் இல்மினைட் அகழ்வுகள் நடாத்துவது பற்றி எமக்குக் கூறப்பட்டது. புல்மோடை இணைந்த வடகிழக்கு மாகாணத்தின் கீழ் உள்ளடங்கியிருந்தது அதுவேறு விடயம். இப்போது வடக்கு மாகாணத்தில் இருந்து வளங்களை வெளியே எடுத்துச் செல்ல எத்தனிக்கின்றீர்கள் என்று நான் கூறவும் எமது பிரதேசத்திற்கு இதற்கான ஓர் ஆலையைப் பெற்றுத் தருவதாகவும் இங்குள்ளவர்களை அதில் வேலை செய்ய இடமளிக்கப் போவதாகவும் கூறப்பட்டது. நான் இன்னொரு வேண்டுதலை முன்வைத்தேன். ஒரு மாகாணத்தின் வளங்களின் வருமானத்தின் பெரும் பகுதி திரும்பவும் அதே மாகாணத்திற்குக் கொண்டுவர வேண்டும் என்றேன். அந்த வருமானங்கள் மத்திக்குக் கிடைக்கும் என்றும் மத்தி எல்லோருக்கும் பொதுவாக அவற்றைப் பாவிக்கும் என்று கூறப்பட்டது. போரினால் பாதிக்கப்பட்ட எமது பிரதேசம் கூடிய வருமானங்களைப் பெற வேண்டியிருக்கும் இந்த நேரத்தில் வளங்களை மத்திய அரசாங்கம் தான் எடுக்கப் பார்ப்பதால் தான் நாங்கள் சமஷ்டி கேட்கின்றோம் என்றேன். ஆகவே அதிகாரப் பகிர்வு பற்றிக் கூறிக்கொண்டு மாகாணங்களை சுயமாக இயங்க விடாது மத்தி தனது கட்டுப்பாட்டினுள் வைத்திருக்கப் பார்ப்பது நியாயமான ஒரு விடயம் அல்ல.

எனவே தான் வடபகுதியின் உள்ளூர் வர்த்தக நடவடிக்கைகள் சிறப்பாக நடைபெற இடமளிக்க வேண்டும் என்று அபிப்பிராயப்படுகின்றேன். எமது பகுதிகளில் அமைந்துள்ள நட்சத்திர ஹோட்டேல்கள், பல்பொருள் அங்காடிகள், பாரிய உணவுக் களஞ்சியங்கள் ஆகியவற்றின் செயற்பாடுகள் இப்பகுதியின் வர்த்தக நடவடிக்கைகளுக்கு அமைவாகவே முன்னெடுக்கப்பட வேண்டும். இவ்வாறு எமது நோக்கங்களையுந் தேவைகளையும் அறிந்து செயற்பட்டால் எமது வர்த்தகர்களும் நன்மையடைவார்கள். அதே நேரம் பிற பகுதிகளில் இருந்து இங்கு வருகைதந்து பாரிய வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களும் நன்மை அடைவார்கள்.

எமது பிரதேசங்களில் காணப்படும் மூல வளங்கள் முழுமையாக வடபகுதிக்கு வெளியில் எடுத்துச் செல்லப்படுவது தொடர்பில் கட்டுப்பாடுகளை ஏற்படுத்த வேண்டிய நிலை இன்று அவதானிக்கப்பட்டுள்ளது. தெங்குப் பொருட்கள், கடல் வளங்கள் மற்றும் இன்னோரன்ன அத்தியாவசிய உணவுப் பொருள்கள் வகைதொகையின்றி இப் பகுதிகளில் இருந்து வெளியில் எடுத்துச் செல்லப்படுகின்றன. விளைவு இப் பகுதியில் உள்ள மக்களுக்கு இந்த உணவுப் பொருள்களுக்கு பாரிய தட்டுப்பாடுகள் ஏற்படுவதுடன் அவற்றை நாம் பெற அதிக கூடிய பணச் செலவுகளும் ஏற்படுகின்றன. வளங்களின் வருமானம் பிறதேச வளம்படுத்துகின்றது. இதை முன்வைத்தே ஒன்பது மாகாணங்களும் சுயாட்சி உரிமை பெற வேண்டும் என்ற கருத்தை முன்வைத்தேன்.

எனவே இவற்றையெல்லாம் கவனத்தில் கொண்டே வர்த்தக முயற்சிகள் முன்னெடுக்கப்பட வேண்டும். அத்துடன் இப்பகுதியில் மேற்கொள்ளப்பட இருக்கின்ற வர்த்தக அபிவிருத்திகள் தொடர்பில் வடமாகாண சபையின் ஒத்திசைவுகளையும் பெற்றுக்கொண்டு முன்னெறிச்செல்வதே சிறப்பானது. – என்றார்.

# இராணுவம் நடத்தும் ஹோட்டல்கள் விவரம் வெளியிடுமாறு உத்தரவு

"வடக்கு, கிழக்கில் இராணுவம் நடத்தும் கன்ரீன்கள் மற்றும் ஹோட்டல்கள் பற்றிய விவரங்களை தகவல் அறியும் சட்டத்தின் கீழ் கோரினால் அவற்றை இராணுவம் கட்டாயம் வழங்கியேயாக வேண்டும்."

– இவ்வாறு தகவல் அறியும் ஆணைக்குழு இராணுவத் தரப்பைப் பணித்திருக்கின்றது.

மேற்படி விடயங்களை கோரிய ஒரு பிரஜைக்கு அது பற்றிய விடயங்களை வழங்குவதற்கு இராணுவம் மறுத்தமையை அடுத்து, அது குறித்து தகவல் அறியும் ஆணைக்குழுவுக்கு முறைப்பாடு செய்யப்பட்டது. அது தொடர்பில் ஆணைக்குழு இராணுவத் தரப்புடன் தொடர்பு கொண்டு விசாரித்தது.

மேற்படி 'கன்ரீன்', 'ஹோட்டல்' போன்றவை பொது நிதியில் நடத்தப்படுபவை அல்ல என்றும்–

இராணுவத்தினரின் நலனோம்பு நிதி மூலம் அவை நடத்தப்படுகின்றமையால் அவை பற்றிய தகவல்களை வெளியிடத் தேவை இல்லை என்றும் –

இராணுவத் தரப்பில் முன்வைக்கப்பட்ட வாதத்தை ஆணைக்குழு நிராகரித்தது. விண்ணப்பதாரிக்கு அந்த தகவல்களை இராணுவம் வழங்க வேண்டும் என ஆணைக்குழு உத்தரவிட்டுள்ளது. (உ)

### இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிந்ததுதான்.

இது குறித்து அமைச்சர் அனந்தி சசிதரன் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறையீடு செய்திருக்கின்றார் என்றும் –

அது பற்றி விசாரிப்பதற்காக அஸ்மினுக்கு சாவகச்சேரிப் பொலிஸார் அழைப்பு விடுத்திருக்கின்றார் என்றும் கூட செய்திகள் வெளியாகியிருக்கின்றன.

வடக்கு மாகாண சபைப் பேரவைச்செயலகம் கைதடியில் உள்ளது. அது சாவகச்சேரி பொலிஸ் நிலைய நிர்வாகத்துக்குரிய பிரதேசம் போலும். அதனால் தான் கைதடியில் உள்ள பேரவைச் செயலகக் கட்டடத்தில் நடைபெற்ற வடக்கு மாகாண சபைக் கூட்டத்தில் அஸ்மின் ஆற்றிய உரைக்குஎதிரானதனதுபொலிஸ் முறைப்பாட்டை சாவகச்சேரி பொலிஸ் நிலையத்துக்குச் சென்று செய்திருக்கின்றார் அமைச்சர் அனந்தி சசிதரன்.

ஆனால், இதில் ஒரு விடயம், அமைச்சராக இருக்கும் அனந்தி சசிதரனுக்கு தெரியாமல் – புரியாமல் – இருக்கின்றது என்பது ஆச்சரியத்துக்குரியதாக உள்ளது.

நாடாளுமன்ற சிறப்புரிமை போன்று மாகாணசபை சிறப்புரிமைகள் அதன் உறுப்பினர்களுக்கு உண்டு.

எவ்வாறு நாடாளுமன்றத்தில் பேசப்படும் விடயங்களுக்காக, அதை ஆட்சேபித்து நீதிமன்றத்துக்கோ, பொலிஸ் நிலையத்துக்கோ, பிற வழக்குகளுக்கோ போக முடியாதோ –

அதேபோன்றபாதுகாப்புரிமையும் சிறப்புரிமையும் மாகாண சபையில் பேசும் அதன் உறுப்பினருக்கும் உண்டு.

மாகாணசபையின் கூட்டத்தில் அஸ்மின் பேசிய விடயத்துக்காக பொலிஸார் விசாரணை நடத்த முடியாது. அது சட்டத்தில் தெளிவாக உள்ளது. இது தெரியாமல் அமைச்சர் அனந்தி சசிதரன் பொலிஸுக்குச் சென்றார் என்பதுஆச்சரியத்தைதருகின்றது.

இதற்கிடையில், அஸ்மினின் இந்தப்பேச்சுத் தொடர்பில் சபையில் சிறப்புரிமைப் பிரச்சினை கிளப்புவதற்கு அனுமதி கேட்டு அமைச்சர் அனந்தி சசிதரன், மாகாண அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானத்துக்குக் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார் என்றும், ஆனால் அந்த் கோரிக்கையை அவை யோடு நிராகரித்துவிட்ட அவைத்தலைவர், வேண்டுமானால் இவ்விடயத்தை ஒட்டி அமைச்சர் அனந்தி சசிதரன் சபையில் தன்னிலை விளக்கம் அளிப்பதற்கு அனுமதிக்கப்படும் என்று கூறியிருக்கிறார் என அறிய வந்தது.

'பிஸ்டல்' வெடிக்கின்றதோ இல்லையோ, பிஸ்டல் விவகாரக் குற்றச்சாட்டால் சபையில் அரசியல் அதிர்வேட்டுகள் தொடர்ந்து ஒலிக்கும் என்பது மட்டும் நிச்சயம்.

- மின்னல் -

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## ஆடிக் கலவர அழியா நினைவுகள்

**இலங்கையின் பௌத்த – சிங்கள – கொடுங்கோன்மை வாதம் தனது பேரினவாதத் திமிரைத் தமிழர் தேசத்தின் மீதும் அதன் மக்கள் மீதும் மிக மோசமாகக் கட்டவிழ்த்து விட்ட கொடூரத்தின் 35 ஆவது ஆண்டு நினைவுகள் இப்போது.**

**ஓர் இனத்தின் ஆன்மாவையே அழிக்கும் எண்ணத் துடன் அச்சாரமாகக் கட்டவிழ்ந்த இன வன்முறையின் மோசமான ஆரம்பப் புள்ளி இந்த ஆடிக் கலவரம்.**

**பேரினவாதக் கொடூரத்தின் கோரத் தாண்டவத்தையும் ஊழிக் கூத்தாக ஆடிக் கலவரம் அரங்கேறிப் புரிந்த கொடுங் களையும் தாங்க முடியாது ஈழத் தமிழினம் துவண்டு சரிந்து போன வரலாற்றுச் சுவட்டின் ஞாபகத் தினங்கள் இவை.**

**கடந்து செல்பவை கறுப்பு ஜுலையின் நினைவழியா நாள்கள்.**

**இலங்கைத் தீவின் வடக்கிலும், கிழக்கிலும் – தமது பாரம்பரிய தாயகப் பூமியில் – நீதியான வாழ்வு வேண்டி, நியாயமான உரிமைகள் கேட்டு, கௌரவமான வாழ்வியல் முறையை நாடி, பிறப்புரித்தான சுதந்திரம் கோரி, மன்றாடி நின்ற தமிழர்கள் மீது தென்னிலங்கைச் சிங்களம் ஆயுத முனையில் கோரக் காடைத்தனத்தை ஏவிவிட்டதன் 35 ஆவது ஆண்டு நிறைவிலே நாம் நிற்கின்றோம்.**

**ஆயுதம் தரித்த இரண்டு தரப்புகளுக்கு இடையிலான மோதலில் – இலங்கையின் சட்ட ரீதியான ஆயுதப் படைக ளுக்கும், தமிழர்களின் சுதந்திரப் போராளிகளுக்கும் இடையில் நடந்த மோதலில் – தனக்கு ஏற்பட்ட பின்னடைவை யும், தோல்வியையும், அதனால் நேர்ந்த அவமானத்தை யும், எண்ணிக்கையில் சிறுபான்மையினரான அப்பாவித் தமிழர்கள் மீது – எண்ணிக்கையில் பெரும்பான்மையின ரான பௌத்த, சிங்கள பேரினவாதிகள் இனக் கலவரமா கத் திருப்பி விட்ட சரித்திரத் தவறை நினைவூட்டும் வேளை இது.**

**யாழ். திருநெல்வேலியில் விடுதலைப் புலிகளின் இம்மி யளவும் பிசகாத அதிரடித் தாக்குதலில் பலியான பதின் மூன்று இராணுவத்தினருக்காக, இலங்கைத் தீவு முழுவ தும் பரந்து வாழ்ந்த தமிழர்கள் மீது – அப்பாவித் தமிழர்கள் மீது – மிகக் குரூரமான, மிகக் கொடூரமான, மிக மோச மான வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டன.**

**தமிழர்களை கண்ட இடத்தில் படுகொலை செய்வதும், அவர்களின் சொத்துக்களை சூறையாடுவதும், தீயிட்டு எரிப்பதுமாக அந்த இரத்தப் பிரளயம் நாள்கள் கடந்து, வாரங்கள் சென்றும் தொடர்ந்தது. வன்முறை கோரம் அலை அலையாக ஆங்காங்கே நீடித்தது.**

**இந்த ஆடிக் கலவரக் கொடூரத்தில் சுமார் மூவாயிரம் அப்பாவித் தமிழர்கள் குரூரமான முறையில் படுகொலை செய்யப்பட்டார்கள். பல நூறு தமிழர்கள் சிங்களக் காடையர் களால் கண்ட துண்டமாக வெட்டிச் சாய்க்கப்பட்டார்கள். பல தமிழ்க் குடும்பங்கள் சொத்துக்களோடு சேர்த்து எரிக் கப்பட்டன. தமிழருக்குச் சொந்தமான பல்லாயிரம் வீடுகள், கடைகள், வர்த்தக நிலையங்கள், தொழிற்சாலைகள், கைத்தொழில் நிலையங்கள், எரிபொருள் மையங்கள் அந்த ஊழித் தீயின் கோரத் தாண்டவத்தில் சாம்பலாக்கப் பட்டன.**

**அதேசமயம், வெலிக்கடைச் சிறையில் கைதிகளாக வைக்கப்பட்டிருந்த ஈழத் தமிழர்களின் ஒப்பற்ற போராளிக ளும், தமிழர்களின் ஆயுதப் போராட்ட வரலாற்றன் பிதாம கர்கள் எனப் போற்றப்படுபவர்களுமான தங்கதுரை, குட்டி மணி, ஜெகன் போன்றோர் உட்பட 54 தமிழ்க் கைதிகள் சிறை அதிகாரிகளினாலும், சிங்களக் கைதிகளினாலும் சிறைக் கூண்டுக்குள் வெட்டி, கண்கள், முகங்கள் கொடூர மாகக் குத்திப் பிடுங்கிக் குதறிப் படுகொலை செய்யப்பட்டனர்.**

**இந்த 1983 கறுப்பு ஜுலைக் கலவரம் கண்மூடித்தன மாக நடந்த ஒன்றல்ல. எதேச்சையாக அரங்கேறிய ஒன் றுமல்ல. தாக்குதல் நடத்தியோர் தறிகெட்டு – எல்லை மீறி – வன்முறை புரிந்த கும்பலும் அல்லர். இவை எல்லாவற்றை யும் தாண்டி, 'கலவரம்' என்ற பெயரில் நன்கு திட்டமிடப்பட்டு, நெறிப்படுத்தப்பட்டு, கட்டவிழத்துவிடப்பட்ட வன்முறை இது. அப்போதைய அரச தரப்பினது அரூபக் கரங்களின் அச்சொட் டான வழிகாட்டல்படி அரங்கேறிய அராஜகம் இது என்பது அவதானிகளினால் ஆதாரத்துடன் கண்டறியப்பட்டுள்ளது.**

**ஈழத் தமிழர்களின் தேசிய ஆன்மாவில் ஆழமான அதிர் வுகளையும் வடுக்களையும் ஏற்படுத்திய பெரும் துன்பியல் அத்தியாயமாக முடிவுற்ற ஆடிக் கலவரம், காருண்ய மகான் புத்தரின் போதனைகளைப் பேசும் புண்ணிய பூமியில், மனி தத்துவமற்ற, மிருகத்தனமான கொடுமைகள் சர்வசாதார ணம் என்ற உண்மையை உலகுக்குப் பறை சாற்றி – உணர்த்தி – நிற்கின்றது என்றால் அது மிகையாகாது.**

## வடக்கின் கல்வி நிலை அதலபாதாளத்திற்குச் செல்ல ஆளுமையற்ற மாகாணசபையின் செயற்பாடுகளே காரணம்

### ஈ.பி.டி.பியின் யாழ். மாவட்ட உதவி நிர்வாக செயலாளர் கூறுகிறார்

வடக்கில் கல்வி நிலை படு மோசமாகசெல்வதற்கு மாகா ணசபையின் ஆளுமையற்ற செயற்பாடுகளே காரணமாக உள்ளது.

தமது ஆற்றலற்ற செயற் பாடுகளை சீர்திருத்தாது மற்ற வர்கள் மீது பழியைச் சுமத்தித் பித்துக்கொள்ள நினைப்பது வெட் கப்பட வேண்டியவிடயம் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ் மாவட்ட உதவி நிர்வாக செய லாளர் சிவகுருபாலகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் அமைந் துள்ள கட்சியின்தலைமை அலு வலகத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ் வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் –

வடக்கு மாகாணத்தின் கல்வி நிலை இன்று அதல பாதா ளத்துக்குச் சென்றுவிட்டது. கல் வித் தரத்தை உயர்த்துவதாகக் கூறிபாடசாலையின் நேரத்தை காலை 7.30 மணிக்குமாற்றி யதால் கல்வித் தரம் ஒரு போதும் உயரப்போவதில்லை.

ஆரம்ப பிரிவு மாணவர்கள் இந்தநிலைப்பாட்டால்அதிகாலை வேளையிலேயே எழும்பி அரை குறைஉணவுகளை உண்டு பாட சாலைக்குசெல்கின்றமையால் அவர்களுக்கு பாடத்தில் அக் கறை செலுத்துவது குறைவா கவே இருக்கும். அத்துடன் முறை யாக உணவு உட்கொள்ளாமை யால் நோய்வாய்ப்படும் நிலை யும் ஏற்படுகின்றது.

இதைவிட இன்று மாணவர் களின் பெற்றோர்இருவரும் தொழில் ரீதியான செயற்பாடுக ளில்இருக்கின்றனர். இவ்வாறு காலை 7.30 மணிக்குபாடசாலை ஆரம்பிப்பதனால் பெற்றோ ரும்அதிகளவில் பாதிக்கப்படுகின் றனர். இவ்வாறு அனைத்து தரப்பினரும்பாதிக்கப்படும்வகை யிலான இந்த நடைமுறையால் எப்படி மாணவர்களின் கல்வித் தரத்தை உயர்த்தமுடியும்?

மாறாக மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளை ஊக்கு விக்கும் வகையிலான திட்டங் களைஏற்படுத்திக் கொடுக்காது அத்துறை சார்ந்த நவீன வசதி களையும் ஏற்படுத்திக் கொடுக் காது தமது சுயநலங்களை மையமாகக் கொண்டு செயற் படுவதனால் வடக்கின் கல்வி நிலை எப்படி உயர்வடையும்?

நாம் ஆட்சி அதிகாரங்களில் இருந்தகாலப்பகுதியில் அதுவும் யுத்தம் நடைபெற்றுக் கொண்டி ருந்த காலப்பகுதியில் கூட எமது மாகாணத்தின் கல்வித் தரம் வீழ்ச்சி காணவில்லை. அவ் வாறு செல்லும் வகையிலும் நாம் சந்தர்ப்பங்களை கொடுக் கவும் இல்லை.

எனவே ஆற்றலும் அக்கறை யும் உள்ளவர்களது கைக ளுக்கு அதிகாரங்கள் வரும் போது தமிழ் மக்கள் எதிர் கொள்ளும் அனைத்து பிரச்சி னைகளும்வென்றெடுக்கப்படும். அதுவரை இவ்வாறான போலித் தனமான அரசியல் செயற் பாடுகளே நடைபெறும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## 9 கோடி ரூபாவில் முல்லையில் அமைக்கப்படவுள்ள புதிய பஸ் நிலையத்துக்கு நேற்று அடிக்கல் நடுகை

முல்லைத்தீவு நகரில் 9 கோடி ரூபாவில் அமைக்கப்படவுள்ள புதிய பஸ் நிலை யத்துக்கு நிதி மற் றும் வெகுசன ஊடக அமைச்சர் மங்கள சமரவீரவால் மற்றும் பல அரசியல் பிரமுகர்களால் நேற்றுக் காலை அடிக்கல் நட்டு வைக்கப் பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் மங் கள சமரவீர மற்றும் நிதி ராஜாங்க அமைச்சர் ஏரான் விக்கிரமரத்ன, வணிக கைத்தொழில் அமைச்சர் ரிஷாத் பதியுதீன், மீள்குடி யேற்ற பிரதி அமைச்சர் காதர் மஸ்தான், வடமாகாண விவசாய அமைச்சர் க.சிவநேசன், வடமா காண பிரதி அவைத்தலைவர் வ. கமலேஸ் வரன், வடமாகாண சபை உறுப் பினர் ஆ புவனேஸ்வரன், கரை துறைப்பற்று, மாந்தை கிழக்கு பிரதேச சபை தலைவர்கள் உள் ளிட்ட பல்வேறு அரசியல் தலை வர்கள், முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் உள்ளிட்ட அரச அதிகாரிகள், பொதுமக்களென பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது முல்லைத்தீவு மாவட்டத்தில் கம்பெரலிய விசேட வேலைத் திட்டத்தின் கீழ் முல் லைத்தீவு மாவட்டத்தின் 6 பிரதேச செயலக பிரிவுகளிலும் தலா 20 கோடி ரூபா பெறுமதியில் முன் னெடுக்கப்படவுள்ள வேலைத்திட் டங்களுக்கான அனுமதிகளும் பிரதேச செயலாளர்களிடம் கையளிக்கப்பட்டமை குறிப்பிடத் தக்கது. (க- 81)

### முள்ளிவாய்க்கால் கிழக்குக் கடலில்

## கைவிடப்பட்டுள்ள கப்பலில் மோதி விபத்துக்குள்ளானது மீனவரின் படகு



முள்ளிவாய்க்கால் கிழக்கு கட லில் சிறு தொழிலில் ஈடுபட்ட மீன வார் படகு ஒன்று ஜோர்தான் நாட்டு கப்பலில் மோதி விபத்துக் குள்ளாகியுள்ளது.

ஆழ்கடலில் நேற்று முன்தி னம் இரவு வீசப்பட்ட பெறுமதி யான மீன்பிடி வலை ஒன்று கட லில் ஏற்பட்ட நீரோட்ட மாற்றத் தின் காரணத்தால் கரை ஒதுங்கி யுள்ளது.

இதன்போது முள்ளிவாய்க் கால் கடலில் காணப்படும் ஜோர் தான் நாட்டு கப்பலின் அடித்தளத் தில் இந்த வலை சிக்கியுள்ளது.

இந்த நிலையில் வலையை மீட்பதற்காக தெப்பப்படகில் சென்ற மீனவர்களே இந்த விபத்தில் சிக்கியுள்ள னர்.

எனினும் எவ்வித பாதிப்பும் இல்லாமல் மீனவர்கள் கரை ஏறி யுள்ளனர் எனத் தெரி விக்கப்படுகிறது.

2006ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 29 ஆம் திகதி ஜோர்தான் நாட்டுக்கு சொந்தமான பரா 3 கப்பல் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டு கடற்பரப்பில் இயந் திரக் கோளாறு காரணமாக நிறுத் தப்பட்டிருந்தது.

பின்னர் இந்தக் கப்பல் 2009 ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆம் திகதி முள்ளிவாய்க்கால் இறுதி யுத்தத்தின் போது இலங்கைப் படையினரால் கைப்பற்றப்பட்டது.

இந்த நிலையில் இந்தக் கப் பலின் மேற்பாகங்களை இரா ணுவத்தினரும் கடற்படையின ரும் இணைந்து அகற்றியுள்ள னர் என தெரிவிக்கப்படுகின்றது.

எனினும் அதன் அடித்தளம் தற்பொழுது வரை அந்த இடத் தில் காணப்படுகின்றமை குறிப் பிடத்தக்கது. (க-81)

### இலங்கை வங்கியில் கொள்ளை போன

## தலாவ பகுதி வாடிக்கையாளருக்கு இழப்பீடு வழங்குவதற்கு நடவடிக்கை

அனுராதபுர தலாவ பிரதேச இலங்கை வங்கி கிளையில் இடம்பெற்ற கொள்ளைச் சம்ப வத்தால் பாதிக்கப்பட்ட வாடிக்கை யாளர்களுக்கு இழப்பீடு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது.

அனுராதபுரம் மாவட்டத்தி லுள்ள தலாவ பிரதேச இலங்கை வங்கி கிளையில் இருந்து ஒன்பது கோடி ரூபா பெறுமதியான ரொக்கப்பண மும், தங்க ஆபரணங்களும் சமீபத்தில் கொள்ளையிடப் பட்டன.

இதனால் பாதிக்கப்பட்ட வாடிக்கையாளர்களுக்கு இழப் பீடு வழங்க நடவடிக்கை எடுக் கப்பட்டுள்ளது.

சந்தையில் நிலவும் பவுண் பெறுமதிக்கு அமைய இழப்பீடு வழங்கப்படும். களவு போன ஆபரணங்களுக்கு பதிலாக அவற்றை போன்ற ஆபரணங் களைச் செய்து தருமாறு சில வாடிக்கையாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளார்கள்.

இந்த கோரிக்கை தொடர்பில் வங்கி முகாமைத்துவம் தலை மையகத்திற்கு அறிவித்துள்ளது.

### நாளை

23.07.2018
திங்கட்கிழமை
நட்சத்திரம் : அனுஷம் பி.ப.4.30 வரை
திதி : ஏகாதசி மு.இ.7.33 வரை
சுபநேரம் : 12.02 – 1.32 வரை
இராகுகாலம் : 7.32 – 9.02 வரை

# சாகச சுற்றுலாக் கைத்தொழிலை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை!

இலங்கையில் முன்னேற்றமடைந்து வரும் சாகச சுற்றுலாக் கைத்தொழில் துறையை அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் கொள்கை அபிவிருத்தி அலுவலகம் நேற்று முன்தினம் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு –

இலங்கை சுற்றுலாத் துறையை அபிவிருத்தி செய்யும் தேசிய திட்டத்தின் ஒரு பகுதியாக, இலங்கையில் முன்னேற்றமடைந்து வரும் துறையாக, சாகச சுற்றுலாக் கைத்தொழில் துறையை தரநிலைப்படுத்தல் மற்றும் அபிவிருத்தி செய்வதற்கு தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சும் பிரதம அமைச்சர் அலுவலகத்தின் கொள்கை அபிவிருத்தி அலுவலகமும் (PDO) ஒத்துழைப்பு வழங்கி வருகின்றன.



இந்த வேலைத்திட்டத்தின் கீழ் சுற்றுலாத்துறைப் பங்குதாரர்களின் உதவியுடன் தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகார சபை (NAITA), மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழு (TVEC), இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவனம் (SLITHM) என்பவற்றினால் கீழுள்ள துணிவுமிகு தொழில்களுக்கெனத் தேசிய தகுதி தர நிலைச் சான்று (NCS) மற்றும் தேசிய பாடத்திட்டங்கள் (NVQ Level4) தயாரிக்கப்பட்டுள்ளன.

1. துடுப்புப் படகு இயக்குபவர்
2. தனிப்பட்ட படகு இயக்குபவர்
3. மலையேற்றம்/நடைபயண வழிகாட்டி (Trekking/ Hiking Guide)
4. தரைக் கட்டுப்பாட்டு முகவர் (Ground Control Agent)
5. பாரசூட் பராமரிப்பாளர் (Parachute Rigger)

இந்தப் புதிய பாடத்திட்டங்களின் கீழ் முதலாவது குழுவினராக மலையேற்றம்/நடைபயண வழிகாட்டி மற்றும் பாரசூட் பராமரிப்பாளர்களுக்கான கல்வி நடவடிக்கைகள் 2018 ஜூலை மாத இறுதியி;ல் இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவனத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளன. அதேபோன்று பிரதமர் அலுவலகத்தின் கொள்கை அபிவிருத்தி அலுவலகம் இந்த விடயம் தொடர்பாக ஆர்வங்காட்டும் அனைத்துத் தரப்பினரையும் இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவனத்தில் பதிவு செய்யுமாறு வேண்டிக்கொள்கிறது.

அதேபோன்று பிரதமர் அலுவலகத்தின் கொள்கை அபிவிருத்தி அலுவலகத்தினால் இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவனத்துடன் சாகச சுற்றுலாக் கைத்தொழில் பங்குதாரர்களின் முழுமையான பங்கேற்புடன் ஆலோசனைக் குழுவொன்றை உருவாக்குவதற்கு பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டதுடன், சாகச சுற்றுலாக் கைத்தொழில் துறையைக் கண்காணித்தல், தர நிலைப்படுத்தல், விரிவுபடுத்தல் மற்றும் சாகச சுற்றுலாக் கைத்தொழில் பங்குதாரர்களின் திறன்கள் மற்றும் அறிவை விருத்தி செய்ய நடவடிக்கை மேற்கொள்வது அதன் நோக்கமாகக் காணப்படுகிறது என்று குறிப்பிட்டப்பட்டுள்ளது.

## முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸவின் வீடமைப்பு திட்டங்களின் 40 ஆவது ஆண்டு நிறைவு

கொழும்பு, ஜூலை 22

முன்னாள் ஜனாதிபதி அமரர் ரணசிங்க பிரேமதாஸவின் வீடமைப்புதிட்டங்களின் 40 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நேற்று தொடக்கம் நாட்டின் பல பாகங்களிலும் 40 கிராமோதய கிராமங்கள் நிர்மாணிக்கப்படவுள்ளன.

இந்தக் கிராமங்கள் அடுத்தாண்டு ஜூலை 21 ஆம் திகதி மக்கள் பாவனைக்காக ஒப்படைக்கப்படும். இன்று நாட்டின் பல பாகங்களிலும் 40 புதிய கிராமங்களை அமைப்பதற்கு வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.



அமைச்சர் சஜித் பிரேமதாஸவின் ஆலோசனைக்கு அமைய வீடமைப்புத்திட்டம் அமுலாகிறது. 1977 ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சி பெற்ற தேர்தல் வெற்றியைத் தொடர்ந்து, 1978 ஆம் ஆண்டின் ஜூலை 21 ஆம் திகதி ஒவ்வொரு தேர்தல் தொகுதியிலும் ஐந்து வீடுகளை அமைக்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

## விமான நிலையத்தில் தங்க பிஸ்கட் மீட்பு



கொழும்பு, ஜூலை 22

கட்டுநாயக்க விமான நிலையத்தில் இருந்து ஒருதொகை தங்க பிஸ்கட்டுகளை கொண்ட பொதியொன்று மீட்க்கப்பட்டுள்ளது. என சுங்கத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த தங்க பிஸ்கட்டுகள் சட்டவிரோதமான முறையில் கொண்டுவரப்பட்டு மறைத்து வைத்திருந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளன.

இவ்வாறு மீட்கப்பட்டுள்ள தங்க பிஸ்கட்டுகள் சுமார் இரண்டு கோடி ரூபா பெறுமதி எனவும் இந்த பொதியில் சுமார் 28 தங்க பிஸ்கட்டுகள் இருந்தன என்றும் விமான நிலைய சுங்கத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

சம்பவம் குறித்து விமான நிலைய சுங்கத்துறை அதிகாரிகள் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## மின்தடை

யாழ்ப்பாணம், ஜூலை 22

உயர் அழுத்த தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை திங் கட்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை–

**வவுனியா பிரதேசத்தில் –**

மகாமயிலங்குளம், குடாகச்சக் கொடிய, துட்டுவாகை, குடாகச்ச கொடிய கல் உடைக்கும் ஆலை, கொக்கெலிய இராணுவமுகாம் பிரதேசம் ஆகிய இடங்களிலும்–

**மன்னார் பிரதேசத்தில் -**

எழுத்தூரிலிருந்து தலைமன்னார் வரை, Timex ஆடைத்தொழிற்சாலை, எருக்கலம்பிட்டி நீர்ப்பாசனத் திணைக்களம், Palmyra house, வங்காலைப்பாடு ஐஸ் தொழிற்சாலை, Lourdes ஐஸ் தொழிற்சாலை, மீன்பிடிசமாசம், அந்தோனிப்பிள்ளை ஐஸ் தொழிற்சாலை, கூல்மென் ஐஸ் தொழிற்சாலை, தலைமன்னார் இராணுவமுகாம் ஆகிய பிரதேசங்களிலும் மின்விநியோகம் தடைப் பட்டிருக்கும் என்று மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

## மரண தண்டனைக்கான ஏற்பாடுகள் தீவிரம்; 3 தரப்பிடம் அறிக்கை பெற நடவடிக்கை

மரண தண்டனை நிறைவேற்றம் என்ற ஜனாதிபதியின் உத்தரவு இலங்கையில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ள விடயமாக மாறியுள்ள நிலையில், இதற்கான அனைத்து பணிகளும் விரைவாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அதன்படி மரணதண்டனையை நிறைவேற்றுவதாயின், அடையாளங் காணப்பட்ட கைதிகள் தொடர்பில் ஜனாதிபதிக்கு 3 அறிக்கைகள் சமர்ப்பிக்க வேண்டும் என சட்டமா அதிபர் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த அறிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்படும் இறுதி அறிக்கையில் –

ஜனாதிபதி கையொப்பமிட்டதன் பின்னரே மரண தண்டனையை அமுல்படுத்துவதற்கு அனுமதி வழங் கப்படும் என சட்டமா அதிபர் திணைக்களத்தின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்த மூன்று அறிக்கைகளும், சட்டமா அதிபர், நீதி அமைச்சர் மற்றும் மரணதண்டனை உத்தரவைப் பிறப்பித்த நீதிபதி ஆகியோரின் பரிந்துரைகள் அடங்கிய அறிக்கைகள் என குறிப்பிடப்படுகின்றது.

நீதியமைச்சரின் அறிக்கை, அமைச்சின் விசேட குழுவினரால் தயாரிக்கப்படும். அதேநேரம், குறித்த குழுவினர் கைதிகளின் கருத்துக்களையும் கேட்டறிதல் அவசியமாகும் எனவும் கூறப்பட்டுள்ளது.

இரண்டாவதாக கைதிகளுக்கு மரண தண்டனை உத்தரவை பிறப்பித்த நீதிபதியும் தமது தீர்ப்பு தொடர்பில் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்.

மூன்றாவதாக சட்டமா அதிபரின் பரிந்துரைகள் அடங்கிய அறிக்கைகள்.

இவை அனைத்தும் ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

அவ்வாறு சமர்ப்பித்த பின்னர் அந்த அறிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்படும் இறுதி அறிக்கையில் ஜனாதிபதி கையொப்பமிடுவார்.

அதன் பின்னரே மரண தண்டனையை அமுல்படுத்துவதற்கு அனுமதி வழங்கப்படும் என சட்டமா அதிபர் திணைக்களத்தின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

## லஞ்சம் பெற்ற வேளை உயர் அதிகாரி கைது

கொழும்பு, ஜூலை 22

இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டு திணைக்களத்தின் கட்டுப்பாட்டாளர் ஒருவர் இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளார்.

இலங்கையின் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டு திணைக்களத்தின் கட்டுப்பாட்டாளர் வர்த்தகர் ஒருவரிடமிருந்து 2 இலட்சம் ரூபாவை இலஞ்சமாக பெறும் போது இலஞ்ச ஊழல் ஆணைக்குழு அதிகாரிகளினால் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஐஸ் ரக போதைப்பொருளை கடத்தி வந்த இந்தியர் கைது!

கொழும்பு, ஜூலை 22

ஐஸ் ரக போதைப்பொருளை கடத்தி வந்த இந்தியர் ஒருவரை பண்டாரநாயக்க விமான நிலைய அதிகாரிகள் நேற்றுமுன்தினம் கைது செய்துள்ளனர்.

சுமார் 96 லட்சம் ரூபா பெறுமதியான ஐஸ் போதைப்பொருள் இந்த நபரிடமிருந்து மீட்கப்பட்டுள்ளது.

பெங்களூரிலிருந்து வந்த இந்த இந்தியரிடமிருந்து 806 கிராம் எடையுடைய ஐஸ் போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, 50 வயதான இந்த இந்தியரிடம் சம்பவம் தொடர்பில் விசாரணைகள் நடத்தப்பட்டு வருகின்றன என்று அதிகாரிகள் தெரிவித்தனர்

## தமிழறிஞரின் ஆத்மா சாந்தியடைவதாக...



அமரர். செல்லத்துரை சோதிப்பெருமாள்

இணுவையூர் தமிழறிஞர், அதிபர் செல்லத்துரை சோதிப்பெருமாள் அவர்களின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.


ஆரிய திராவிட பாஷாபி விருத்திச் சங்கத்தில் பொருளாளராக இருந்த அன்னார் ஆற்றிய அரும் பணிகள் என்றும் மறக்கப்பாலது. வாழ்க அன்னாரின் புகழ்!

பண்டிதர் ம.ந.கடம்பேசுவரன்
(சங்கப் பொதுச் செயலாளர்)

காலைக்கதிர் Kalaikkathir



# மெய்சிலிர்க்க வைக்கும் தம்பதியரின் காதல், காதல்!





உக்ரைன் நாட்டில் தோண்டப்பட்ட ஒரு கல்லறையில், ஆணும் பெண்ணும் ஒன்றாக இருந்த எலும்புக்கூடுகள் கிடைத்திருக்கின்றன. ஆச்சரியமடைந்த ஆய்வாளர்கள், இந்த எலும்புக் கூடுகளை ஆராய்ந்தனர். இவர்கள் சுமார் 3 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த கணவன், மனைவியாக இருக்க வேண்டும். Vysotskaya, Wysocko என்ற நாகரிகத்தைச் சேர்ந்தவர்களாக இருக்க வேண் டும். கணவன், மனைவிக்கு என்று தனித்தனி வரையறைகள் அப்போது இருந்திருக்கின்றன. இந்த எலும்புக் கூடுகள் இருந்த கோலத்தைப் பார்க்கும்போது, மனைவி இறந்த பிறகு இருவரையும் சேர்த்துப் புதைத்திருக்க வாய்ப்பில்லை என்று தோன்றுகிறது.

இறந்த கணவனை விட்டுப் பிரிய மனம் இல்லாததாலும் அடுத்த பிறவியில் சேர்ந்து வாழலாம் என்ற எண்ணத்திலும் இந்தப் பெண் கணவனுடன் சேர்ந்து உயிர் துறக்க முடிவு செய்திருக்க வேண்டும். வலி இல்லாமல் உயிர் போகக்கூடிய வித்தை அருந்தி, கணவன் உடலுக்கு அருகில் படுத்து, அவர் தலைக்கு அடியில் வலது கையை வைத்து, முகத்தைத் தன் முகத்தோடு உரசிக்கொண்டு, கால்களைக் கணவன் மீது போட்டு, இடது கையை அவரது மார்பு மீது வைத்தபடி உயிர் துறந்திருக்கிறார். இந்தப் பெண்ணின் காதல் மெய்சிலிர்க்க வைக்கிறது. இந்தச் செயலை அந்தப் பெண்ணே விரும்பிச் செய்திருக்கிறார் என்ற முடிவுக்கு வந்திருக்கிறோம். கட்டாயத்தின்பேரில் இப்படி ஒரு நெருக்கத்தைக் கொண்டுவர முடியாது என்கிறார் உக்ரைன் தொல்பொருள் ஆராய்ச்சி மையத்தைச் சேர்ந்த ஆய்வாளர்.





# ட்ரம்புக்கு எதிராக திரண்ட லண்டன் மக்கள்

அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப், லண்டனுக்கு வருகை தந்ததை ஒட்டி, அவருக்கு எதிராகப் போராட்டக்காரர்கள் குவிந்தனர். சுமார் 2.5 லட்சம் பேர் மத்திய லண்டனில் குழுமி, கோஷங்களை எழுப்பினர். ட்ரம்ப் உருவ ராட்சத பொம்மையைப் பறக்க விட்டும் அவரைப்போல் வேஷம் போட்டும் மக்கள் தங்கள் எதிர்ப்பைக் காட்டினர். தொழிலாளர் கட்சியின் தலைவர் ஜெரெமி கோர்பின், உணர்வுபூர்வமாக உரை நிகழ்த்தினார். இதுவரை எந்த அமெரிக்க அதிபருக்கும் இதுபோன்ற எதிர்ப்பு லண்டனில் நிகழ்ந்ததில்லை. இங்கிலாந்தும் அமெரிக்காவும் நெருங்கிய நட்பு நாடுகள். ஆனால் டொனால்ட் ட்ரம்ப் மோசமான கொள்கைகளைக் கொண்டவராக இருக்கிறார். புலம் பெயர்ந்து வரும் மக்களை அவர் நடத்தும் விதமும் குழந்தைகளை அவர்களின் பெற்றோரிடமிருந்து பிரித்த விடயமும் மக்களை மிகவும் கோபமடைய வைத்துவிட்டன. அகதிகளைப் பற்றியும் பெண்களைப் பற்றியும் அவருடைய வெறுப்புக் கருத்துகள், இன துவேஷம் போன்ற பல்வேறு விஷயங்கள் இந்த எதிர்ப்புப் பேரணியில் முக்கியப் பங்கு வகித்தன. இங்கிலாந்து பிரதமர் தெரசா மே, டொனால்ட் ட்ரம்ப் உட்பட பலரும் எதிர்ப்பை எதிர்பார்த்தனர், ஆனால் லட்சக்கணக்கானவர்கள் பங்கேற்பார்கள் என்பதை எதிர்பார்க்கவில்லை என்கிறார்கள்.

# 300 முதலைகளைக் கொன்றுபோட்ட ‘மனித’ கும்பல்!

கிராம மக்கள் ஒன்று சேர்ந்து 300க்கும் மேற்பட்ட முதலைகளைக் கொன்று போட்ட கோரச் சம்பவம் இந்தோனேஷியாவில் நிகழ்ந்துள்ளது.

இந்தோனேஷியாவின் பப்புவா மாகாணத்தில் மிகப்பெரிய முதலைப் பண்ணை ஒன்று அமைந்துள்ளது. முதலைப் பண்ணைக்கு அருகே குடியிருப்புப் பகுதியும் உள்ளது. கடந்த சில நாள்களுக்கு முன் முதலைப் பண்ணை அருகே வசிக்கும் 48 வயதான சுகிட்டோ என்பவர், தன் கால்நடைகளுக்கு புல் அறுத்துக்கொண்டிருந்தார். அப்போது, புல் வெளியில் இருந்த முதலை அவரின் காலைக் கடித்துள்ளது. முதலையிடம் இருந்து தப்பிக்க பதற்றத்தில் அருகில் இருந்த பண்ணைக்குள் நுழைந்து விட்டார். அங்கிருந்த மற்ற முதலைகள் அவரை கடித்துக் குதறின. சுகிட்டோ சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.



குடியிருப்புப் பகுதியில் முதலைப் பண்ணை அமைக்கப்பட்டதற்குக் கிராம மக்கள் பல நாள்களாக எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர். சுகிட்டோ மரணம் கிராம மக்கள் மத்தியில் சீற்றத்தை ஏற்படுத்தியது. முதலைப் பண்ணையை முற்றுகையிட்டனர். சுகிட்டோ குடும்பத்துக்கு இழப்பீடு வழங்குவதாக ஒப்புக்கொண்டது பண்ணை நிர்வாகம்.

பண்ணையை வேறு இடத்துக்கு மாற்றுவதாகவும் உறுதியளித்தனர். அப்போதும் மக்களின் கோபம் குறையவில்லை. சுகிட்டோவின் உறவினர்கள் பிற கிராம மக்களை ஒன்றிணைத்து கத்தி உள்ளிட்ட ஆயுதங்களுடன் புறப் பட்டு முதலைப் பண்ணையை துவம் சம் செய்தனர். 300இறக்கும் மேற்பட்ட முதலைகளைக் கொன்று போட்டனர். முதலைப் பண்ணைக்குள் இருந்த குட்டி முதலைகளையும் அவர்கள் விட்டுவைக்கவில்லை. முதலைகள் துடிதுடித்து உயிரிழந்தன.

# முயற்சி வெற்றி அடையட்டும்!



பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த அல்பர் டெஸ்லியர் ஆசிரியராக இருக்கிறார். இவருக்கு பார்வை கிடையாது. பொலிவியாவில் உள்ள Salar de Uyuni, உலகிலேயே மிகப் பெரிய உப்புப் பாலைவனம். இதில் சாதனை பயணத்தை மேற்கொண்டிருக்கிறார் இவர். ஒரு நாளைக்கு 20 கி.மீ. வீதம் 7 நாள்களில் 140 கி.மீ. தூரம் தனியாக நடந்து செல்கிறார். ஜி.பி.எஸ். ஆடியோ உதவியுடன் இந்தப் பயணத்தைத் தொடர்ந்து கொண்டிருக்கிறார். பார்வையற்ற குழந்தைகளுக்குப் பாடம் சொல்லித் தரும் ஆசிரியராக இருக்கும் அல்பர், தன்னுடைய பார்வை முற்றிலும் போவதற்குள் ஏதாவது சாதித்துவிட வேண்டும் என்று முடிவு செய்தார். கடந்த 2 ஆண்டுகளாக பயிற்சி எடுத்துக்கொண்டார். மாற்றுத்திறனாளிகளாலும் சாதாரண மனிதர்களைப் போல் சாதனைகளைப் படைக்க முடியும் என்பதை எடுத்துக் காட்டுவதற்கே, இந்தப் பயணத்தை மேற்கொள்கிறார். பாதுகாப்பு காரணங்களுக்காக மருத்துவக் குழு ஒன்று, சற்று தொலைவில் இவரைப் பின்தொடர்ந்து செல்கிறது. எதிர்பாராமல் ஆபத்து நேர்ந்தால் மருத்துவக் குழுவினரை இவரால் தொடர்பு கொள்ள முடியும். ஜூலை 17 அன்று தன்னுடைய பயணத்தை பொலிவியாவில் தொடங்கி இருக்கிறார். இந்தப் பகுதியில் – 3 முதல் 20 டிகிரி செல்சியஸ் வரை வெப்பநிலை ஏற்ற இறக்கமாக இருக்கும். இதில் சாதரண மனிதர்கள் பயணம் செய்வதே மிகக் கடினமானது. பார்வையற்ற ஒருவருக்கு மிக மிக சவாலான பயணம். இந்த உப்புப் பாலைவனத்தை அடைவதற்கு குறுக்கு வழியில் சென்றால் தூரம் குறையும். ஆனால் அல்பர் நீளமான வழியைத் தேர்ந்தெடுத்திருக்கிறார். லைகா கிராமத்தில் பயணத்தை ஆரம்பித்து, கோல்சானி கிராமத்தில் முடிக்கிறார். தண்ணீர், உணவு, தூங்கும் பை போன்றவற்றுடன் பயணிக்கிறார். தான் உதவி கேட்காதவரை, தன்னை நெருங்கக் கூடாது என்று மருத்துவக் குழுவைக் கேட்டுக் கொண்டிருக்கிறார்.

**நாளை ஜூலை 23 ஆடிக் கலவரம். (கறுப்பு ஜூலை) நடைபெற்று 29 வருடங்கள் ஆகின்றன. அந்தக் கரி நாளையொட்டி இந்த ஆக்கம் வெளியிடப்படுகிறது.**



# கறுப்பு ஜூலை மறக்க முடியாத கறை படிந்த வரலாறு

கறுப்பு ஜூலை (ஆடிக்கலவரம்) என்பது ஜூலை 23, 1983 தொடக்கம் இரண்டு கிழமைகளுக்கு மேலாகத் திட்டமிட்ட முறையில் சிங்கள இனவாதிகள் இலங்கைத் தமிழர்களைக் கொடுமைப்படுத்தியும், சொத்துகளை அழித்தும் கைப்பற்றியும், 3000 பேர் வரை படுகொலை செய்ததுமான ஒரு துன்பபியல் நிகழ்வாகும். இது தமிழீழ விடுதலைப் புலிகள் 13 இலங்கை படையினரை யாழ்ப்பாணம், திருநெல்வலியில் படுகொலை செய்ததின் தூண்டுதல் விளைவு எனப்பட்ட போதும், இந்நிகழ் வின் ஒருங்கிணைப்பு முறை ஒரு திட்டமிட்ட செயற்பாடாகவே நம்பப்படுகிறது.



கறுப்பு ஜூலை நிகழ்வுகளே இலங்கை இனப் பிரச்சினை ஆயுதப் போராட்டமாக மாறக் காரணமானதாகப் பார்க்கப் படுகின்றது.

கறுப்பு ஜூலை என்றழைக்கப்படும் ஆடிக்கலவரம் இடம்பெற்று நாளையுடன் இருபத்தொன்பது வருடங்களாகின்றன. இலங்கைத் தமிழ் மக்களின் வரலாற்றில் என்றென்றைக்கும் மறக்க முடியாத கறைபடிந்த வரலாற்று பக்கமாக 1983 ஆம் ஆண்டு ஜூலை மாதம் அமைந்துவிட்டது. தலைநகர் கொழும்பு உட்பட தென்னிலங்கை எங்கும் தொடர்ந்து மூன்று தினங்களுக்கும் மேலாக தமிழ் மக்களது உயிர்களும், உடைமைகளும் காடையர்களால் தீக்கிரையாக்கப்பட்டு நாசமாக்கப்பட்டன.

நூற்றுக்கணக்கான தமிழ் மக்கள் வீதிகளில் உயிருடன் போட்டு எரிக்கப்பட்டார்கள் நூற்றுக்கணக்கான பெண்கள் காடையர் கும்பலால் பாலியல் வல்லுறவுக் குள்ளாக்கப்பட்டு எரிக்கப்பட்டார்கள். தமி ழர்களின் சொத்துக்கள் பெருமளவில் கொள்ளையிடப்பட்டு எரிக்கப்பட்டும் ஏனையவை எரித்தும் நாசமாக்கப்பட்டன. தமிழ்த்தேசிய விடுதலைப் போராட்டத்தின் முதலாவது நிலக்கண்ணிவெடித் தாக்குதல் யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் 1983 ஜூலை 21ஆம் திகதி இடம் பெற்றது.

இந்த தாக்குதலில் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் உட்பட மாத்தயா, கிட்டு, அருணா, சார்ள்ஸ் அன்ரனி உட்பட பலர் பங்குபற்றியபோதும் இந்த தாக்குதலுக்கு செல்லக் கிளி எனும் போராளியே தலைமை வகித்தார் எனக் கூறப்படுகிறது.

இந்தத் தாக்குதல் சம்பவத்திலேயே அந்தச் செல்லக்கிளி உயிரிழந்தார் எனவும் கூறப்படுகின்றது. தமிழ்த்தேசிய ஆயுதப் போராட்ட வரலாற்றில் பல்வேறு பரிணாமங்களையும் இந்தத் தாக்குதல் சம்பவம் உருவாக்கியது என்பதையும் எவரும் மறந்துவிட முடியாது. இந்த



தாக்குதல் சம்பவத்தில் உயிரிழந்த படையினரின் சடலங்கள் கொழும்புக்கு கொண்டுவரப்பட்டு பொரளை கனத்தை மயானத்தில் இராணுவ மரியாதையுடன் அடக்கம் செய்யப்பட்டமையை அடுத்து அங்கிருந்து வெளியேறிய காடையர் கும்பல் முதலில் பொரளையிலுள்ள தமிழர்களின் வர்த்தக நிலையங்களை சூறையாடி தீவைத்தது. அந்த இனவாதத் தீ நாடு முழுவதும் சில தினங்கள் பற்றியெரிந்தது. நூற்றுக்கணக்கான அப்பாவி மக்களின் உயிர்களைப் பலியெடுத்தது.

நாடு முழுவதும் இனவாதத் தீயில் எரிந்து கொண்டிருந்த போது அப்போது நிறை வேற்று அதிகாரத்துடன் ஆட்சியதிகாரத்திலிருந்த ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தன வன்முறைகளைக் கட்டுப்படுத்துவதற்கு பதிலாக போர் என்றால் போர், சமாதானம் என்றால் சமாதானம் என்று அறைகூவல் விடுத்தார். ஜே.ஆர். ஜெயவர்த்தனவின் இந்த அறைகூவல் இனவாதக்கும்பல்களின் அடாவடித் தனத்தை மேலும் மேலும் உற்சாகப் படுத்தியது. அச்சம் காரணமாக வீடுகளை விட்டு வெளியே றிய ஆயிரக்கணக்கான தமிழ் மக்களை பாடசாலைகளிலும் ஆலயங்களிலும் எந்தவொரு பாதுகாப்புமின்றி தஞ்சமடைய வைத்தது.

அகதிமுகாம்களில் தஞ்சமடைந்த அப்பாவி மக்களையும் இனவாதக்கும்பல் விட்டு வைக்கவில்லை. தேடித்தேடி அழிக்க முற்பட்டது. அப்போதைய ஆட்சியாளர்களின் உரிய வழிநடத்தல் இல்லாமையால் பொலிஸாராலோ படையி னராலோ வன்முறைக்கும்பலை கட்டுப்படுத்த முடியாத நிலைமையேற்பட்டது.



# தமிழர்கள் வெட்டியும் உயிருடன் எரித்தும்

# கொன்ற கொடூரம்!

இதனையடுத்து அயல் நாடான இந்தியாவின் தலையீடு காரணமாக லங்காராணி கப்பல்மூலம் உடுத்த உடுப்புடன் ஆயிரக் கணக்கான தமிழ் மக்கள் வடக்கு, கிழக்கிற்கு அனுப்பி வைக்கப் பட்டார்கள். தீயில் எரிந்து சுடு காடாக மாறிய தலைநகர் கொழும்பை சுத்தப்படுத்தக்கூட அப்போதைய ஆட்சியாளர்களுக்கு பலவாரங்கள் நீடித்தன என்றும் குற்றஞ்சாட்டப்பட்டது குறிப்பிடதக்கது.

**வெலிக்கடை சிறையில் நடந்த கொடுமை**

இதனைவிட மிகப்பெரும் கொடூரம் அன்றைய ஆட்சியாளர்களால் வெலிக் கடைச் சிறைச்சாலையில் நிறைவேற்றப்பட்டது. அங்கு தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழ் அரசியல் கைதிகள் மீது இரு தினங்கள் திட்டமிட்ட தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இந்தத்தாக்குதல் சம்பவத்தில் குட்டிமணி, தங்கத்துரை, ஜெகன், நடேசுதாசன், சிவபாதம்மாஸ்ரர், அரபாத், காந்திய இயக்கத் தலைவர் டாக்டர் இராஜசுந்தரம் உட்பட 53 போராளிகள் படுகொலைசெய்யப்பட்டார்கள்.

வெலிக்கடைச் சிறைச்சாலையின் மையப்பகுதிக்கு நூற்றுக்கணக்கான கிரிமினல் கைதிகளால் இழுத்துச் செல்லப் பட்ட குட்டிமணி கண்கள் தோண்டப்பட்டு படுகொலை செய்யப் பட்டார். இந்தத் தாக்குதல் சம்பவத்தில் மேலும் பல தமிழ் அரசியல் கைதிகள் படுகாயமடைந்த நிலையில் பின்னர் மட்டக்களப்பு சிறைச் சாலைக்கு மாற்றப்பட்டார்கள். பின்னர் மட்டக்களப்பு சிறைச்சாலை தமிழ் மக்கள் விடுதலைக் கழகம் (புளொட்) அமைப்பினராலும் உள்ளேயிருந்த அரசியல் கைதிகளின் துணையுடன் உடைக்கப் பட்டு அனைத்து அரசியல் கைதிகளும் தப்பிச் சென்றனர். இவை யெல்லாம் எமது வாழ் நாள் குறிப்பேட்டின் மறக்க முடியாத வரலாற்று உண்மைகளாகும்.

வெலிக்கடை சிறைச் சாலை படுகொலைச் சம்பவம் அன்றைய ஆட் யாளர்கள் திட்டமிட்டு முன்னெடுத்த கொலைக் களமாகும். இந்த கொலை வெறியாட்டம் நடத்தியவர்கள் 1982களில் தனது மனைவியையும், குழந்தையையும் தன்னுடன் இணைக்குமாறு கோரி இத்தாலிய விமானமொன்றை கடத்த முற்பட்ட வேளையில் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டிருந்த சோமபால ஏக்கநாயக்க தலைமையிலான கிரிமினல் கைதிகளேயாவர் என்பதும் சுட்டிக் காட்டப்பட வேண்டியதொரு விடயமாகும்.

அதேநேரம் 1983 கறுப்பு ஜூலைக் கலவரம் தொடர்பில் அப்போதைய ஜனாதிபதி ஜே.ஆர் ஜெயவர்த்தன, தேசிய பாது காப்பு அமைச்சராகவிருந்த லலித் அத்துலத் முதலி மற்றும் ஐக்கிய தேசிய கட்சியின் சிரேஷ்ட அமைச்சர்களாகவி ருந்த ஆர். பிரேமதாஸ, காமினி திசா நாயக்க, வீரசிங்க மல்லிமாராச்சி, சிறில் மத்யூ மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் பொருளாளராகவிருந்த கணேசலிங்கம் ஆகியோர் மீது குற்றஞ்சாட்டப் பட்டிருந் தது. இன்று இவர்களில் எவரும் உயிருடன் இல்லையென்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கையின் அரசியல் வரலாற்றில் ஐக்கிய தேசியக் கட்சியே தீவிர முனைப்புடன் இனவாத அரசியல் கருத்திட்டங்கள் முன்னெடுத்தமை வரலாற்றியல் உண்மையாகும். அதற்காக ஆட்சியிலிருந்த ஏனைய பெரும்பான்மைக் கட்சிகள் சிறுபான்மையான மக்களை அவர்களின் அரசியல் அபிலாசைகளை பூர்த்தி செய்ய முன்வந்த வரலாறும் மிகவும் அரிது என்பதையும் மறந்துவிட முடியாது.

1983 கறுப்பு ஜூலையின் தீச்சுவாலைகள் கொளுந்து விட்டெரிந்த ஜூலை 23, 24, 25 அன்றைய தினங்கள் மனதினை உள்ளுருத்தி இன்றென எழுந்து கொண்டிருக்கிறது. இனவாதத்தை இலங்கையின் அரசியல் வரலாற்றில் கலந்துவிட்ட பெருமை ஐக்கிய தேசியக் கட்சிக்கே மிகவும் உரித்துடையது.

கடந்த மூன்று தசாப்த காலமாக எமது நாட்டை வாட்டி வதைத்து பெரும் துயர் கொள்ள வைத்த துயரங்கள் இன்று இல்லாமல் போனபோதும் நிரந்தர அமைதியை உறுதியாக கட்டியெழுப்புவதற்கான அரசியல் தீர்வுத்திட்டத்தை நோக்கிய நகர்வுகள் கூனிக்குறுகி இழுபட் டுச் செல்வதும் அரசியல் கட்சிகளின் நிலையற்ற தளர்வுப் போக்குகளும் கவலைதரும் விடயங்களாகவே எம்முன்னால் காணக்கிடைக்கிறது.

வடக்கு,கிழக்கு மட்டுமன்றி எமது முழு நாட்டிற்கும் பெரும் சவாலாக இருந்த மூன்று, தசாப்த காலப்பகுதிக்கும் மேலாக தொடர்ச்சியாக இடம்பெற்ற உள் நாட்டு யுத்தம், வன்னி இறுதிப்போர் நடவடிக்கைகளையடுத்து முடிவுக்கு கொண்டு வரப்பட்டுள்ள போதிலும் அதனால் ஏற்பட்ட இழப்புகளை கட்டுயெழுப்ப இன்னும் நீண்ட காலம் தேவை யென்பதை எவரும் மறுத்துரைக்க முடியாது. *

காலைக்கதிர் Kalaikkathir



# இந்த வாரம் உங்களுக்கு எப்படி?

2018 ஆம் ஆண்டு ஆடித்திங்கள் 6ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை தசமித்திதி பகல் 2.47 மணி வரை பின்னர் ஏகாதசி. நட்சத்திரம். விசாகம் பகல் 10.44 மணி வரை பின்னர் அனுஷம். மரணயோகம் முழுவதும்.

**ராகுகாலம்** - மாலை 4.59 மணி முதல் 6.33 மணி வரை

**சுபநேரம்** - காலை 9.04 மணி முதல் 10.33 மணி வரை

**திவசம் செய்ய வேண்டிய திதி**- திதி இல்லை.

**பிறந்த நட்சத்திர வழிபாடு** - விசாகம்.

சந்திராஷ்டம நாள் - அசுவினி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதங்களில் பிறந்தோர் நற்கருமங்கள் தொடங்குவதைத் தவிர்க்கவும்.

**22.07.2018**
**28.07.2018**

**கணிப்பு: 'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா (ஜே.பி.)**

## மேஷம்:

கவலையான வாரம். பண வரவு குறையும். குடும்பத்தில் சிறுசிறு உட்பூசல்கள் காணப்படும். இருப்பிட வசதி குறையும். எதிலும் ஆர்வமின்மை, உள் மனதில் அச்சம் வந்து போகும். அலைச்சல், செலவுகள் அதிகரிக்கும். அரசு காரியங்கள் இழுபறியாகும். உத்தியோகத்தில் இவர்களின் உழைப்புக்கு அங்கீகாரம் கிடைக்கவில்லை என ஆதங்கப்படுவார்கள். உத்தியோகத்தின் பொருட்டு பிள்ளைகளைப் பிரிய வேண்டிய சூழ்நிலை உருவாகலாம். உடலில் உபாதைகள் உருவாகும்.

## ரிஷபம்:

சமபலன்கள் காணப்படுகின்றன. பொருளாதாரம் சமமாக இருக்கும். வரவுக்கு மீறிய செலவுகள் உண்டாகும். எடுக்கும் காரியம் தாமதமாகும். வியாபாரத்தில் கடின உழைப்பால் ஓரளவு லாபம் ஈட்டுவார்கள். சகோதர வழியில் செலவுகள் உண்டாகும். வீடு வாங்குவது, விற்பதில் சிக்கல்கள் வந்து நீங்கும். மற்றவர்களை நம்பி குறுக்கு வழியில் செல்ல வேண்டாம். உத்தியோகத்தில் வேலைச் சுமை, பொறுப்புக்கள் அதிகரிக்கும். வீண் அலைச்சல்களால் உடல் நலம் குன்றும். மருத்துவச் செலவுகள் உண்டாகும்.

## மிதுனம்:

ஆக்கபூர்வமான வாரம். பணப்புழக்கம் சரளமாக இருக்கும். குடும்ப உறவு அன்புடையதாக இருக்கும். வியாபாரத்தில் நவீன யுத்திகளைக் கையாண்டு லாபம் பெறுவார்கள். விலையுயர்ந்த சமையலறைச் சாதனங்கள் வாங்குவார்கள். உத்தியோகத்தில் விமர்சனங்களைத் தாண்டி முன்னேறுவார்கள். இவர்களின் நிர்வாகத் திறன் அதிகரிக்கும். வீட்டை மாற்றுவது, விரிவுபடுத்திக் காட்டுவது போன்ற முயற்சிகள் வெற்றி அடையும். அரசால் அனுகூலம் உண்டாகும். குல தெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றுவார்கள்.

## கடகம்:

அனுகூலமான வாரம். பணப்புழக்கம் கனிசமாக உயரும். குடும்பத்தில் அந்நியோன்யம் அதிகரிக்கும். வியாபாரத்தில் பாக்கிகள் வசூலாகும். உத்தியோகத்தில் இவர்களின் உழைப்புக்கு பாராட்டுக் கிடைக்கும். எங்கு சென்றாலும் முதல் மரியாதை கிடைக்கும். சிலருக்கு வெளிநாட்டுப் பயணம் அனுகூலமாகும். தொழிலில் கூடுதல் லாபம் கிடைக்கும். வீட்டில் அடிப்படை வசதிகள் பெருகும். பூர்வீகச் சொத்துக்கள் கைக்கு வந்து சேரும். வழக்கில் வெற்றி கிட்டும். திருமண காரியங்கள் ஒப்பேறும்.

## சிம்மம்:

சஞ்சலமான வாரம். எதிர்பார்த்த பணம் வரத் தாமதமாகும். குடும்பத்தில் குழப்பநிலை காணப்படும். பிள்ளைகளால் கவலை உண்டாகும். வரவுகளை விட செலவுகள் அதிகமாகும். உடலில் உபாதை உண்டாகும். யாருக்கும் பணம் நகை வாங்கித் தருவதில் ஈடுபட வேண்டாம். உத்தியோகத்தில் அதிகாரிகளால் அலைக்கழிக்கப்படுவார்கள். நம்பியவர்கள் ஏமாற்றப் பார்ப்பார்கள் கவனம் தேவை. வாக்குவாதங்களைத் தவிர்ப்பது நல்லது. தொழிலில் நிறையப் பாடுபட வேண்டி வரும்.

## கன்னி:

மத்திமமான வாரம். பண வரவு சுமாராக இருக்கும். குடும்பத்தில் வாக்குவாதங்கள் உண்டாகும். வியாபாரத்தில் மறைமுக போட்டிகளைச் சமாளிப்பார்கள். உத்தியோகத்தில் ஒரே நேரத்தில் பல வேலைகளைப் பார்க்க வேண்டி வரும். எதிலும் முன் யோசனையுடன் செயற்பட வேண்டும். வீடு, வாகனத்தை சீர் செய்வார்கள். புது வேலைக்கு முயற்சி செய்வதை தள்ளிப் போடவும். உடலில் ரோகங்கள் உண்டாகி மருத்துவச் செலவுகள் ஏற்படும். கொடுக்கல், வாங்கலில் கவனம் தேவை.

## துலாம்:

யோகமான வாரம். பண பலம் அதிகரிக்கும். மன பலம் கூடும். தெளிவாக சில முடிவுகளை எடுப்பார்கள். ஆன்மிகப் பயணங்கள் மேற்கொள்வார்கள். புது வீடு கட்டி குடிபோவார்கள். நீண்ட நாள்களாகப் பிரிந்த உறவுகள் மீண்டும் ஒன்று சேரும் வாய்ப்புண்டாகும். வியாபாரத்தில் அயல் நாட்டு நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்வார்கள். உத்தியோகத்தில் பதவி உயர்வு, சம்பள உயர்வு தானாகவே வந்து சேரும். பிள்ளைகளின் உயர்கல்வி நல்ல விதத்தில் நடக்கும்.

## விருச்சிகம்:

இன்பமான வாரம். பொருளாதாரம் மன நிறைவைத் தரும். குடும்பத்தில் குதூகலம் அதிகரிக்கும். வியாபாரத்தில் வேலையாள்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். நீண்ட நாள்களாகப் பார்க்க நினைத்த உறவுகளைச் சந்திப்பார்கள். உறவினர், நண்பர்களின் ஒத்துழைப்புக் கிடைக்கம். சிலருக்கு அசையாச் சொத்து வாங்கும் யோகம் உண்டாகும். சுப நிகழ்ச்சிகளால் வீடு களிப்பும், கலகலப்புமாக இருக்கும். வேலை தேடுவோருக்கு வேலை கிடைக்கும்.

## தனுசு:

குழப்பமான வாரம். பண வரவு குறையும். எதிர்பாராத செலவுகளால் கடன்பட நேரும். குடும்பத்தில் பிரச்சினைகள் உண்டாகும். உடல் உபாதைகள் உண்டாகும். பேச்சால் பிரச்சினை உண்டாகும். பொறுமை தேவை. உத்தியோகத்தில் அவர்களுக்கு சிறுசிறு அவமரியாதை, அலைக்கழிவு வரக்கூடும். பிள்ளைகளால் மனக் குழப்பம் உண்டாகும். பயணத்தின் போது உடைமைகள் தொலைந்து போக வாய்ப்புள்ளது. கவனம் தேவை. கொடுக்கல், வாங்கலில் வீண் பிரச்சினைகள் உண்டாகும்.

## மகரம்:

சுபிட்சமான வாரம். நிதி நிலைமை வளமாக இருக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். சகோதர வழியால் நன்மைகள் உண்டாகும். வீடு, வாகன வசதிகள் பெருகும். உறவினர்களின் மத்தியில் செல்வாக்குக் கூடும். ஆடை, ஆபரணச் சேர்க்கை உண்டாகும். உத்தியோகத்தில் அதிகாரிகள் முன்னுரிமை தருவார்கள். அடைவு நகைகளை மீட்பார்கள். கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும்.

## கும்பம்:

விருத்தியான வாரம். பொருளாதாரம் ஏற்றம் அடையும். செய்யும் தொழில் எதுவாக இருந்தாலும் அதில் கவனம் செலுத்தி விருத்தி அடைவார்கள். விடுபட்டுப்போன நண்பர்களும், உறவினர்களும் மீண்டும் இணைவார்கள். பெண்கள் சுய தொழிலில் கவனமுடன் செயற்பட்டு வருமானத்தைப் பெருக்கிக் கொள்வார்கள். மாணவர்களின் கல்வி வளர்ச்சியைத் தரும். முயற்சிகளுக்கு நல்ல பயன் கிடைக்கும். கலைத்துறையினர் புதிய ஒப்பந்தத்தில் கலந்துகொள்வார்கள்.

## மீனம்:

உயர்வான வாரம். பொருளாதாரம் உயர்வடையும். குடும்ப ஒற்றுமை மேலோங்கும். வியாபாரத்தில் புதிய கிளைகளைத் தொடங்குவார்கள். மாணவர்களுக்கு உயர் கல்வி வாய்ப்புக்களும், தேர்வில் சிறப்பான மதிப்பெண்களையும் பெற்று வெற்றி பெறுவார்கள். புதிய முயற்சிகளும், தொழில் சம்பந்தமான முடிவு எடுக்கும் நிலையும் நன்மையைத் தரும். தொலை தூரப் பயணம் நல்ல பயனைத் தரும். சிலருக்கு புதிய நகை வாங்கும் வாய்ப்பு அமையும். சோதனையை வென்று சாதனை படைப்பார்கள்.



– துரை.நாகராஜன் –

# சஹாரா பாலைவனத்தை ஊடறுத்து ஓடும் மிக நீண்ட ரயில்!

நொய்டிபோவில் மீன்பிடிக்கும் மக்களுக்கு இந்த ரயில்தான் வெளி உலகை தம்முடன் இணைக்க இருக்கும் ஒரே வாகனம். ரயில்தான் இம்மக்களுக்கான முதுகெலும்பாக இருக்கி றது.

அந்தப் பகுதியில் சாதாரணமாகப் பகலில் நிலவும் வெப்பநிலை 40 டிகிரி செல்சியஸ். அந்த வெப்பநிலையில் நிற்பதே கொஞ்சம் சிரமமான விஷயம். அந்த வெப்பத்தில் அமர்வது என்றால் எப்படி இருக்கும். அமரும் இடம் சரக்கு ரயிலின் மேல்பகுதியாக இருந்தால்... அந்த ரயிலில் இரும்புத் தாதுகள் நிரம்பிய மணல் இருந்தால்... அந்த ரயில் பயணிக்கும் இடம் பாலைவனமாக இருந்தால்... சரக்கு ரயிலில் உள்ள மணலில் அமர்ந்து பயணிப்பவர்க ளின் உடல்நிலையும், மனநிலையும் எப்படி இருக்கும். ஆம், வாழ்ந்து ஆக வேண்டிய கட்டாயத்தில் இருக்கும் மக்களின் அந்த முகங்கள் பெரும் சோகத்தையே வெளிக்காட்டுகின்றன.



## ரயில் பயணம்

வடமேற்கு ஆபிரிக்காவில் உள்ள ஒரு நாடு மவுரித்தேனியா (Mauritania). இங்கு விவசாயம் செய்ய ஏற்ற நிலப் பகுதி வெறும் 0.2 சதவிகிதம் தான். மீதான நிலம் பாலைவனத்தால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கிறது. மவுரித்தேனியா வுக்கு மேற்கே அட்லாண்டிக் பெருங் கடல், தென்மேற்கில் செனிகல், கிழக்கு மற்றும் தென்கிழக்கே மாலி, வடகிழக்கே அல்ஜீரியா, வடமேற்கே மேற்கு சஹாரா ஆகியவை எல்லைகளாக அமைந் துள்ளன. மவுரித்தேனியாவில் மூர் மற் றும் பெர்பர் இன மக்கள் அதிகமாக வாழ்ந்து வருகிறார்கள்.

மவுரித்தேனியா ரயில் பாதை, 1963ஆம் ஆண்டில் 704 கி.மீ. நீளத்துக்கு அமைக்கப்பட்டது. உலகின் மிக நீளமான ரயில்களில் மிகவும் முக்கியமானது. மொத்த ரயிலின் நீளம் மட்டும் 3 கி.மீ. இந்த ரயிலின் பெயர் சஹாரா ரயில். இந்த ரயில் நொய்டிபோ (Nouadhibou)இற்கு வருவதற்கும் ஒரு காரணம் இருக்கிறது. மவுரித்தேனியாவின் நகரங்களுள் ஒன்றான நொய் டிபோவுக்கு அருகில் இரும்புத் தாதுகள் எடுக்கப்பட்டு வருகின்றது. இரும்புத் தாதுகள் இருக்கும் இடம் சஹாரா பாலை வன எல்லைக்குள் அமைந்துள்ளது. அதைச் சுமந்து செல்லும் வேலைக்காகத்தான் நீளமான ரயில் இயக்கப்படுகிறது.

ஆனால், அங்கு வசிக்கும் மக்களுக்காகச் சரக்கு ரயிலுடன், மனிதர்கள் பயணிக்கும் பெட்டிகள் கூடுதலாகவும் இணைக்கப்பட்டிருக்கும். சில நேரங்களில் பயணிகள் பெட்டிகள் இணைக்கப்படாமலும் இருக்கும்.

மவுரித்தேனியா எல்லைகளில் ஒன்றான அட்லான்டிக் கடற்கரையில் நொய்டிபோ துறைமுக நகரம் அமைந்துள்ளது. இங்கு மீன்கள் அதிகமாகக் கிடைக்கும். அதனால் இங்கே மீன்பிடித்து 650 கி.மீ தொலைவில் இருக்கும் ஜுய்ரட் (Zouerat) போன்ற நகரங்களுக்கு மீன்களைக் கொண்டு போகிறார்கள்.

மீன் பிடித்துக்கொண்டு வரும் மக்கள் அதைச் சரக்கு ரயிலில் ஏற்றி நகருக்குக் கொண்டு வருகின்றனர். அவர்கள் ஏற்ற ஆரம்பித்ததில் இருந்து முடிக்கும் வரை ரயில் காத்திருக்கும். மீன்களை ஏற்றும் பெட்டியில் இரும் புத்தாது மணல் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். அதனால் இவர்கள் அந்த சுடுமணலின் மீதுதான் ஏறி பயணம் செய்தாக வேண்டும். மேலும் ரயில் செல்லும்போது மணலின் தூசியும், பாலைவனக் காற்றின் வேகமும் இவர்களுக்குப் பல உடல் குறைபாடுகளை ஏற்படுத்தவும் வாய்ப்பு உண்டு.

1970 – 1980ஆம் ஆண்டுகளில் ஏற் பட்ட வறட்சியின் காரணமாக அதிகப்படியான மக்கள் நோவாகோட் (nouakchott) நகரைவிட்டு கிராமப் புறம் நோக்கிக் குடிபெயர்ந்தனர். நொய்டிபோ துறைமுகத்தில் இருந்து தான் அனைத்து நகரங்களுக்கும் மீன்கள் அனுப்பப்பட்டு வருகின்றன. மீன்களைக் கொண்டு செல்பவர்கள் சில நேரங்களில் வெப்பம் தாங்காமல் இறந்து போகக் கூடிய வாய்ப்புகளும் அதிகம். தினம் தினம் தங்களின் பயணத்தை உயிரைக் கையில் பிடித்தபடியே ரயிலுடன் பயணித்துக் கொண்டு தான் இருக்கிறார்கள். தினமும் அந்த ரயில் சரக்குகளுக்கு மட்டுமல்லாமல், மனிதர்களையும் தன்மீது அமரவைத்துக் கொண்டு பயணித்துக் கொண்டிருக்கிறது.

நொய்டிபோவில் மீன்பிடிக்கும் மக் களுக்கு இந்த ரயில்தான் வெளி உலகை தம்முடன் இணைக்க இருக்கும் ஒரே வாகனம். ரயில்தான் இம்மக்களுக்கான முதுகெலும்பாக இருக்கிறது. இதுதவிர மவுரித்தேனியாவின் பொருளாதாரத்திற்கான அடித்தளமும் இந்த ரயில்தான். இதன்மூலம் கிடைக்கும் இரும் புத்தாது மணலால்தான் நாட்டின் பாதி தேவையை அரசு நிறைவேற்றுகிறது. ஆனால் இம்மக்களுடைய தேவையை நிறைவேற்றத்தான் இங்கு யாருமில்லை.

# அந்தக் காலத்திலும் சுவை மிகு ரொட்டி



14 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னதாகவே ரொட்டி செய்துள்ளதற்கான ஆதாரங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. பழமையான தளம் ஒன்றை தோண்டிய விஞ்ஞானிகள் இதனை கண்டுபிடித்துள்ளனர்.

தீயில் சுடப்பட்ட அவை, தட்டையான ரொட்டி போன்றும், இன்றைய பல தானிய வகைகள் போன்றும் ருசித்திருக்கும் என்று கூறப்படுகிறது.

அந்த ரொட்டிகளுக்குள் வறுத்த மாமிசத்தை வைத்து முன்னோர்கள் பயன்படுத்தியிருக்கக்கூடும். இதுவே பழமையான 'சேன்விச்'சாகவும் இருக்கிறது.

ஜோர்டன் நாட்டின் பாலைவனத்தில் இதற்கான ஆதாரங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

பார்லி மற்றும் கோதுமையில் இருந்து தயாரிக்கப்பட்ட மாவில், தாவரங்களின் பொடியாக்கப்பட்ட வேர்கள் மற்றும் தண்ணீர் சேர்க்கப்பட்டு, கற்காலத்தில் ரொட்டிகள் சுடப்பட்டன.

ஜோர்டனில் 14 ஆயிரம் ஆண்டு களுக்கு முன் ரொட்டி செய்யப்பட்டது எப்படி?

கோதுமை மற்றும் பார்லியிலிருந்து மாவு எடுக்கப்பட்டது.

நீரில் வளரும் காட்டு தாவரங்களின் கிழங்குகள் (வேர்கள்) உலர வைக்கப்பட்டு தூளாக்கப்பட்டன.

இவற்றில் தண்ணீர் கலந்து சப்பாத்தி மாவு போல பிசையப்பட்டது.

சுற்றி நெருப்பு வைக்கப்பட்ட சூடான கற்களில் ரொட்டி சுடப்பட்டது.

கலப்பு உணவு தயாரிக்கப்பட்டு, சமையல் செய்ததற்கான பழமையான ஆதாரம் இது என்று பி.பி.ஸியிடம் பேசிய, லன்டன் பல்கலைக்கழக பேராசிரியர் டொரியன் ஃபுல்லர் கூறினார்.

தட்டையான ரொட்டிகளுடன், வறுத்த மான் போன்றவற்றை அவர்கள் சாப்பாடாக உண்டுள்ளனர்.

உலகில் உள்ள பல நாடுகளில் ரொட்டிகள் பிரதான உணவாக இருக் கின்றன. ஆனால், இது எப்போது தோன் றியது என்ற தகவல் தெளிவாக இல்லை.

தற்போது வரை, துருக்கியில் ரொட்டி தயாரிக்கப்பட்டதற்கான பழமையான ஆதாரங்கள் உள்ளன. இந்த கண்டுபிடிப்புகள் 9 ஆயிரம் ஆண்டுகள் பழமைவாய்ந்தவை.

இது தொடர்பாக இரண்டு கட்டடங்களை விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். அவை, பெரிய வட்டமான நெருப்புத் தகடுகளும், அவற்றில் ரொட்டி துகள்களும் இருந்தமை தெரியவந்தது.

கடந்த காலத்திற்கும், நிகழ் காலத்தில் இருக்கும் உணவு கலாசாரத்தின் இணைப்பாக ரொட்டி திகழ்வதாக கோபன்ஹேகன் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் அமையா கூறுகிறார்.

அக்காலத்தில் மக்கள் வேட்டை காரர்களாக இருந்தார்கள். மான் வகை களை வேட்டையாடி, முயல்கள் மற்றும் பறவைகள் போன்றவற்றை பிடித்து வைத்திருப்பார்கள்.

மேலும், உணவுகளுக்காக பழங்கள் மற்றும் தானியங்களையும் அவர்கள் நம்பியிருந்தனர். ஏதாவது கொண்டாட்டம் அல்லது விருந்துகளில் மக்கள் கூடும்போது ரொட்டிகள் செய்யப்பட்டன என்று விஞ்ஞானிகள் நினைக்கின்றனர்.

இவையெல்லாம் விவசாயத்தின் வருகைக்கு முன் நடந்தவை. விவசாயத்திற்கு முன்பாக தானிய பயிர்களை அவர்கள் வளர்க்க ஆரம்பித்தனர்.

அப்போது இருந்த ரொட்டிகள், பீட்டா பிரட் அல்லது சப்பாத்தி போல இருந்திருக்கக் கூடும். *

காலைக்கதிர் Kalaikkathir


# வடக்கு கல்விப் புலத்தில் நடந்து வரும் அக்கிரமம்

## சிறுவர் துஷ்பிரயோகத்தில் ஈடுபடும் ஆசிரியர்களை காப்பாற்றும் அதிகாரிகள்!

- தமிழரசன் -

வடமாகாணக் கல்விப் புலத்தில் கட்டுப்படுத்துவதற்கு யாருமற்ற நிலையில் சிறுவர் துஷ்பிரயோகங்கள் அதிகரித்துச் செல்கின்றன. சிறுவர்களைப் பாதுகாப்பவர்களே சிறுவர் துஷ்பிரயோகங்களில் ஈடுபட்டு வருகின்றார்கள். சிறுவர் துஷ்பிரயோகம் இடம்பெற்றால் அதில் பாதிக்கப்பட்ட சிறுவரைப் பற்றிச் சிறிதளவும் கருத்தில்கொள்ளாது அதனை மூடிமறைத்து சிறுவர் துஷ்பிரயோகக் குற்றச் செயலில் ஈடுபட்ட நபரை எப்படிப் பாதுகாக்கலாம் என்பதிலேயே கல்விப் புலத்திலுள்ள அதிகாரிகள் பலர் முயற்சித்து வெற்றிபெற்று வருகின்றார்கள். சிறுவர் துஷ்பிரயோகத்தில் ஈடுபட்ட குற்றவாளிகளைப் பாதுகாப்பது பிழை, அவர்களுக்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனக் கூறி நீதி நியாயப்படி நடக்கும் அதிகாரிகள் சிலர் முயன்றபோதிலும் அவர்கள் மேலதிகாரிகள், சக அதிகாரிகளின் வற்புறுத்தல், மிரட்டல் போன்றவற்றால் தடுக்கப்பட்டும் ஒத்துழைக்க மறுத்தமைக்காகப் பழிவாங்கப்பட்டும் உள்ளார்கள்.

சிறுவர் துஷ்பிரயோகக் குற்றச் செயல்களை மாணவர்கள் மூலம் ஆதாரங்களுடன் தமது உயரதிகாரிகளுக்குத் தெரியப்படுத்திய ஆசிரியர்கள் பலர் பல்வேறுபட்ட வழிகளில் பழிவாங்கப்பட்டும் வேறு காரணங்களை முன்வைத்து அவர்களுக்குத் தொடர் தொல்லை கொடுக்கப்பட்டும் ஒதுக்கப்பட்டும் உள்ளார்கள். இதன் காரணமாக சிறுவர் துஷ்பிரயோகம் இடம்பெற்றால் அதனைக் கண்டும் காணாமல் செல்லும் நிலையே தற்போது காணப்படுகின்றது.

வடமாகாணத்தில் சிறுமிகள் துஷ்பிரயோகத்திற்குட்படுத்தப்பட்டுக் கொலை செய்யப்பட்ட சம்பவங்களே வெளிவருகின்றன. ஆனால் சிறுவர்கள் பாலியல் ரீதியாகவும் தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்கள் காரணமாக உடல், உள ரீதியாகவும் துன்புறுத்தப்பட்டுள்ள பல சம்பவங்கள், பாதிக்கப்பட்ட சிறுவர்களின் நன்மை கருதி என்னும் போர்வையில் மூடிமறைக்கப்பட்டு துஷ்பிரயோகக் குற்றவாளிகள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாது, சிறுவர் துஷ்பிரயோகக் குற்றவாளிகள் பாதுகாக்கப்பட்டு அவர்கள் தொடர்ந்தும் துஷ்பிரயோகச் செயல்களில் ஈடுபடுவதற்கான துணிவும் சந்தர்ப்பங்களும் ஏற்படுத்திக் கொடுக்கப்படுகின்றன.

யாழ்.மாவட்டத்திலுள்ள தெல்லிப்பழை பாடசாலை ஒன்றில் கற்பிக்கும் ஆசிரியர் ஒருவர் அங்கு தரம் 7 இல் கல்வி கற்ற 12 வயதுடைய 7 சிறுமிகளை துஷ்பிரயோகம் செய்ய முயன்றமையை சிறுமிகள் தமது பெற்றோருக்குத் தெரியப்படுத்தியுள்ளனர். ஆதனை பெற்றோர் உடனடியாகவே பாடசாலையின் அதிபருக்கு முறையிட்ட போது அதனை ஏற்க மறுத்த அதிபர் அதனை மூடிமறைத்து துஷ்பிரயோகக் குற்றவாளியான ஆசிரியரைக் காப்பாற்றுவதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தார். அதனை எதிர்த்து ஏற்க மறுத்த பாதிக்கப்பட்ட மாணவிகளின் பெற்றோர் வடமாகாணத்திலுள்ள அதிகாரிகளை நம்பாது கொழும்பிலுள்ள தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்கு அறிவிக்கப்பட்டதையடுத்தே குற்றவாளியான ஆசிரியர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டிருந்தார்.



அதிபரால் மூடி மறைத்து குற்றவாளியைக் காப்பாற்ற எடுக்கப்பட்ட முயற்சி அங்குள்ள பெற்றோர் படித்தவர்கள் என்பதாலும் குற்றவாளி தண்டிக்கப்பட வேண்டும் என்பதில் உறுதியாக நின்றமையாலும் துஷ்பிரயோகக் குற்றவாளி கைது செய்யப்பட்டிருந்தார். ஆனால் விடயம் விளங்காத படிக்காத பாமரப் பெற்றோருள்ள பல கிராமப்புறப் பாடசாலைகளில் நடைபெறுகின்ற சிறுவர் துஷ்பிரயோகங்கள் அதிபர் உள்ளிட்ட அதிகாரிகளால் மூடி மறைக்கப்பட்ட வண்ணமே உள்ளன.

சிறுவர் துஷ்பிரயோகங்களுக்கு எதிராகக் குரல்கொடுக்கின்ற ஆசிரியர்களும் வேண்டுமென்றே பல வழிகளிலும் பழி வாங்கப்பட்டு வருகின்றார்கள். சில பாடசாலைகளில் மாணவர்கள் மீது நிகழ்த்தப்படும் சிறுவர் துஷ்பிரயோகங்களுக்கு எதிராகக் குரல்கொடுத்த பல ஆசிரியர்கள் அதிபராலும் குற்றம் புரிந்த ஆசிரியராலும் அவருக்குச் சார்பான ஆசிரியர்களாலும் அதிகாரிகளாலும் துஷ்பிரயோகத்திற்கு எதிராகக் குரல் கொடுத்த ஆசிரியர் மீது வேறு வகையான குற்றச்சாட்டுக்களை உருவாக்கி பழிவாங்குவதுடன் அவர்களை பைத்தியம் என்று கூடக் கூறி அவமானப் படுத்திய சம்பவங்கள் பல இடம்பெற்றுள்ளன. இவை வெளிவராமல் இருந்து வருகின்றன.



### வட்டக்கச்சியில் அதிபரின் அடாவடி

கிளிநொச்சி மாவட்டத்தின் வட்டக்கச்சியின் மத்திய பகுதியில் அமைந்துள்ள ஒரு பாடசாலையில் அங்கு சமய பாடம் கற்பித்த ஆசிரியர் ஒருவர் மாணவிகள் சிலரிடம் தவறாக நடக்க முயற்சித்தமையை பாதிக்கப்பட்ட மாணவிகள் தமக்கு நம்பிக்கைக்குரிய பெண் ஆசிரியைகளிடம் தெரியப்படுத்தியுள்ளார்கள். அதனை அந்த ஆசிரியைகள் அப்பாடசாலை அதிபரிடம் கூறியுள்ளார்கள். அதற்கு அப்பாடசாலையின் அதிபர் அந்த ஆசிரியைகளைக் கடுமையாகக் கடிந்துகொண்டமையுடன் தமது பாடசாலையின் நற்பெயரைக் கெடுப்பதற்காகவும் ஒரு நல்ல சமய ஆசிரியர் மீது அபாண்டமான வீண் பழி போடுவதற்காகவும் அந்த ஆசிரியைகள் திட்டமிட்டுச் செயற்படுகிறார்கள் எனக் கூறி அந்த ஆசிரியைகள் கூறியதை ஏற்க மறுத்து நிராகரித்து அவர்களைக் கடுமையாக எச்சரித்து அனுப்பியிருந்தார். அப்பாடசாலையில் அந்த ஆசிரியரால் பாதிக்கப்பட்டு வரும் மாணவிகள் மீண்டும் ஆசிரியைகளிடம் முறையிட்டுள்ளதனைத் தாங்கிக்கொள்ள முடியாத அவர்கள் மீண்டும் அதே சம்பவத்தை அதிபரிடம் கூறியிருந்தார்கள்.

அப்போதும் அதனை ஏற்றுக்கொள்ள மறுத்த அதிபர் அதனை எழுதி எழுத்து மூலம் அவ்வாசிரியைகளைக் கையொப்பமிட்டு உறுதிப்படுத்தித் தருமாறு கேட்டுள்ளார். மேற்படி குற்றச்சாட்டை எழுதி ஆசிரியைகள் கொடுத்த சந்தர்ப்பத்தில் மாணவிகளால் குற்றம்சாட்டப்பட்ட சமய பாட ஆசிரியர் மீது விசாரணையோ, நடவடிக்கையோ ஏதுமின்றி கல்வித் திணைக்களத்திலுள்ள உயரதிகாரிகளது ஆதரவுடன் வேறு பாடசாலை ஒன்றுக்குத் திடீரென இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளார். இச்சம்பவம் கடந்த மூன்று மாதகாலப் பகுதியினுள் இடம்பெற்றுள்ளது.

## இடமாற்றம் செய்தால் திருந்தி விடுவரா?

தற்போது அந்தக் குற்றச்சாட்டுக்குரிய சமய பாட ஆசிரியர் இடமாற்றம் பெற்று வேறுபாடசாலைக்குச் சென்றுள்ளமையால் சீற்றமடைந்த அதிபர், பாதிக்கப்பட்ட மாணவிகளின் வாக்குமூலத்தில் முறைப்பாட்டைத் தெரிவித்த ஆசிரியைகளை, ஆசிரியைகள்தான் அந்த நல்ல ஆசிரியர் மீது இப்படியான அபாண்டமான குற்றச்சாட்டை முன்வைத்து அந்த நல்லாசிரியர் வேறுபாடசாலைக்கு இடமாற்றம் பெற்றுச் செல்லக் காரணமாக இருந்துள்ளீர்கள் எனக் குற்றம்சாட்டி அவர்களுக்கு கடும் நெருக்கீடுகொடுத்துவருகிறார் எனக் கூறப்படுகின்றது. கல்வித் திணைக்கள அதிகாரிகளே துஷ்பிரயோகக் குற்றச்சாட்டுள்ள ஆசிரியரைப் பாதுகாப்பதற்காகச் செயற்பட்டுள்ளமையால் அந்த ஆசிரியைகள் மிகவும் பயந்த நிலையில் உள்ளனர் என அறிய முடிகின்றது.


### இராமநாதபுரத்தில்

இதேவேளை இராமநாதபுரம் பாடசாலையில் கல்வி கற்பித்த வர்த்தக பாட ஆசிரியர் ஒருத்தர் 9ம் வகுப்பு மாணவி ஒருத்தியைப் பாடசாலையின் தனியான ஒரு பகுதிக்கு அழைத்துச் சென்று அச் சிறுமியை தன்னுடன் ப..... வருமாறு வெளிப்படையாகவே கேட்டு வற்புறுத்தியுள்ளார். இதனால் பயந்த சிறுமி அங்கிருந்து தப்பியோடி அதிபரிடம் சென்று முறையிட்டிருந்தாள். அதனை அதிபர் கிளிநொச்சி கல்வித் திணைக்களத்திற்குத் தெரியப்படுத்தியிருந்தார். இச்சம்பவமும் அரசியல் பின்புலத்துடன் மூடிமறைக்கப்பட்டு அதனால் அவர் தற்போது கிளாலியிலுள்ள பாடசாலைக்கு இடமாற்றம் பெற்றுச்சென்றுள்ளார். இச்சம்பவம் ஒரு சிறிய சம்பவம் எனவும் அதிபர் இதனைப் பெரிதுபடுத்தாது தனது ஆளுமையைப் பயன்படுத்திப் பாடசாலையுடன் தீர்த்திருக்கலாம் எனவும் அதிபர் அவசரப்பட்டு கல்வித் திணைக்களத்திற்கு முறையிட்டுள்ளார் எனச் சில தரப்பினரால் அதிபர் மீது குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

இதே போல வடமாகாணத்திலுள்ள இன்னொரு வித்தியாலயத்தில் ஆசிரியர் ஒருவர் சிறுமிகளுக்குப் பாலியல் தொல்லை கொடுத்து வருகின்றமையை அவதானித்த ஆசிரியர் இருவர் அது தொடர்பில் அதிபரிடம் முறையிட்டபோது அதனைக் காதில் கேட்காதது மாதிரி இருந்த அதிபர் அந்த ஆசிரியர்களை நோக்கி உங்களுக்கு இதுதானோ வேலை? உங்களுக்கு வேறு வேலையில்லையோ? என அப்படி ஏதாவது நடந்தால் அதை ஒழுக்கக்குழு பொறுப்பு ஆசிரியர்கள் பார்த்துக் கொள்வார்கள். நீங்கள் உங்கள் வேலையை மட்டும் பார்த்தால் போதும் என கடும் தொனியில் கூறியுள்ளார்.

பாதிக்கப்படும் சிறுமிகளுக்காக மீண்டும் அந்த ஆசிரியர்கள் அதிபரைச் சந்தித்து இது பற்றிக் கூறிய போது விரல்களையும் காண்பித்து இதிலுள்ள ஐந்து விரல்களும் ஒரேமாதிரி இருக்கின்றனவா? கையிலுள்ள ஐந்து விரல்களும் ஒரே மாதிரி இருக்க வேண்டும் என நாம் நினைப்பது முட்டாள்தனம். ஆனால் இந்த ஐந்து விரல்களும் எமக்கு முக்கியம். அதே போலத்தான் அவரும் எமக்கு முக்கியம். அவர் எப்படியென்றாலும் இருந்து விட்டுப் போகட்டன். அது அவருக்குரிய பேர்சனல். இது உங்களுக்குத் தேவையில்லாத ஒன்று. இதை நீங்கள் எங்கு முறையிட்டாலும் அவர்களும் இது வெளிவருவதை விரும்பமாட்டார்கள். இதை நீங்கள் தூக்கிப் பிடித்து அதிகாரிகளைப் பகைத்துக் கொண்டால் பாதிக்கப் படப்போவது நீங்கள்தான். உங்களது நன்மை கருதித்தான் நான் சொல்லுறன் இதைப் பேசாமல் இப்படியே விட்டு மறந்திடுங்கள், நீங்கள் இப்பதானே இந்தத் துறைக்குள் வந்திருக்கிறியள். காலப் போக்கில் எல்லாம் சரிவரும், அப்போது சமூகத்தோடு இசைவாக்கப்பட்டு விடுவீர்கள். இப்ப உங்களுக்கு அனுபவம் காணாது எனக் கூறப்பட்டுள்ளது.

ஆனாலும் ஆசிரியர்கள் அதனை ஏற்க மறுத்து முரண்டு பிடித்துள்ளார்கள். அதனைத் தொடர்ந்து அந்த ஆசிரியர்கள் அதிபரால் மாத்திரமல்லாமல் துஷ்பிரயோக ஆசிரியராலும் ஆசிரியர்களுக்கான பொறுப்புக்கள் அதிகரித்துத் திணிக்கப்பட்டு பழிவாங்கப்பட்டு வருகின்றார்கள். இதனால் மிகுந்த மன உளைச்சலுக்குள்ளாகியுள்ள அந்த ஆசிரியர்கள் இவ்விடயத்தை வெளியிலும் சொல்ல முடியாத நிலையில் மிகுந்த வேதனையுடன் உள்ளார்கள். (14 ஆம் பக்கம் பார்க்க)



# தூக்கிலிட கயிறு இருக்கிறது கையில்!

## அலுகோசு இல்லையே!!

இலங்கை சிறைச்சாலையில் மரணதண்டனையை அமுல்படுத்துவதற்கான (தூக்கில் இடுவதற்கான) கயிறு தயாராக இருக்கின்றது. எனினும், அதனை இயக்குவதற்கான "அலுகோசு" ஊழியர்கள் இல்லை என்று சிறைச் சாலைப் பேச்சாளர் துஷார உபுல் தெனிய தெரிவித்தார்.

இலங்கையில் மரணதண்டனையை நடைமுறைப்படுத்துவது குறித்து நீண்ட காலமாக பேசப்பட்டு வருகிறது. போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபட்டு, குற்றவாளியாகக் காணப்பட்டு, மரண தண்டனை விதிக்கப்பட்டவர்களுக்கு அதனை அமுல்படுத்த அமைச்சரவை இணக்கம் கண்டுள்ளது. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கொண்டு வந்த தீர்மானத்திற்கே அமைச்சரவை இணங்கியுள்ளது. எனினும், மரண தண்டனையை அமுல்படுத்துவதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இது வரை உத்தியோகபூர்வமாக எவ்வித ஆவணத்திலும் கையெழுத்திடவில்லை.

''போதைப்பொருள் வியாபாரம் செய்த குற்றத்திற்காக மரண தண்டனை பெற்றுள்ள குற்றவாளிகள் சிறையில் இருந்து கொண்டு போதைப்பொருள் வியாபாரத் தில் ஈடுபடுகின்றனர். நாட்டில் போதைப் பொருளை விநியோகிக்கின்றனர்.'' என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கண்டியில் கடந்த வாரம் நடந்த நிகழ்வொன்றில் தெரிவித்தார்.

எனினும், மரண தண்டனையை இலங்கையில் மீண்டும் அமுல்படுத்துவதற்கு எதிர்ப்புகளும் கிளம்பியுள்ளன.

"போதைப்பொருள் வர்த்தகம் செய்த குற்றவாளிகள் என நிரூபிக்கப்பட்டு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள 18 கைதிகள் இலங்கை சிறையில் உள்ளனர். இவர்களைத் தவிர வெளிநாட்டவர் சிலரும் இருக்கின்றனர்" என்று சிறைச்சாலைகள் திணைக்களத்தின் பேச்சாளர் துஷார உபுல்தெனிய தெரிவித்தார்.

இலங்கையில் நடைமுறையில் இருந்த மரண தண்டனை இடைநிறுத்தப்பட்ட 1970ஆம் ஆண்டுகளின் பின்னர், பல குற்றங்களுக்காக மரண தண்டனை விதிக்கப்பட்ட 363 கைதிகள் சிறைகளில் இருக்கின்றனர். மரண தண்டனை விதிக்கப்பட்டு, அந்தத் தீர்ப்பிற்கு எதிராக மேல்முறையீடு செய்துள்ள மேலும் 871 பேர் சிறைகளில் உள்ளனர் என்று சிறைச்சாலைப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.



இலங்கையில் உள்ள சிறைகளில் வெலிகடை சிறைச்சாலையில் மட்டுமே தற்போது மரண தண்டனையை அமுல்படுத்தும் ஏதுநிலை இருப்பதாக சிறைச்சாலைப் பேச்சாளர் தெரிவித்தார்.

மரண தண்டனை மீண்டும் அமுல்படுத்தப்பட்டால், அதற்குத் தயாராகும் பணிகளை சிறைச்சாலை திணைக்களம் 2013ஆம் ஆண்டு முன்னெடுத்திருந்தது. தூக்கிலிடப் பயன்படுத்தும் கயிறு கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. எனினும், மரண தண்டனையை அமுல்படுத்த "அலுகோசு" என்றழைக்கப்படும் தூக்குத் தண்டனை மேடையில் பணியாற்றும் ஊழியர்களுக்கான வெற்றிடம் நிலவுகிறது. இதற்கு முன்னர் பலர் இந்தப் பணிகளுக்காக உள்வாங்கப்பட்டனர்.

எனினும், அவர்கள் இடைவிலகிச் சென்றனர். 'அலுகோசு' பதவிக்கு ஆட்களை இணைத்துக்கொள்வதில் சிரமம் இருக்கிறது. 2013ஆம் ஆண்டு இருவர் அலுகோசு பணிக்காக இருவர் இணைத்துக் கொள்ளப்பட்டனர். அவர்கள் திடீரென இடைவிலகிச் சென்றனர். அதன்பின்னர் 2014ஆம் ஆண்டு மார்ச் மாதம் இன்னுமொருவர் நியமிக்கப்பட்டார். ஒருவார கால பயிற்சியின் பின்னர் அவரும் இடைவிலகிச் சென்றார். மரண தண்டனையை அமுல்படுத்துவது என அரசாங்கம் இறுதித் தீர்மானம் எடுத்தால் அவர்களை இணைத்துக் கொள்வோம். என்று சிறைச்சாலைத் திணைக்களப் பேச்சாளர் துஷார உபுல்தெனிய தெரிவித்தார்.

பெரியளவிலான போதைப்பொருள் வியாபாரமும், மோசமான திட்டமிட்ட குற்றச்செயல்களும் நாட்டில் அதிகரித்து வரும் நிலையில், மரண தண்டனையை மீண்டும் நடைமுறைப்படுத்துவது குறித்து அண்மைக்காலமாக நாட்டில் விவாதிக்கப்பட்டு வருகிறது.

ஹோகந்தர படுகொலை, மேல் நீதிமன்ற நீதிபதி சரத் அம்பேபிட்டிய கொலை, ஆறு வயதுச் சிறுமி சிவனேஸ்வரன் றெஜினா கொலை, பாடசாலை மாணவி சிவலோகநாதன் வித்தியா பாலியல் பலாத்காரம் மற்றும் கொலை ஆகிய சம்பவங்கள் சமூகத்தில் பெரிய அதிர் வலைகளை ஏற்படுத்தியுள்ளன. இவ்வாறான குற்றங்களைத் தடுக்க மரண தண்டனையை மீள அமுல்படுத்த வேண் டும் என்ற வலுவான கருத்து சமூகத்தின் ஒரு தரப்பினர் மத்தியில் மேலெழுந்துள்ளது.

மரண தண்டனையை அமுல்படுத்த வேண்டும் என்று சமூகத்தில் எழுந்த கோரிக்கைக்கு சாதகமாக தனது முதலாவது அறிவிப்பை 2015ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் தற்போதைய ஜனாதிபதி வெளியிட்டிருந்தார். நாடாளுமன்றம் அனுமதி வழங்கினால், மரண தண்டனையை மீண்டும் அமுல்படுத்துவதாக ஜனாதிபதி அப்போது தெரிவித்திருந்தார்.


எனினும், இலங்கையில் மரண தண்டனையை தடைசெய்வதே அரசாங்கத்தின் எதிர்பார்ப்பு என அப்போது வெளிவிவகார அமைச்சராக பதவி வகித்த ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர, ஐ.நா. மனித உரிமைகள் கூட்டத்தொடரில் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில், மரண தண்டனையை அமுல்படுத்த வேண்டும் என்ற ஜனாதிபதியின் யோசனைக்கு தற்போது அமைச் சரவை இணக்கம் தெரிவித்திருந்தாலும், அமைச்சரவையில் உள்ள அமைச்சர்கள் சிலர் தனிப்பட்ட ரீதியாக மரணதண்டனையை எதிர்க்கிறோம் என செய்தியாளர்கள் முன்னிலையில் தெரிவித்துள்ளனர்.

> இலங்கையில் நடைமுறையில் இருந்த மரண தண்டனை இடைநிறுத் தப்பட்ட 1970ஆம் ஆண்டுகளின் பின்னர், பல குற்றங்களுக்காக மரண தண்டனை விதிக்கப்பட்ட 363 கைதிகள் சிறைகளில் இருக்கின்றனர். மரண தண்டனை விதிக்கப்பட்டு, அந்தத் தீர்ப்பிற்கு எதிராக மேல்முறையீடு செய்துள்ள மேலும் 871 பேர் சிறைகளில் உள்ளனர் என்று சிறைச்சாலைப் பேச்சாளர் தெரிவித்தர்.

இது இவ்வாறிருக்க, இலங்கையில் மரண தண்டனையை மீண்டும் அமுல் செய்வதற்கு சர்வதேச மன்னிப்புச் சபை தனது அதிருப்தியை வெளியிட்டுள்ளது. மரண தண்டனையை மீண்டும் அமுல் செய்வதன் மூலம் 40 வருடங்களுக்கு மேலாக இலங்கைக்கு இருக்கும் நற்பெயருக்கு களங்கம் ஏற்படும் என இது குறித்து பேசிய சர்வதேச மன்னிப்பு சபையின் தெற்காசிய வலயத்திற்குப் பொறுப்பான பிரதி பணிப்பாளர் தினுஷிகா திசாநாயக்க தெரிவித்தார்.

2016ஆம் ஆண்டு அதிக மரண தண்டனை நிறைவேற்றப்பட்ட நாடுகளின் பட்டியலில் சீனா முதலிடத்தில் இருப்பதாக சர்வதேச மன்னிப்புச் சபை



(Amnesty International) 2017ஆம் ஆண்டு இறுதியில் வெளியிட்ட அறிக்கையில் சுட்டிக் காட்டியுள்ளது. தரவுகளை உறுதிப்படுத்திப் பெறுவதில் சிரமங்கள் இருந்தன என்றும், எனினும், மரண தண்டனை விதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை ஆயிரத்தைத் தாண்டியிருந்தது என்றும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்தப் பட்டியலில் ஈரான் இரண்டாம் இடத்தில் இருந்ததாகவும், அங்கு 567 பேருக்கும், சவுதி அரேபியாவில் 154 பேருக்கும், ஈராக்கில் 88 பேருக்கும் மரணதண்டனை நிறைவேற்றப்பட்டதாகவும் சர்வதேச மன்னிப்புச் சபை சுட்டிக்காட்டியுள்ளது.

தெற்காசிய வலய நாடுகளில் 2016 ஆம் ஆண்டு அதிக மரண தண்டனை நிறைவேற்றப்பட்ட நாடுகளில் பாகிஸ்தான் முதலிடம் வகிப்பதாக (87 பேருக்கு) அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இதனைத் தவிர பங்களாதேஷில் 10 பேருக்கு மரணதண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது.

2016ஆம் ஆண்டு இறுதியில் உலகில் 141 நாடுகளில் மரண தண்டனை இரத்துச் செய்யப்பட்டுள்ள நிலையில் 57 நாடுகளில் மரண தண்டனை அமுலில் இருப்பதாக அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. *




# கல்விக் கதிர் வெளியீடு 07

## தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கான மாதிரி வினாத்தாள்

### பகுதி - I

12. **தரப்பட்ட கவிதையைக் கொண்டு வினாக்களுக்கு உரிய விடையை தெரிவுசெய்க**

மென்மையும் வெண்மையும் கொண்ட
மணந்தரும் மல்லிகை மலர்களாம்
துள்ளிடும் பிள்ளைகள் உள்ளம்
கள்ளமே இல்லாத இல்லம்

13. இக்கவிதை கூறுவது
    1. மல்லிகை மலர்கள் பற்றி
    2. மல்லிகை மலர்களின் இயல்பு பற்றி
    3. சிறு பிள்ளைகளின் உள்ளம் பற்றி

14. கள்ளமே இல்லாத என்பதன் கருத்து
    1. வஞ்சகம் அற்ற
    2. சூதுவாதுமிக்க
    3. உற்சாகம் நிறைந்த

**வேறுபட்ட சொல்லின் கீழ்க் கோடிடுக.**

15. கால், கை, விரல், உடல், மூக்கு

16. விமானம், பரசூட், உலங்குவானூர்தி, ஈருருளி, செய்மதி

17. A இன் தந்தை B இன் மகனெனின் A ஆனவர் Bஇற்கு என்ன உறவு முறை.
    1. மகன்  2. பாட்டன்  3. பேரன்

18. மரங்களைச் செதுக்கப் பயன்படுத்தத்தக்க மிக உகந்த உபகரணம்
    1. துறப்பணம்  2. உளி  3. சீவுளி

19. நோயாளி ஒருவருக்கு 30 நிமிடங்களுக்கு ஒரு தடவை ஒன்று வீதம் உட்கொள்வதற்கு ஐந்து மருந்து வில்லைகள் வழங்கப்பட்டன. வில்லைகளை உட்கொள்ள நோயாளிக்கு எடுக்கும் மொத்த நேரம் யாது?
    1. 2 மணித்தியாலம்
    2. 2 மணித்தியாலம் 30 நிமிடம்
    3. 3மணித்தியாலம்

20. பிழையான கோவையைத் தெரிவு செய்க
    1. 4 X 9 + 4 = 40
    2. 4 X 8 + 8 = 40
    3. 7 X 5 - 5 = 40

21. 6. பெறுமதி கூடிய உரோமன் எண் யாது?
    1. XIX  2.XVIII  3.XX

22. 17.5அ சுற்றளவு உடைய வட்ட வடிவமான மைதானம் ஒன்றில் 1அ இடைவெளியில் மின் கம்பங்கள் நடுவதற்கு தேவையான மின் கம்பங்கள் எத்தனை?
    1. 5  2. 6  3. 4

23. குப்பையிலே போட்டாலும் குன்றி மணிமங்காது என்ற பழமொழியின் கருத்து
    1. நற்புகழ் என்றும் மங்காது
    2. கோபம் சிந்தனைனக்கு இடையுறு
    3. எது செய்தாலும் ஆராய்ந்தே செய்ய வேண்டும்

24. பின்வருவனவற்றில் ஆணி வேர்த் தாவரம்
    1. குரக்கன்  2. நெல்  3. பப்பாசி

25. உடையில் பட்டதற்க்கறையை அகற்ற மிக உகந்த பொருள்
    1. மண்ணெண்ணெய்  2. சவர்க்காரம்  3. எலுமிச்சம்பழம்

**1, 2, 3 ஆகியவற்றிற்குப் பதிலாகஎன்னும் எழுத்துக்களைப் பயன் படுத்தி பின்வரும் கணிப்புக்கள் செய்யப்பட்டன. இதற்கேற்ப வெற்றி டங்களுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து கோடிடுக.**

26. A+B = ......................
    1. A  2. C  3. B

27. C x A = ......................
    1. C  2. A  3. B

28. C- B = ......................
    1. A  2. B  3. C

29. முழு உருவத்தினதும் பரப்பளவு நிழற்றப்பட்டுள்ள பகுதியின் பரப் பளவின்
    1. இரு மடங்காகும்
    2. மூன்று மடங்காகும்
    3. நான்கு மடங்காகும்



## குருவின் நல்ல உள்ளம்



ஒருநாள், முனிவர் சித்தானந்தர் தம் சீடர்களுடன் நகரத்தின் தெருக்கள் வழியாக நடந்து கொண்டிருந்தார். அவர் சிறந்த ஞானி. எனவே, மக்கள் அவரை மிகவும் மதித்தனர். அவர் சீடர்கள் அவரைத் தொடர்ந்து சென்றனர்.

ஒரு பணக்கார பெண்மணியின் வீட்டருகே அவர்கள் நடந்தனர். அப்போது ஒரு சிறிய பெண் குழந்தை அந்த வீட்டிலிருந்து வெளியே வந்தது. குழந்தைகள் மேல் மிகுந்த அன்புடையவர் ஞானி. அவர் குழந்தையை அன்புடன் நோக்கினார்.

குழந்தை ஒரு தட்டு நிரம்ப ரோஜா மலர்களைக் கொண்டு வந்து சித்தானந்தர் அதை ஏற்றுக் கொள்ள வேண்டும் எனக் கேட்டுக் கொண்டது.

மலர்கள், மணம் தரும் பொருள்கள், தைலங்கள் என்றால் அவர் மிகுந்த மகிழ்ச்சி அடைவார் என்பது சீடர்களுக்குத் தெரியும். ஒரு ரோஜா மலரை மட்டும் எடுத்துக் கொண்டு தட்டை சீடர்களிடம் நீட்டினார். சீடர்களுக்கு சொல்லவா வேண்டும். தலைக்கு இரண்டு மூன்றாக அவர்கள் மலரை அள்ளிக் கொண்டனர்.

மலர்களை அர்ப்பணித்த குழந்தை மகிழ்ச்சியுடன் இல்லம் சென்றது. சீடர்கள் புடை சூழ சித்தானந்தரின் உலா தொடங்கியது.

ஒரு வயதான மூதாட்டி ஞானியை தன் வீட்டுக்குள் வரவேற்றாள். சீடர்கள் உள்ளே சென்று அமர்ந்தனர். ஒரு பணியாள் அப்பிள் பழத்தட்டை அவர் முன் வைத்தார். ஒரு பழத்தை எடுத்துச் சுவைத்தார் சித்தானந்தர். பழம் மிகவும் சுவையாக இருந்தது. அவைகளை எடுத்து தன் சீடர்களுக்கு வழங்கினார்.

சீடர்கள் பழங்களை சுவைத்து உண்டனர். ஞானியைத் தொடர்ந்து செல்வதால் அவர்களுக்கு அவ்வப்போது நல்ல சுவையான பொருள்கள் கிடைத்து வந்தன. எனவே, இந்த சந்தர்ப்பங்களை சீடர்களில் எவரும் தவறவிடுவதில்லை.

செல்வந்தர்கள் வாழும் வீதிகளை எல்லாம் அவர்கள் கடந்து சென்றனர். இப்போது வசதி குறைந்தவர்கள் இடம்; நகரின் ஒதுக்குப் புறமான பகுதி.

ஏழை விதவைப் பெண் ஒருத்தி அங்கே நின்று கொண்டிருந்தாள். அவள் ஞானியை தன் சிறிய வீட்டுக்கு வருமாறு அழைத்தாள். அவளது அழைப்பை மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டார். அவரும் சீடர்களும் உள்ளே சென்று அமர்ந்தனர்.

ஐயனே, நீங்கள் இதைச் சாப்பிட வேண்டும், என்று கூறி ஒரு தட்டை நீட்டினாள்.

தட்டைப் பெற்றுக் கொண்ட ஞானி அதில் திராட்சைப் பழங்கள் இருந்தமையைப் பார்த்தார். ஒரு பழத்தை எடுத்து வாயில் போட்டார். சுவைத்து உண்டார். சீடர்கள் பார்த்துக் கொண்டே இருந்தனர்.

மீண்டும் ஒரு பழத்தைப் பியத்து வாயில் போட்டு மென்று சுவைத்தார். இப்படியாக எல்லா பழத்தையும் தான் ஒருவராகவே தின்று தீர்த்தார். தங்களுக்கு அப்பழத்தை வழங்காமல் தானே உண்டதைக் கண்ட சீடர்கள் வியப்படைந்தனர்.

திராட்சைப் பழம் வழங்கிய ஏழைக் கைம்பெண்ணுக்கு நன்றி கூறினார் ஞானி. பின்னர் வெளியே வந்து நடக்கத் தொடங்கினார். சீடர்கள் அவரோடு நடந்தனர்.

சீடர்கள் முகத்தில் மாற்றம் ஏற்பட்டிருந்தது. இதுவரை எல்லா பொருள்களையும், உணவையும் பகிர்ந்து கொண்ட குரு திராட்சைப் பழங்களை மட்டும் தன்னந்தனியாய்த் தானே உண்டது ஏன்?' எல்லாருடைய உள்ளத்திலும் இக்கேள்வி எழுந்து நின்றது.

சீடர் ஒருவர் வாய் திறந்து இக்கேள்வியைக் கேட்டே விட்டார். நீங்கள் ஏன் தனியாகச் சாப்பிட்டீர்கள்? எங்களுக்கு ஒரு பழங்கூட தரவில்லையே! ஏன்?


அந்த திராட்சைப் பழம் மிகவும் புளிப்பாய் இருந்தது. எனவே, நான் ஒருவனாக அவற்றைத் தின்றேன், என்றார் குரு.

உங்களுடைய சுகத்திலும் துக்கத்திலும் நாங்கள் பங்கு கொண்டிருக்கிறோம். அப்படியிருக்க, சுவையற்றதை நீங்கள் தனியாக உண்ண வேண்டும்; சுவை மிகுந்ததை மட்டும் எங்களோடு பகிர்ந்துண்ண வேண்டுமா? இது நீதியாகுமா?

என்னுடைய சுகத்திலும் துக்கத்திலும் நீங்கள் பங்கு கொள்ள விரும்புவது உண்மையாக இருக்கலாம். ஆனால், இதில் ஓர் ஏழைக் கைம்பெண் இடையே இருக்கிறாள். அவள் தந்த திராட்சைப் பழங்களை உங்களுடன் பகிர்ந்து கொண்டால், இந்தப் பழம் புளிக்கிறது' என்று நீங்கள் சாப்பிடும் போதே சொல்லி விமர்சனம் செய்து அந்தப் பெண்ணின் மனதைப் புண்படுத்திவிடுவீர்கள். அவளது மனது படாத பாடு பட்டு நொந்து போய்விடும். அதனால் தான் திராட்சைப் பழங்களை உங்களுக்குத் தரவில்லை, என்று சொன்னார் முனிவர்.

எவருடைய மனதையும் புண்படுத்தக் கூடாது என்ற கருத்தில் தங்கள் குரு எத்தனை உண்மையாக இருக்கிறார் என்பதை அறிந்து மகிழ்ந்தனர் சீடர்கள்.

## 10 வித்தியாசம் கண்டுபிடியுங்கள்



# மாதச் சம்பளம் பெற்றதும் புத்தகக் கடைக்குச் செல்லும் குரும்பசிட்டி இரசிகமணி கனகசெந்திநாதன்

## காலமும் 01 கணங்களும்

## ஈழத்து இலக்கிய உலகில் எழுத்தாளர்களை ஊக்குவித்த நடமாடும் நூலகம்

லெ.முருகபூபதி — ஆஸ்திரேலியா

### முன்னுரை

இலங்கையிலிருந்த காலப் பகுதியிலும், ஆஸ்திரேலியாவுக்குப் புலம் பெயர்ந்த பின்பும், நான் மிகவும் நேசித்த பல கலை இலக்கிய வாதிகளையும் ஊடகவியலாளர்களையும் சமூகப்பணியாளர்களையும் அடுத்தடுத்து இழந்துவிட்டேன். எனினும் அவர்கள் நினைவுகளாக என்னுள்ளே வாழ்கின்றார்கள்.

நினைவுகளுக்கு இழப்பில்லை. அவை சாசுவதமானவை. எனது நேசர்களின் மறைவு துயரம்கப்பிய வெறுமையை என்னுள் ஏற்படுத்தியபோதிலும் – அவர்களை சந்தித்த காலமும் – உரையாடிய கணங்களும் என்றென்றும் ஊற்றாகச் சுரந்து பரவசப்படுத்திக் கொண்டே இருக்கின்றன. அவர்கள் என்னுடன் தொடர்ந்து பயணித்துக்கொண்டிருக்கும் குருட்டுணர்வுடன் கணங்களையும் காலத்தையும் கடந்து கொண்டிருக்கின்றேன்.

ஆஸ்திரேலியாவுக்கு 1987 இல் வந்த பின்னரும் எனது எழுத்துப்பணிகளைத் தொடர்ந்தபோது, பிரான்ஸிலிருந்து முன்னர் வெளியான பாரிஸ் ஈழநாடு இதழில் நெஞ்சில் நிலைத்த நெஞ்சங்கள் என்ற தலைப்பில் தொடர் ஒன்றை எழுதத் தொடங்கினேன்.

இந்த இதழின் ஆசிரியர் நண்பர் எஸ்.எஸ்.குகநாதன், கலை, இலக் கியவாதிகளைப்பற்றிய நினைவுகளைப் பதிவு செய்வதற்கு களம் அமைத்துத் தந்தார்.

இவற்றில் சில வெவ்வேறு இதழ்க ளில் மறுபிரசுரம் செய்யப்பட்டன எனவும் அறிந்தேன். நெஞ்சில் நிலைத்த நெஞ்சங்கள் என்ற அந்தத் தொடர் சிட்னியிலிருந்த எழுத்தாளர் மாத்தளைசோமுவை வெகுவாகக் கவர்ந்தமையால் தனது தமிழ்க்குரல் பதிப்பகம் ஊடாக நூல் வடிவில் வெளியிட விரும்பினார். விரும்பியவாறே பதிப்பித்தார்.

இந்த நூலுக்கு மெல்பனிலும் சிட்னியிலும் அறிமுகம் கிடைத்த சமயம், ஆரோக்கியமான வரவேற்பும் விமர்சனங்களினூடாக வந்தன.

ஒருவரது மறைவு, எமக்கு சோகத்தை தரும் பொழுது, எம்மை நாம் சுயவிமர் சனம் செய்து கொள்வதற்கும் அந்த இழப்பு வழி வகுக்கும் என நம்புபவன் நான்.

நெஞ்சில் நிலைத்த நெஞ்சங்கள் பதிவுகள் என்னை மட்டுமல்ல – அதனைப் படித்த வாசகர்களையும் சுயவிமர்சனம் செய்து கொள்வதற்கு தூண்டிவிட்டிருப் பது புலனாகியது.

அன்னப்பறவை பாலையும், தண்ணீரையும் பாகுபடுத்தும் ஆற்றல் மிக்க ஜீவராசியாம். அதுபோன்று நானும் கலை, இலக்கியவாதிகளின் மேன்மைகளை இனம் கண்டு, அதுபற்றி அறிந் திராதவர்களுக்கு சொல்லியிருப்பதாக மெல்பனில் நடந்த அறிமுகக் கூட்டத்திற்கு தலைமை தாங்கிய திருமதி. பாலம் லக்ஷ்மணன் அம்மையார் உரையாற்றும்போது சொன்னார்.

அந்தச் சபையில் இந்த உரையை செவிமடுத்த ஓவியர் ஐயா கே.ரி.செல்லத்துரை தமது கை வண்ணத்தில் ஓர் அன்னப்பறவையின் ஓவியத்தையே வரைந்து எனக்கு அன்பளிப்புச் செய்தார். எனது வீட்டுக்கு வரும் விருந்தினர்களை அந்த அன்னப் பறவை வரவேற்றுக் கொண்டிருக்கிறது.

சில கட்டுரைகள், கதை சொல்லும் பாணியிலமைத்திருப்பதாகவும் பேனாவால் எழுதப்படாமல் இதயத்தால் எழுதப் பட்ட எழுத்து என்றும் கருத்துக்கள் வந்து குவிந்தன.

எல்லோரும் பிறக்கிறார்கள், இறக்கிறார்கள் இது சொல்லித் தெரிய வேண்டியதில்லை. ஆனால், அந்த பிறப்புக்கும் இறப்புக்கும் இடைப்பட்ட வாழ்க்கை இருக்கிறதே. அது குறுகியதாகவும் – சிலருக்கு நீண்டதாகவும் அமைந்து விடும். பிறக்கும் போதே மரணம் நிச்சயமானது தான்.

அவர்கள் எவ்வளவு காலம் வாழ்ந்தார்கள் என்பது முக்கியமல்ல. வாழ்ந்த காலத்தில் எப்படிச் செயற்பட்டார்கள், அவர்களது வாழ்வும் பணியும் எத்தகையது என்பதையே என்போன்ற எழுத்தாளர்கள் பதிவு செய்வதற்கு முற்படுகிறார்கள்.

ஒரு படைப்பாளியின் இலக்கியத்தை மாத்திரம் படித்து விட்டுப் போகும் நிதானம் எனக்கு என்றைக்குமே இல்லை. குறிப் பிட்ட இலக்கிய சிருஷ்டி என்னை மிகவும் பாதித்துவிட்டால் அதனை படைத்தவரைத் தேடி எனது யாத்திரை தொடரும், படைப்பாளியை நேரடியாக அறியவேண் டுமென்ற பதற்றம் எனக்குள் பொறியாக கனன்று கொண்டிருக்கும்.

எழுதத் தொடங்கிய காலம்முதல் யாத்திரிகனாக அலையும் நான், தேடிச் சென்றவர்களும், என்னைத் தேடி வந்த வர்களும், எனக்குள் மனக்குகை ஓவியங்களாகிவிடுவர்.


இரசிகமணி கனகசெந்திநாதன்

கவிஞர் கண்ணதாசன் சொன்னார் : – மரத்தைப்பார், மரத்தில் பூத்துக் குலுங்கும் மலர்களை, காய், கனிகளை ரசித்துப்பார், முகர்ந்து பார், சுவைத்துப் பார். ஆனால், அந்த மரத்தின் வேரை மாத்திரம் பார்க்கத் துணியாதே. வேரைப்பார்க்க முனைந்தால் மரமே பட்டுப்போகும்.

உணவு விடுதிக்குச் சென்றால் அங்கே பசியாற உண்டுவிட்டு திரும்பிவிடவேண்டும். அந்த உணவை சமைத்தவரையோ அல்லது அந்த உணவு தயாரிக்கப்பட்ட சமையலறையையோ பார்ப்பதற்கு முயற்சிக்க வேண்டாம் எனவும் சொல்வார்கள்.

அது போன்று வாசகனுக்கும் படைப்பாளிக்குமிடையிலான உறவு எட்டத்தி லேயே இருந்து விட்டால் இரண்டு தரப்பாருக்கும் நல்லது எனக் கருதுகிறவர்களும் இருக்கிறார்கள்.


மேமன்கவி

ஆசிரியராக விருந்து எழுத்தாளராகஉயர்ந்தஎழுத்தாளர் பிராங்க் மக்கோட் ஐ சந்தித்தது பற்றிஎழுதுகிறார்கனடாவிலிருக்கும் நண்பர் எழுத்தாளர் அ. முத்து லிங்கம்.

அந்த சந்திப்பு கட்டுரையின் முடிவை இப்படிப்பதிவு செய்கிறார் : – அவரிடம் புத்தகத்தில் கையெழுத்து வாங்கினேன். சேர்ந்து படம் பிடித்துக் கொண்டேன். முற்றிலும் வேற்று ஆளாக இருந்தார். அவர் புத் தகங்களில் காணப்பட்ட கனிவும் நேசமும் அவரிடம் இல்லை. முகத்தில் வெறுப்பும் சலிப்பும் மட்டுமே எஞ்சி இருந்தன. நான் சந்தித்த மனிதர், அவருடைய புத்தகத்தைப் படிக்கும் போது என் மனத்திலே நான் எழுப்பிய உருவம் அல்ல.

ஓர் எழுத்தைப் படைத்தவரை சந்திக்காமல் இருப்பதே உத்தமம் என்று பல சமயங்களில் எனக்குத் தோன்றும். இனி மேல் மக்கோட்டை எங்கே கண்டாலும் அவர் இருக்கும் திசைக்கு எதிர் திசையில் போவேன். அவர் புத்தகத்தை எங்கே கண்டாலும் உடனே வாங்குவேன்.

இவ்வாறு 'வியத்தலும் இலமே' என்ற நூலில் எழுதியிருக்கும் அ.முத்துலிங்கம் இதுவரையில் நான் சந்தித்தது இல்லை. தொலைபேசியிலும் மின்னஞ்சலிலும் பேசிக் கொண்டிருக்கிறோம். எனது இலக்கிய யாத்திரையின் போது இவரையும் ஒருநாள் சந்திப்பேன் என்ற நம்பிக்கையுண்டு.

என் எழுத்தைப்பார், என்னைப் பார்க்க முனையாதே என ஒதுங்கியிருக்கும் 'தனியன்' குணமுள்ள படைப்பாளிகளும் இருக்கிறார்கள் என அறிகிறேன்.

எனக்கோ, ஒரு படைப்பைப் படிப்பதற்கோ, அதனைப் படைத்தவரை சந்தித்து தொடர்பை ஏற்படுத்தி இலக்கிய நட்பை உருவாக்கிக் கொள்வதற்கோ எத்தகைய சங்கடமும் நேர்ந்ததில்லை. நான் படித்த படைப்புகளும் அப்படி, சந்தித்தவர்களும் அப்படி.

இலங்கையில் சிங்களப் பிரதேசக் கிராமம் ஒன்றில் தமிழ் இலக்கிய அபிமானியாக திகழ்ந்த வண.ரத்னவன்ஸ தேரரைத் தேடிக் கொண்டு சென்று அன்பு பாராட்டிய போது இருந்த மனநிலையுடன் தான் – தமிழ்நாட்டில் கோவில்பட்டிக்கு அருகில் இடைசெவல் என்ற கரிசல்காட்டில் கி.ராஜ நாராயணனையும் – குரும்பசிட்டியில் அந்த செம்பாட்டு ஒழுங்கையூடாக நடந்துசென்று கனக செந்திநாதனையும் ருஷ்யாவில் மொஸ்கோவில் கட்டடக்காடுகளுக்கிடையே விதாலிஃபூர்ணிக்காவையும் – மரச்சோலைக்கு நடுவே அளவெட்டியில் ஓலை வேய்ந்த குடிலில் அ.செ.முருகானந்தனையும் – வடமராட்சி வதிரியில் பனந்தோப்புகளுக் கிடையில் ராஜஸ்ரீகாந்தனையும் தேடிச் சென்று சந்தித்தேன். இந்த ஓட்டம் ஓயாது

இந்தத் தொடருக்கு காலமும் கணங்களும் பொருத்தமான தலைப்பாக எனது மனதுக்குப்பட்டது.

காலம் ஓடிக்கொண்டே இருக்கிறது. கணங்கள், காலத்தில் பதிவாகிக் கொண்டே பரவசப்படுத்தும். வட இலங்கை குரும்பசிட்டியில் பிறந்து, வாழ்ந்து ஈழத்து இலக்கிய வளர்ச்சிக்கு வளம் சேர்த்த எங்கள் மூத்த படைப்பாளி இரசிகமணி கனகசெந்தி நாதனிலிருந்து காலமும் கணங்களும் தொடரை ஆரம்பிக்கின்றேன்.


லெ.முருகபூபதி – ஆஸ்திரேலியா
அன்புடன்

### இரசிகமணி கனசெந்தி நாதன்

ஆஸ்திரேலியா சிட்னியிலிருந்து 24 மணிநேரமும் ஒலிபரப்பாகும் அவுஸ்திரேலியா தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் வானொலியில் எழுத்தும் எழுத்தாளரும் என்ற நிகழ்ச்சிக்காக (நேரடி ஒலிபரப்பு) என்னைபேட்டிகண்ட குறிப்பிட்ட வானொலி ஒலிபரப்பு ஊடகவியலாளர் நண்பர் செ.பாஸ்கரன் பேட்டியின் இறுதியில், ஒரு கேள்வி – ஆனால் ஒரே பதில் தரவேண்டும் என்றார்.

கேளுங்கள் என்றேன்.

உங்களுக்குப் பெரிதும் பிடித்தமான தமிழ் எழுத்தாளர் யார்....? – இதுதான் கேள்வி. என்னை மிகவும் தர்மசங்கடத்திற்குள்ளாக்கிய கேள்வி. உடனடியாக பதில் சொல்ல சற்று தயங்கினேன்.



கருத்து முரண்பாடுகளுக்கு அப்பாலும் எனக்குப் பிடித்தமான பல எழுத்தாளர்கள் இருக்கிறார்கள். ஆனால் – எனக்குப்பிடித்த ஓர் எழுத்தாளரின் பெயரையும் ஏன் அவரை எனக்குப் பிடித்தது என்றும் சொல்ல வேண்டும். சில கணங்கள் யோசிக்கவைத்த கேள்வி அது.

எனது மௌனத்தைப் பார்த்துவிட்டு மீண்டும், உங்களுக்குப் பிடித்தமான தமிழ் எழுத்தாளர் யார்...? சொல்லுங்கள் என்றார் பாஸ்கரன்.

எனக்குப் பெரிதும் பிடித்தமான எழுத்தாளர் குரும்பசிட்டி இரசிகமணி கனக செந்திநாதன் எனச் சொன்னேன். உடனே அவர் தனக்குப் பிடித்தமான எழுத்தாளர் மு.தளையசிங்கம் என்றார். எனக்கும் அவரை நன்கு பிடிக்கும் என்றேன்.

### ஏன் எனக்கு கனகசெந்திநாதனைப் பிடித்தது....?

அவர் இலங்கையில் வடபுலத்தில் குரும்பசிட்டி என்ற கிராமத்தில் வாழ்ந்தவர். ஆசிரியராக பணியாற்றிய எழுத்தாளர். இலக்கிய விமர்சகர். தனது வீட்டில் பெரிய நூலகம் வைத்து தானும் பயனடைந்து – சக எழுத்தாளர்களையும் பயனடைய வைத்தவர். நடமாடும் நூலகம் என அழைக்கப்பட்டவர். தொலைதூரத்தில் – இலங்கையின் மேற்கே நீர்கொழும்பில் இருந்த என்னை அவர் பெரிதும் கவர்ந்தமைக்கு என்ன காரணம்.? வாசகர்களே – இனி இதனைப் படியுங்கள் . உங்களின் மனக்கண்ணில் அந்தக்காட்சி விரியும்.




நாகம்மா.... ஒரு தாம்பாளமும் செவ்வரத்தம் பூவும் கொண்டு வாரும் குரல் கேட்டு ஓடோடி வருகின்றார் எங்கள் இரசிகமணி கனகசெந்தியின் மனைவி. எம்மைப் பார்த்து அமைதியான புன்னகை.

இவரைத் தெரியும் தானே...? இது முருகபூபதி. இவர் தம்பி செல்வம். இவர் தம்பையா. இங்க பாரும்.... இன்றைக்கு எங்கட வீட்டுக்கு ஒரு தமிழரல்லாத தமிழ்க் கவிஞர் வந்திருக்கிறார்... இவர்தான் மேமன்கவி.

கனகசெந்திநாதன் அமர்ந்தவாறு அனைவரையும் இல்லத்தரசிக்கு அறிமுகப்படுத்துகிறார். மேமன்கவி எழுந்து அந்தத் தாயை வணங்குகிறான்.

இருங்கோ.... என்ன .... கூப்பிட்டியள்.... கணவன் பக்கம் முகம் திருப்புகிறார்.

என்ன! விளங்கவில்லையோ..... கெதியாய்போய்..... தாம்பாளமும் வாசலில் ஒரு செவ்வரத்தம் பூவும் பறித்துக் கொண்டு வாரும் கனகசெந்தி மீண்டும் கட்டளை பிறப்பிக்கின்றார்.

அம்மையாரும் கணவரின் கட்டளையை நிறைவேற்றிவிட்டு பவ்வியமாக ஒதுங்கி நிற்கிறார். அழகிய பித்தளைத் தாம்பாளத்தில் செவ்வரத்தம்பூ சிரிக்கின்றது.

தம்பி அந்த மலருக்குப் பக்கத்தில் உமது கவிதை மலரை வையும்.

(19 ஆம் பக்கம் பார்க்க...)

# வடக்கு கல்விப் புலத்தில்...

(10 பக்கத் தொடர்ச்சி)

மற்றும் கிளிநொச்சி புளியம்பொக்கணைப் பகுதியிலுள்ள பாடசாலை ஒன்றின் அதிபர் அப்பாடசாலையில் தங்கி நின்று பணிபுரிந்த காலப்பகுதியில் பாட சாலையிலிருந்து குறிப்பிட்ட தொலைவிலுள்ள வீடொன்றில் இரவு நேர வகுப்புக்கள் நடத்த ஒழுங்குகள் செய்து கொடுத்துள்ளார். இரவு நேர வகுப்புக்குச் செல்லும் மாணவி ஒருத்தியை மாணவியினது வீட்டுக்குச் சென்று அந்த அதிபரே இரவில் தனது மோட்டார் சைக்கிளில் ஏற்றிச் சென்று வகுப்பில் இறக்கி விடுவார் மீண் டும் இரவில் ஏற்றிச் சென்று வீட்டில் இறக்கி விடுவார். அதிபர் இரவு வகுப்பு முடிந்ததும் மாணவியை சாப்பாட்டுக் கடைக்குப் போவதாகக் கூறி வேறு எங்கோ ஏற்றிச் சென்றமையையும் பாடசாலையில் அம் மாணவியுடன் அதிபர் தகாத வார்த்தைகளில் உரையாடி வருகின்றமையை ஆதாரங்களுடன் அவதானித்த மாணவர்களும், பழைய மாணவர்களும் பொறுப்பான அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தியும் நடவடிக்கை எடுக்காத நிலையில் அதிபருடன் நேரடியாகவே முரண்பட்டதனைத் தொடர்ந்து விடயம் மூடி மறைக்கப்பட்டு அந்த அதிபர் பத்திரமாக பளைப்பகுதிப் பாடசாலை ஒன்றுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.



முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள ஒரு பாடசாலையில் மாணவி ஒருத்தியை மாணவிக்கான குறித்த பாடச் செமினார் என்று கூறிப் பொய் சொல்லி பாடசாலை நேரத்தில் தனது மோட்டார் சைக்கிளில் ஏற் றிச் சென்ற ஆசிரியர் ஒருவர் மாணவியுடன் காட்டுப் பகுதியி லுள்ள வீடொன்றில் கண்டு பிடிக்கப்பட்டிருந்தார். இவ்விடயம் தொடர்பிலும் மாணவியின் உறவினர்களால் குறித்த பாடசாலை அதிபருக்குத் தெரியப்படுத்தப்பட்ட போது அதனை அதிபர் முதலில் ஏற்றுக்கொள்ளாது உதாசீனம் செய்திருந்தார்.

### இரவு நேர வகுப்புகள்

வடமாகாணத்தின் முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா மாவட்டங்களிலுள்ள பல கிராமப் புறங்களில் சில பாடசாலை அதிபர்களது அனுசரணையுடன் இரவு நேர வகுப்புக்கள் நடைபெற்று வருகின்றன. இவ்வகுப்புக்கள் இரவு 7.00 மணி முதல் இரவு 11.00 மணி வரைக்கும் வாரத்தில் 7 நாள்களும் நடைபெற்று வருகின்றன. இவ்வகுப்புக்களுக்குச் சில மாணவ மாணவிகள் தமது பெற்றோருடன் சென்றாலும் பலர் இரவில் தனியாகவே வீதியால் சென்று வருகின்றார்கள். இதே வேளை சில இடங்களில் அதிகாலை 3.30 மணிக்குக் கூட தனியார் வகுப்புக்கள் பலரது வற்புறுத்தல்களுக்கு மத்தியில் நடைபெற்று வருகின்றன. இதனால் மாணவர் கள் சுயமாகக் கற்க முடியாத நிலை காணப் படுகின்றது. கல்விக் கொள்கைகளுக்கு முற்றிலும் மாறுபட்ட நிலையில் பணத்திற்காக மாணவர்களைப் பலியிடுவதாகக் காணப்படும் இரவு நேர வகுப்புக்களை வடமாகாணத்திலுள்ள எந்தவொரு அதிகாரியோ அல்லது மாகாணக் கல்வி அமைச்சரோ கருத்தில் எடுப்பதாகத் தெரியவில்லை. இவ்வகுப்புக்கள் அனைத்தும் பணம் பெறும் நோக்கம் கருதி ஆசிரியர் அல்லாத சிலராலும் நடத்தப்பட்டு வருகின்றன. இதில் இவ்வகுப்புக்களுக்கு அனுசரணை வழங்கும் அதிபர்கள் சிலருக்கு மாதாந்தம் ஒரு தொகைப் பணம் மேற்பார்வைக்காக என்னும் பெயரில் வழங்கப்பட்டு வருகின்றது. ஆனால் அதிபர்கள் மேற்பார்வை செய்வதற்காக இரவில் செல்வதில்லை. இரவு நேர வகுப்புக்கு மாணவர்களைச் செல்லுமாறு வற்புறுத்துவதே அவர்களது பணி.

கட்டமைக்கப்பட்ட பாடசாலைகளில் பொறுப்புள்ள பலர் இருந்தும் பகல் நேரங் களிலேயே மாணவிகளுக்குப் பாதுகாப்பில்லாமல் துஷ்பிரயோகங்கள் நடைபெற்று வருகின்றன. இந்நிலையில் இரவு நேர வகுப்புக்களில் இருட்டில் என்ன நடைபெறுகின்றது என்பதே வெளியில் தெரியாமலுள்ளது. இரவில் இருட்டில் வகுப்புக்கள் நடைபெறுவதனால் கல்வி அமைச் சருக்குக்கூடத் தெரியாமலுள்ளது.

சில தனியார் கல்வி நிலையங்கள், மத நிறுவனங்கள் பாடசாலை மாணவர்களை சுற்றுலா என்று கூறி அழைத்துச் சென்று ஐந்து ஆறு நாள்கள் பாதுகாப்பற்ற நிலையில் தங்கியிருக்கும் சந்தர்ப்பங்களும் உரிய அதிகாரிகளாலோ மாகாணக் கல்வி அமைச்சராலோ கண்டுகொள்ளாத நிலை காணப்படுகின்றது. இப்படியான சந்தர்ப்பங்களில் பல துஷ்பிரயோகச் சம்பவங்கள் இடம்பெற்று வெளிவராது மூடிமறைக்கப்பட்டுள்ளன.

இப்படியாக வடமாகாணக் கல்விப்புலத்தில் சிறுவர் துஷ்பிரயோகச் செயல்கள் அதிகரித்துச் செல்கின்றன. இது தற்போது சாதாரண விடயமாகவே நோக்கப்பட்டு நடவடிக்கை ஏதுமின்றிக் காணப்படுகின்றது. சிறுவர் பாதுகாப்பு அமைப்புக்களும் இவ்விடயத்தில் அக்கறை செலுத்துவதில்லை. இவ்விடயங்களை வெளிக்கொண்டுவர முயல்பவர்களை இனங்கண்டு அவர்களை ஒழித்துக்கட்டும் நடவடிக்கைகள் தொடர்வதால் இதனை யாரும் கண்டுகொள்வதில்லை.

வடக்கில் மோசமாக அதிகரித்துச் செல்லும் சிறுவர் துஷ்பிரயோகக் குற்றச் செயல் களைத் தடுப்பதற்கு உடனடியாகவே நடவடிக்கையில் இறங்க வேண்டிய வடமாகாணக் கல்வி அமைச்சு கண்மூடி தூக்கத்தில் இருக்கின்றது. இதில் மத்திய கல்வி அமைச்சு உடனடியாகத் தலையிட்டு உரிய கவனம் செலுத்தி இதற்குத் தகுந்த நட வடிக்கை எடுக்க முன்வர வேண்டும் என் பது பலரதும் எதிர்பார்ப்பாகவுள்ளது. ✽







# பிசாசு நகரம்; செல்லத் துடிக்கும் சுற்றுலாப் பயணிகள்!

## எச்சரிக்கிறது ஆஸி.அரசு

ஆஸ்திரேலியாவில் கல்நார் சுரங்கம் 1970 ஆம் ஆண்டு மூடப்பட்டது. இந்தச் சுரங்கம் ஆஸ்திரேலியாவின் பெர்த் திற்கு வடக்கே 1,100 கிலோ மீற்றர் தொலைவில் அமைந்திருக்கிறது. இதனைச் சிலர் பிசாசு நகரம் என்று அழைக்கின்றனர். ஒரு காலத்தில் இது பரபரப்பான சுரங்கப்பகுதியாக இருந்தது. தினமும் ஆயிரக்கணக்கானோர் இந்தச் சுரங்கத்தில் பணிபுரிந்தனர்.

ஆனால், துரதிருஷ்டமான ஒரு நாளில் கல்நார் சுரங்கத்தில் நடந்த விபத்தில் ஆயிரக்கணக்கான மக்கள் பலியானார்கள். அதனை தொடர்ந்து இந்த பகுதி சுற்றுச்சூழல் பாதிப்புக்கு உள்ளான பகுதியாக அறிவிக்கப்பட்டது. அந்தப் பகுதிக்குச் செல்வதும் தடை செய்யப்பட்டது.

செர்னோபில் மற்றும் இந்தியாவின் போபாலில் நடந்த விபத்தைவிட மோசமான விபத்து அது. ஆஸ்திரேலியா அரசாங்கம் பாதுகாப்பு மற்றும் சுகாதார பெரும் விபத்து என்று அதனை வர்ணித்தது. அந்த நகரத்திற்கு செல்வது பாதுகாப்பானதல்ல. அங்குள்ள சூழலியல் மாசினால் உடல்நல கேடுகள் ஏற்படலாம். அங்கு செல்லாதீர்கள் என்று எச்சரிக்கும் வண்ணம் வழி நெடுகிலும் எச்சரிக்கை பலகைகள் வைக்கப்பட்டுள்ளன.

ஆனால், இதனை கேட்கத்தான் யாரும் தயாராக இல்லை. மக்கள் தினம் தினம் சுவாரஸ்யத்திற்காக அங்கு செல்கிறார்கள். 'ஒன்றும் ஆகிவிடாது' சிறிது நேரம் அங்கு செலவிடுவதால் ஒன்றும் ஆகிவிடாது என்கிறார்கள் அங்கு சென்று வருவோர். தடை செய்யப்பட்ட இந்த சுரங்கம் அருவிகள் நிறைந்த கரிஜினி தேசிய பூங்காவுக்குச் செல்லும் வழியில் இருக்கிறது. மேற்கு ஆஸ்திரேலியாவை சேர்ந்த ஆஷ்லி வைட் தனது தோழியுடன் கரிஜினி தேசிய பூங்காவுக்குச் சென்றிருக்கிறார். அப்போது அவர் மட்டும் இந்தச் சுரங்கப் பகுதியை பார்வையிட்டுள்ளார்.




பி.பி.சி.யிடம் பேசிய வைட், நான் அந்த பகுதிக்கு செல்லும் முன்பே அந்த பகுதி குறித்து படித்துவிட்டுத்தான் சென்றேன் என்கிறார். அந்த பகுதி குறித்தான எந்த தகவல்களும் இவருக்கு அச்சமூட்டவில்லை. தைரியமாக அந்த பகுதிக்குச் சென்றிருக்கிறார். சிறிது நேரம் மட்டுமே அங்கு இருப்பதால் ஒன்றும் ஆகிவிடாது என்கிறார் வைட்.

மேலும் அவர், இந்த பிசாசு நகரத்தையும், கை விடப்பட்ட அதன் சுற்றுபுறத்தையும் பார்ப்பது மிக சுவாரஸ்யமான அனுபவமாக இருக்கிறது என்கிறார். பாதுகாப்பு குறித்து எந்த கவலையும் இல் லாமல் அவர் அந்தச் சுரங்கப் பகுதிக்கு சென்றிருந்தாலும், அவரது தோழி அந்த நகரத்திற்கு வர தயாராக இல்லை. இந்த செயல் மிகவும் ஆபத்தானது என்கிறார்கள் அதிகாரிகள். அந்த பகுதி முழுவதும் கல்நாரின் மாசு கலந்து இருப்பதாக எச்சரிக்கிறார்கள் அரசு அதிகாரிகள். வைட்டை போல சிலர் அந்த சுரங்கத்தைப் பார்வையிட்டு, அதனை படம்பிடித்து யூ டியூபிலும் பதிவேற்றி இருக்கிறார்கள். இந்த காணொலிக்கு கலவையான பின்னூட்டங்கள் வந்துள்ளன. சிலர் இதனை தீரமிக்க செயல் எனப் பாராட்டி இருக்கிறார்கள். சிலர் இதனை கடுமையாக கண்டித்து இருக்கிறார்கள்.

இந்த காணொலியை சமூக ஊடகத்தில் கண்ட அரசு அதிகாரிகள், அங்கு செல்வது எந்த வகையிலும் பாதுகாப்பானது அல்ல என்று கடுமையாக எச்சரிக்கை விடுத்துள்ளார்கள். அங்கு செல்வதால் நுரையீரல் புற்றுநோய்கூட வரலாம் என்று எச்சரிக்கின்றனர். ✽



# கால்விரலில் மெட்டி அணிவதற்கு உண்மையான காரணம் தெரியுமா?



பொதுவாக பெண்களுக்கு திருமண ஆன உடன் காலில் மெட்டி போடுவதை ஒரு சடங்காக செய்து வருகின்றனர். இந்த மெட்டியை பெண்ணின் கால் கட்டை விரலுக்கு அடுத்த விரலில் அணிகின்றனர்.

அழகுக்காக, கெட்ட சக்தி அண்டாமல் இருக்க, குணப்படுத்தும் ஆற்றலுக்காக, திருமண ஆன அடையாளமாக என்று பல்வேறு காரணங்களைக் கூறுகின்றனர்.

இந்த மெட்டியை பற்றி இப்பொழுது மட்டு மல்ல ராமாயணம் போன்ற புராண காலத்தில் கூட இதைப் பற்றி பேசப் பட்டு உள்ளது. ராவணன் சீதாவை கைப்பற்றி தூக்கிச் சென்ற போது தன் கணவன் சீதா ராமன் தன்னை கண்டறிய எளிதாக இருக்க வேண்டும் என்று தன் மெட்டியை கழற்றி எறிந்தார் என்ற கதை கூறப்படுகிறது. இந்த மெட்டி எப்பொழுதும் தங்கத்தால் அணியக் கூடாது. காரணம் தங்கத்தை இந்துக்கள் லட்சுமியின் வடிவமாக பார்ப்பதால் அதை காலில் போட அனுமதிப்பதில்லை.

இந்த மெட்டி வெள்ளியால் செய்யப்பட்டு உபயோகிக்கப் படுகிறது. இந்த மெட்டிக்கு பின்னாடி சில அறிவியல் சார்ந்த விடயங்களும் இருக்கின்றன என்று கூறப்படுகிறது. கால் கட்டை விரலுக்கு அடுத்த விரலில் தான் இது அணியப்படுவதால் அங்கு ஒரு அழுத்தத்தை ஏற்படுத்துகிறது. தாம்பத்ய உறவை மேம்படுத்தும் ஆற்றலும் இந்த கால் மெட்டிக்கு உண்டு.

காலில் மெட்டி அணிகின்ற விரல்களின் நுனிகளில் தான், கருப்பையின் நரம்பு நுனிகள் வந்து முடிகின்றன. இதனால் பெண்கள் நடக்கும் போது மெட்டி அழுத்தத்தை ஏற்படுத்தி பெண்களின் கருப்பை வளர்ச்சிக்கு உதவுகிறது. மேலும் அங்கே இரத்த ஓட்டம் அதிகரிக்கப்பட்டு பெண்களின் மாதவிடாய் சுழற்சி ஆரோக்கியமாக இருக்கவும், கருப்பை ஆரோக்கியமாக இருக்கவும் இந்த அழுத்தம் உதவுகிறது. இந்த அழுத்தம் பெண்களின் இனப் பெருக்க மண்டல உறுப்புகளை ஆரோக்கியமாக வைத்துக் கொள்ள பயன்படுகிறது.

இரண்டாவது விரலில் உள்ள நரம்புகள் கருப்பையிலிருந்து இதயத்தை இணைக்கிறது என்றும் இதில் கொடுக்கும் அழுத்தம் காரணமாக எல்லா உறுப்புகளும் புத்துயிர் பெறுகின்றன என்றும் கூறப் படுகிறது. விரல்களின் நுனிப் பகுதிகளில் தான்அத்தனை நரம்பு முடிச்சுகளும் இணைகின்றன.

மெட்டி பொதுவாக வெள்ளியால் செய்யப்பட்டு அணியப் படுகிறது. இது பூமியில் உள்ள போலார் ஆற்றலை உறிஞ்சி உடம்பு முழுவதுக்கும் பாய்ச்சுகிறது. தற்காலத்தில் சிலர் தங்கத்தில் மெட்டி அணிகிறார்கள். ஆனால் காலில் மெட்டி அணிய சிறந்த உலோகம் வெள்ளி தான் என்பது முன்னோர்களின் கண்டு பிடிப்பு என்பதையும் நாம் மறந்து விடக் கூடாது.

# கர்ப்ப காலத்தில் மன அழுத்தத்தை



## தவிர்க்க பொதுவான ஆலோசனைகள்

கர்ப்ப காலத்தில் முதல்முறையாக மனநலம் பாதிக்கப்படுகிறது என்றால், பிரச்சினையின் தீவிரத்தைப் பொறுத்து, மகப்பேறு மருத்துவர் சிகிச்சை அளிக்கலாம் அல்லது மனநல மருத்துவரின் உதவியை நாடலாம்.

கணவர் மற்றும் குடும்பத்தில் உள்ளவர்களின் செயல்பாடுகள் மனநலப் பிரச்சினை உள்ள கர்ப்பிணிகளுக்குப் பக்க பலமாகவும், ஆறுதலாகவும், ஆதரவாகவும் இருக்க வேண்டும். குறிப்பாக, அவருடைய இயலாமையைச் சுட்டிக்காட்டுவதையும் செயல்களில் குறைகூறுவதையும் தவிர்க்க வேண்டும்.

நம் கலாசாரத்தில் கர்ப்பிணிகளைப் பிரசவத்துக்குத் தாய்வீட்டுக்கு அனுப்பும் வழக்கம் இருக்கிறது.

இந்த சந்தர்ப்பத்தில் கர்ப்பிணிக்கு ஓய்வு கொடுக்க மட்டுமல்லாமல், அவருக்கு உடல், மனம் இரண்டையும் வலிமையாக்கி, பிரசவத்தை எளிதாக எதிர்கொள்ளும் மனப்பக்குவத்தை ஏற்படுத்துவதற்குத் தாய்தான் சிறந்தவள் என்பதை நம் முன்னோர் தெரிந்து வைத்திருந்த காரணத்தால், இந்த வழக்கம் ஏற்பட்டிருக்க வேண்டும்.

கர்ப்பத்துக்குப் பிறகு முதல்முறையாக மனநலம் பாதிக்கப்படுகிறது என்றால், பிரச்னையின் தீவிரத்தைப் பொறுத்து, மகப்பேறு மருத்துவர் தாமாகவே சிகிச்சை அளிக்கலாம் அல்லது மனநல மருத்துவரின் உதவியுடன் சிகிச்சை அளிக்கலாம். தீவிர மனச்சோர்வு நோயுள்ளவர்களுக்கு மட்டும் மனச்சோர்வுக்கான மாத்திரைகளோடு நடத்தைப் பயிற்சி சிகிச்சை, மின்னதிர்ச்சி சிகிச்சை உள்ளிட்டவை தேவைப்படும்.

கர்ப்ப காலத்தில் மருத்துவர் பரிந்துரைக்கும் சமச்சீர் உணவுகளை சாப்பிடுவது. அவசியம். வீட்டுச்சமையலே நல்லது.

போதிய ஓய்வு எடுக்க வேண்டியதும் முக்கியம்.

புகைபிடித்தல், மது அருந்துதல் போன்ற பழக்கங்களுக்கு விடை கொடுக்க வேண்டும். நடைப்பயிற்சி, யோகா உள்ளிட்ட உடற்பயிற்சிகள் உதவும்.

உறக்க நேரத்தை ஒழுங்குபடுத்த வேண்டும்.

கர்ப்பிணிகள் தங்களுக்கு உள்ள பிரச்சினைகளை மனதுக்குள் பூட்டி வைக்காமல், நெருங்கிய உறவினர்களிடமோ, தோழிகளிடமோ பகிர்ந்து கொண்டால், மனச்சுமை குறையும்; நோய் தீவிரமாவதைத் தடுக்க இது உதவும்.

வாழ்க்கையில் மகிழ்ச்சி, கஷ்டம் இந்த இரண்டையும் சமமாக எடுத்துக் கொள்ளும் மனோபாவத்தை கர்ப்பிணிகள் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

எதிர்மறை எண்ணங்களுக்கு இடம் கொடுக்கக்கூடாது. இதற்கு நல்லதொரு நட்பு வட்டத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். பெற்றோர், கணவர், தோழி, உறவினர், வேலைக்காரப் பெண், காய்கறி விற்கும் அம்மா என யாருடன் இருக்கும்போதெல்லாம் இதமாக உணர்கிறார்களோ, அவர்களை இந்த நட்பு வட்டத்தில் சேர்த்துக் கொள்ளலாம்.

பூங்கா, கடற்கரை போன்ற இடங்களுக்கு அல்லது அருகில் உள்ள உங்களுக்குப் பிடித்தமான இடங்களுக்கு வாரக்கடைசி நாள்களில் சென்று வரலாம்.

சினிமா தியேட்டருக்குச் செல்வது, மால்களுக்குச்செல்வதுபோன்றவற்றைத் தவிர்க்கலாம்.



# முகப்பரு பிரச்சினைக்கு தீர்வு தரும் முருங்கை



முகப்பரு பிரச்சினையால் அவதிப்படுபவர் கள், முருங்கை இலையை சாறு பிழிந்து முகத்தில் தடவி வரலாம். விரைவிலேயே முகப்பருக்கள் மறைந்து போகும்.

சமையலில் இடம்பிடிக்கும் முருங்கை இலை, சரும பிரச்சினைகளுக்கும் தீர்வு தருகிறது. முகப்பரு பிரச்சினையால் அவதிப்படுபவர்கள், முருங்கை இலையை சாறு பிழிந்து முகத்தில் தடவி வரலாம். விரைவிலேயே முகப்பருக்கள் மறைந்து போகும். முருங்கை இலை எண்ணெய்யும் முகப்பருக்களை விரட்டியடிக்கும் தன்மை கொண்டது. சரும வறட்சி, சரும சுருக்கங்கள் போன்ற பிரச்சினைகளுக்கு முருங்கை எண்ணெய், முருங்கை பவுடர் நிவாரணம் தரும்.

முருங்கை பவுடரை பன்னீரில் குழைத்து முகத்தில் பூசிவந்தால் சரும சுருக்கங்கள் மறையத் தொடங்கும். கரும்புள்ளிகள் இருந்தாலும் அவையும் நீங்கிவிடும். உதடுகளில் ஈரப்பதத்தை தக்க வைத்துக் கொள்வதற்கும் முருங்கை எண்ணெய்யை பயன்படுத்தி வரலாம்.

சரும பொலிவை மேம்படுத்தவும் முருங்கை இலைகளை பயன்படுத்தலாம். அதனை விழுதாக அரைத்து முகத்தில் பூசி வந்தால் முக அழகு கூடும். சருமத்தில் ஏற்படும் நிற மாற்றமும் மறையத் தொடங்கும். முருங்கை இலை பேஸ்டை வீட்டிலேயே தயார் செய்து பயன்படுத்தலாம்.

முதலில் முருங்கை இலைகளை வெயிலில் உலர்த்தி பொடியாக்கிக்கொள்ள வேண்டும். அதனுடன் சிறிதளவு தேன், பன்னீர் எலுமிச்சை சாறு சேர்த்து குழைத்துக் கொள்ள வேண்டும். அதனை முகத்தில் பூசி கால் மணி நேரம் கழித்து குளிர்ந்த நீரில் கழுவ வேண்டும். பின்னர் பருத்தித் துணியால் முகத்தை துடைத்துவிட்டு மொய்ஸ்ரைசரைப் பயன்படுத்தலாம். தொடர்ந்து இவ்வாறு செய்து வந்தால் சருமம் பொலிவடையும்.

## கார்மேல் அன்னையின் அருள் கிடைக்கட்டும்

16 ஜுலை 2018 அன்று திருஅவையில் சிறப்பிக்கப்பட்ட கார்மேல் அன்னையும் அரசியுமான கன்னி மரியா இறைவனின் மலையை நோக்கிய உங்கள் தினசரி பயணத்தில் உங்களோடு உடன் வருவாராக. தினமும் நற்செய்தியை குறைந்தது ஐந்து நிமிடங்களாவது வாசிக்க முயலுங்கள். உங்கள் வாழ்வை அது எவ்வளவு தூரம் மாற்றியமைக்கிறது என்பதை பார்ப்பீர்கள் என்கிறார் திருத்தந்தை பிரான்சிஸ்.

காலைக்கதிர்
Kālaikkathir
கிறிஸ்தவ செய்தி இதழ் TCNL
உண்மையை எடுத்துரைப்பதே என் பணி - யோவா:18:37
ஆசிரியர் : அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை - ஊடக விரிவுரையாளர்.

## நெல்சன் மண்டேலாவின் சிறை மடல்கள் நூல்

1918ஆம் ஆண்டு ஜுலை 18ஆம் திகதி பிறந்த நெல்சன் மண்டேலாவின் முதல் நூற்றாண்டில் நெல்சன் மண்டேலாவின் சிறை மடல்கள் என்ற நூல் வெளியாகியுள்ளது. இதில் இவர் சிறையில் எழுதி இதுவரை வெளிவராத 255 கடிதங்கள் இடம்பெற்றுள்ளன. 1962ஆம் ஆண்டு 44 வயதில் அரசால் கைது செய்யப்பட்டு 27 ஆண்டுகள் அவர் சிறையில் அடைக்கப்பட்டிருந்தார்.

# உதைபந்தாட்டத்திலும் பிற துறைகளிலும் முன்னிற்கும் புனித பத்திரிசியார் கல்லூரி

## பரிசளிப்பு விழா அறிக்கையில் புள்ளிவிவரங்கள்

2018ஆம் ஆண்டிற்கான புனித பத்திரிசியார் கல்லூரியின் பரிசளிப்பு விழா 12 ஜுலை 2018 அன்று யாழ் ஆயர்மேதகு கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை தலைமையில் நடைபெற்றது.

அங்கு தனது முதலாவது அதிபர் அறிக்கையை வெளியிட்ட புனித பத்திரிசியார் கல்லூரி அதிபர் ஏ.பி.திருமகன் அடிகளார் கல்லூரியானது 2017



ஆண்டில் மாவட்ட மட்ட ரீதியிலும் மாகாண மட்ட ரீதியிலும் தேசிய மட்ட ரீதியிலும் கல்வித்துறையில் பெற்ற பெறுபேறுகள், விளையாட்டுத்துறையில் ஏற்படுத்திய சாதனை கள் மற்றும் செயற்பாடுகள் பற்றி தெரியப்படுத்தினார்.

அவற்றில் தேசிய மட்ட ரீதியிலான கல்வித் துறையில் பெற்ற பெறுபேறுகள் மற்றும் விளையாட்டுத் துறையில் ஏற்படுத்திய சாதனைகள் பற்றி மட்டும் இங்கு நோக்குவோம்.

கல்வித்துறையில் ஆர்.டி.ஜே.போல் ஜான்சன் ஜி.சீ.ஈ உயர்தர பரீட்சையில் விஞ்ஞான பாடத்தில் தேசிய ரீதியில் 3ஆம் இடத்தைப் பெற்றார். மேலும் ஆர்.டி.ஜே.போல் ஜான்சன் ஆங்கில



மொழி மூலமான ஜி.சீ.ஈ உயர்தர பரீட்சை யில் தேசிய ரீதியில் 1ஆம் இடத்தைப் பெற்றார்.

விளையாட்டுத்துறையில் உதைபந்தாட்டத்தில் கொழும்பு ஜோசப் கல்லூரியால் தேசிய ரீதியில் நடத்தப்பட்ட 18 வயதினருக்குட்பட்ட உதைபந்தாட்ட போட்டியில் சம்பியன் வெற்றிக் கிண்ணத்தை தனதாக்கியது. ஏ.பிறீசன் என்ற உதைபந்தாட்ட வீரன் போட்டியின் சிறந்த வீரனாக தெரிவு செய்யப்பட்டார்.

யாழ்ப்பாண பாடசாலைகளின் விளையாட்டு கூட்டமைப்பால் (ஜே.எஸ்.எஸ்.ஏ) நடத்தப்பட்ட உதைபந்தாட்ட போட்டியில் சம்பியன் வெற்றிக் கிண்ணத்தை தனதாக்கியது. இப்போட்டியில் யாழ் மறைமாவட்ட குருக்களின் வழி நடத்தலில் இருக்கும் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி மற்றும் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி உட்பட நான்கு கல்லூரிகளுடன் மோதி வென்று சம்பியன் வெற்றிக் கிண்ணத்தை தனதாக்கியமை குறிப்பிடத்தக்கது.

இதனைவிட புனித ஹென்றியரசர் கல்லூரியினால் ஒழுங்கு செய்யப்பட்ட இன்னுமொரு யாழ்ப்பாண பாடசாலைகளின் உதைபந்தாட்ட போட்டியில் 20 வயதிற்குட்பட்டோர் உதைபந்தாட்ட போட்டியில் சம்பியன் வெற்றிக் கிண்ணத்தை தனதாக்கியது.

தேசிய மட்ட ரீதியிலான சாதனைகள் பற்றி மட்டும் இங்கு நோக்குவோம் என மேலே குறிப்பிடப்பட்டாலும் யாழ்ப்பாணத்தில் உதைபந்தாட்ட போட்டி என்றால் அது புனித பத்திரிசியார் கல்லூரிதான் என்ற நீண்ட கால சாதனையை கல்லூரியின் உதைபந்தாட்ட வீரர்கள் இன்னும் தக்க வைத்திருக்கிறார்கள் என்பதை காட்ட யாழ்ப்பாண பாடசாலைகளின் விளையாட்டு கூட்டமைப்பால் (ஜே.எஸ்.எஸ்.ஏ) நடத்தப்பட்ட உதைபந்தாட்டப் போட்டி முடிவுகள் இங்கு பதியப்படுகின்றன.

நாடு முழுவதற்குமான முதலாம் தர இலங்கை உயர்தர தேசிய பாடசாலைகளின் 18 வயதினருக்குட்பட்ட உதைபந்தாட்ட போட்டி 2017இல் கொழும்பு ஜோசப் கல்லூரியுடன் மோதி இரண்டாம் இடத்தைப் பெற்றது.

புனித பத்திரிசியார் கல்லூரியின் பாலர் பாடசாலைப்பிரிவினர் நடித்து மகிழ் என்னும் தேசிய மட்ட போட்டியில் 3ஆம், 4ஆம், 5ஆம் வகுப்பினர் முறையே வெண்கலம், வெண்கலம், வெள்ளிப் பதக்கங்களை பெற்றனர்.

கல்வி அமைச்சினால் தேசிய மட்டத்தில் நடத்தப்பட்ட சிறு நாடகப் போட்டியில் புனித பத்திரிசியார் கல்லூரி மாணவர்கள் முதலாம் இடத்தையும் 5 விருதுகளையும் பெற்றனர்.

கிறிஸ்தவ விவகார அமைச்சினால் தேசிய மட்டத்தில் நடத்தப்பட்ட சிறு நாடகப் போட்டியில் புனித பத்திரிசியார் கல்லூரி மாணவர்கள் இரண்டாம் இடத்தையும் 3 விருதுகளையும் பெற்றனர்.

# உண்மையின் எண்ணங்கள்

## யாழ் புனித பத்திரிசியார் கல்லூரி




புனித பத்திரிசியார் கல்லூரி இலங்கையின் பழம் பெரும் கல்லூரிகளில் ஒன்று. வட பகுதியின் புகழ் பூத்த கத்தோலிக்க கல்லூரியாகப் பல பெருமைகள் சாதனைகளின் கல்லூரியாக திகழ்ந்த கல்லூரி. கல்வியிலும் ஒழுக்கத்திலும் விளையாட் டிலும் சிறந்து விளங்கிய கல்லூரி. வெளி நாடுகளில் இருந்தும் வெளிமாவட்டங்களில் இருந்தும் பலர் வந்து கல்வி கற்ற ஒரு காலம் இருந்தது. இன்றும் பத்திரிசியார் கல்லூரி தன் பெயரையும் புகழையும் பாதுகாத்தே வருகிறது. புதிய கல்லூரி அதிபர் ஏ.பி.திருமகன் அடிகளாரின் அறிக்கை இதனை மேலும் உறுதிப்படுத்துகிறது.

உலகெங்கிலும் பழைய மாணவர்களாகப் பரந்து வாழும் பத்திரீசிய குடும்பம் தமது பழைய கல்லூரித்தாய் என்றும் பேருடனும் புகழுடனும் கல்வியிலும் கட்டுப்பாட்டிலும் விளையாட்டிலும் விழுமியங்களிலும் ஒப்பாரும் மிக்காரும் அற்று என்றும் திகழவேண்டும் என்றே விரும்புகின்றனர். அதற்காக தம்மாலான உதவிகளை வழங்கவும் ஆயத்தமாகவுள்ளனர். இந்தச் சாதனைகள் ஒரே நாளில் செய்து முடிக்கப்படக் கூடியனவு மல்ல. தொடர்ந்து வைத்திருக்க கூடியனவுமல்ல. புதிய அதிபர் எல்லோரின் எதிர்பார்ப்புக்களுக்கும் ஏற்ப பணியாற்ற இறைவரம் வேண்டுவோம்.

# முன்னறிவிப்பு ஏதுவுமின்றியே திருத்தந்தை நடத்திய திருமணம்



*14 ஜூலை 2018* அன்று சுவிஸ் மெய்க்காப்பாளர் ஒருவருக்கு வத்திக்கானில் நடைபெற்ற திருமணத் திருப்பலிக்கு திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி சென்று அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தினார். சுவிஸ் மெய்க்காப்பாளர் ஒருவருக்கும் பிரேசில் நாட்டு இளம் பெண்ணுக்கும் வத்திக்கான் நகரில் ஒரு சிற்றாலயத்தில் திருமணத் திருப்பலி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இத்திருமணத் திருப்பலியை நிகழ்த்த பிரேசில் நாட்டவரான சாந்தோஸ் அடிகளார் சிற்றாலயத்திற்கு நுழைந்த வேளை அங்கு திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் ஏற்கனவே அவருக்காகக் காத்திருந்தமையைக் கண்டு சாந்தோஸ் அடிகளார் ஆனந்த அதிர்ச்சி அடைந்தார்.

திருமணத் திருப்பலியை நிகழ்த்த திருத்தந்தை பீடத்திற்கு சென்றபோது மணமக்களும் கூடியிருந்தோரும் தாங்கள் காண்பதை நம்பமுடியாமல் திகைத்து நின்றனர்.

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தன் ஆடுகளின் மீது உண்மையான அக்கறை கொண்டவர் என்பதை இந்த நிகழ்வு உணர்த்துகிறது என சாந்தோஸ் அடிகளார் தெரிவித்தார்.

# புனரமைக்கப்பட்டு திறக்கப்பட்ட வயாவிளான் உத்தரிய மாதா






30 வருடங்களுக்கு பின்னர் போரின் கோர வடுக்களுடன் விடுவிக்கப்பட்ட வயாவிளான் உத்தரிய மாதா ஆலயம் புனரமைக்கப்பட்டு யாழ் ஆயர் மேதகு கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகா சம் ஆண்டகையால் திறந்து வைக்கப்பட்டது. வயாவிளான் உத்தரிய மாதா ஆலயத்தை யாழ் ஆயர் திறக்கின்றமையைப் புனரமைக்கப்பட்ட அழகிய ஆலயத்தையும் படங்களில் காணலாம்.

# அன்னை தெரேசா சபை மீது ஆதாரமற்ற குற்றச்சாட்டு

புனித அன்னை தெரேசாவின் அருள் சகோதரிகள் சபை ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்கு உள்ளாகியிருப்பது வேதனை தருகிறது என சபையின் உலகத் தலைவர் அருள் சகோதரி மேரி பிரேமா தெரிவித்துள்ளார்.


அன்னை தெரேசா சபையினர் குழந்தை விற்பனையில் ஈடுபட்டுள்ளனர் என்ற பொய்யான குற்றச்சாட்டுடன் ராஞ்சியில் பணியாற்றிவந்த அருள்சகோதரி கொன்சிலியா கைது செய்யப்பட்டார். இது குறித்து கருத்து வெளியிட்ட தலைமைச் சகோதரி பிரேமா தங்கள் சபையின் கன்னியர் எவ்வகையிலும் தவறுகள் செய்யவில்லை.

தங்களிடம் பணியாற்றி வந்த அனிமா இந்துவார் என்ற பெண்மணியின் தவறால் தாங்கள் மீது இந்த குற்றச் சாட்டு வந்துள்ளது. ராஞ்சியிலும் சுற்றுப்புறங்களிலும் திருமணம் ஆகாமல் தாயாகும் இளம்பெண்களுக்கு அடைக்கலம் அளிக்கும் நிர்மல் ஹிருதய் இல்லத்திற்கு அரசு அதிகாரிகள் அண்மையில் வந்து அங்கு நடைபெறும் பணிகளைப் பாராட்டியுள்ளனர்.

சமுதாயத்தால் புறந்தள்ளப்பட்டுள்ள மக்களிடையே 1950ஆம் ஆண்டு முதல் பணிபுரிந்து வரும் அன்னை தெரேசா சபையினர் தற்போது 139 நாடுகளில் 760 இல்லங்களில் பணியாற்றி வருகின்றனர். இந்தியாவில் 244 இல்லங்களில் பணியாற்றுகின்றனர். அண்மைய நிகழ்வுகளால் பாதிக்கப்பட்டுள்ளோர் அனைவருக்கும் ஆண்டவனின் பாதுகாப்பு கிடைக்க வேண்டிக் கொள்கிறேன்.– என அருள் சகோதரி பிரேமா மேலும் தெரிவித்தள்ளார்.

# கிண்டல் செய்வதை பற்றி நான் ஒருபோதும் வருத்தப்படவில்லை

**நெய்மர்**




என்னை கிண்டல் செய்வதைப் பற்றி நான் வருத்தப்படவில்லை என்று பிரேஸில் உதைபந்தாட்ட வீரர் நெய்மர் தெரிவித்துள்ளார்.

சமீபத்தில் ரஷ்யாவில் நடந்த உலகக்கிண்ண உதைபந்துப் போட்டியில் பிரேஸில் வீரர் நெய்மர் அதீத செயல்பாடு காரணமாக சமூக வலைதளங்களில் அதிகம் விமர்சிக்கப்பட்டார்.

நெய்மர் வேண்டுமென்றே காயம் அடைந்து விட்டது போன்று நடித்து நேரத்தைக் கடத்துவதால், தங்கள் அணியின் ஆட்டத்திறன் பாதிக்கப்பட்டது எனவும் பிற அணியினர் குற்றம் சுமத்தினர். நெய்மர் களத்தில் விழும் காட்சிகளை கேலி செய்து ரசிகர்கள் ட்விட்டரில் வீடியோக்களைப் பதிவிட்டனர்.

இந்த நிலையில் தன்னைப் பற்றிய விமர்சனங்கள் மற்றும் கிண்டல்களுக்கு நெய்மர் பதிலளித்துள்ளார்.

இது பறறி நெய்மர் கூறுகையில்,

என் மீதான விமர்சனங்கள், கேலி கிண்டல்கள் பற்றி நான் வருத்தப்படவில்லை. நான் அதை ஒரு நகைச்சுவையாகவே பார்க்கிறேன். நாம் எப்போதும் மகிழ்ச்சியைத் தேர்ந்தெடுக்க வேண்டும். நாம் வருத்தமாக இருக்க காரணங்கள் இருக்கின்றன. ஆனால் நான் மகிழ்ச்சியையே தேர்ந்தெடுப்பேன். - என்று தெரிவித்துள்ளார்.

# சொகுசு விடுதி ஊழியர்களுக்கு ரூ.40 லட்சம்

## டிப்ஸ் வழங்கிய ரொனால்டோ



கிறிஸ்டியானா ரொனால்டோ கீரிஸ் நாட்டில் உள்ள ஒரு சொகுசு விடுதியில் தங்கி இருந்த போது ஹோட்டல் ஊழியர்களுக்கு ரூ.40 லட்சம் டிப்ஸ் வழங்கி இன்ப அதிர்ச்சி அளித்தார்.

உலகக் கிண்ண உதைபந்து போட்டியில் போர்த்துக்கல் அணி 2ஆவது சுற்றுடன் வெளியேறியதும் அந்த அணியின் தலைவர் கிறிஸ்டியானா ரொனால்டோ தனது குடும்பத்தினர், நண்பர்களுடன் கிரீஸ் நாட்டில் கோஸ்டா நவரினோ என்ற சொகுசு விடுதிக்கு சென்று ஓய்வு எடுத்தார்.

அங்கு தங்கி இருந்த போது சொகுசு விடுதி ஊழியர்களின் உபசரிப்பும், சேவையும் அவருக்கு மிகவும் பிடித்துப் போனது. இதனால் சொகுசு விடுதியை விட்டுக் கிளம்பும் போது சொகுசு விடுதி ஊழியர்களுக்கு ரூ.40 லட்சம் வெகுமதியாக (டிப்ஸ்) வழங்கி இன்ப அதிர்ச்சி அளித்தார். காசோலையாக வழங்கிய அவர் அதை ஊழியர்களுக்கு பிரித்துக் கொடுக்கும்படி சொகுசு விடுதி நிர்வாகத்தைக் கேட்டுக் கொண்டார்.

# 21 ஆண்டு கால அன்வரின் சாதனையை தகர்த்த பஹாார் ஜமான்



பாகிஸ்தான் வீரர் சயீத் அன்வரின் 21 ஆண்டு கால சாதனையை 28 வயதான இடக்கை ஆட்டக்காரர் பஹாார் ஜமான் தகர்த்துள்ளார்.


சயீத் அன்வர், 1997 ஆம் ஆண்டு சென்னையில் நடந்த இந்தியாவுக்கு எதிரான ஆட்டத்தில் 194 ஓட்டங்கள் எடுத்ததே பாகிஸ்தான் வீரரின் தனிநபர் அதிகபட்சமாக இருந்தது. அந்த 21 ஆண்டு கால சாதனையை 28 வயதான இடக்கை ஆட்டக்காரர் பஹாார் ஜமான் தகர்த்துள்ளார்.

இரட்டைச் சதம் விளாசிய முதல் பாகிஸ்தான் வீரர் என்ற சிறப்பை பெற்றிருக்கும்




பஹாார் ஜமானுக்கு பாராட்டுகள் குவிந்து வருகின்றன. 2017ஆம் ஆண்டு சம்பியன்ஸ் கிண்ண இறுதி ஆட்டத்தில் இந்தியாவுக்கு எதிராக பஹாார் ஜமான் சதம் அடித்து தங்கள் அணியின் வெற்றிக்கு வித்திட்டது நினைவு கூரத்தக்கது.

# டோனி தான் இந்திய அணியின் தலைவர் பி.சி.சி.ஐ. வெளியிட்ட அதிர்ச்சித் தகவல்!




இந்திய கிரிக்கெட் கவுன்ஸில் தன்னுடைய, அதிகாரபூர்வ இணை யதள பக்கத்தில் டோனி பெயருக்கு அருகில் அணித் தலைவர் என குறிப்பிட்டிருந்ததால் பெரும் குழப்பம் ஏற்பட்டுள்ளது.

இந்திய கிரிக்கெட் அணியின் மூன்று வித போட்டிகளிலுமே சிறந்த ஓர் அணித் தலைவனாக விளங்கிய டோனி, ஆஸ்திரேலிய சுற்றுப் பயணத்தின் போது, அதாவது கடந்த 2014 டிசெம்பர் மாதம் டெஸ்ட் போட்டியிலிருந்து ஓய்வு பெறுகிறேன் என அறிவித்தார்.

அதனைத் தொடர்ந்து கடந்த 2017ஆம் ஆண்டின் துவக்கத்தில், இந்திய அணியின் ஒருநாள் மற்றும் ரி 20 போட்டிகளில் அணித் தலைவர் பதவியிலிருந்து விலகி, விக்கெட் காப்பாளராக மட்டும் நீடிக்க உள்ளேன் என அறிவித்திருந்தார்.

இந்த நிலையில் இந்திய கிரிக்கெட் சபை தன்னுடைய அதிகாரபூர்வ இணையதள பக்கத்தில் டோனியின் பெயருக்கு பக்கத்தில், இந்திய அணித் தலைவர் என குறிப்பிட்டிருந்தது. இதனை பார்த்த கிரிக்கெட் ரசிகர்கள் பலரும் ட்விட்டரில் கருத்து தெரிவிக்க ஆரம்பித்தனர்.

இதனையடுத்து சுதாரித்துக்கொண்ட பி.சி.சி.ஐ உடனடியாக அதனை நீக்கியது. ஆனால் ரசிகர்கள் அதனை புகைப்படமாக எடுத்து சமூக வலைத்தளங்களில் பதிவிட்டு கருத்து தெரிவித்து வருகின்றனர்.

இதுகுறித்து ரசிகர் ஒருவர், டோனி அணித் தலைவரர் பதவியிலிருந்து விலகி இரண்டு வருடங்கள் ஆகிவிட்டன. ஆனால் பி.சி.சி.ஐ இன்னும் டோனி தான் அணித் தலைவர் என நினைத்துக் கொண்டிருக்கிறது.எல்லோரும் தற்காலிக அணித் தலைவர் தான். ஆனால் கூல் டோனி தான் எப்போதும் அணியின் தலைவர் என பதிவிட்டுள்ளார்.



## வடக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் தெரிவிக்கையில் –

வடக்கு மாகாணத்தில் நாம் இன்று ஒரு சிறந்த வேலைத்திட்டத்தை ஆரம்பித்திருக்கின்றோம். வடக்கு யுத்தத்தால் அழிவடைந்துவிட்டது. மக்கள் மரணித்தார்கள். குடும்பங்கள் சீர்குலைந்தன. பொருளாதாரம் வீழ்ச்சியடைந்தது. இப்போது யுத்தம் நிறைவுபெற்றிருக்கிறது. சமாதானம் இருக்கிறது. அப்படி இருந்தாலும் இங்கு இன்னும் பல பிரச்சினைகள் இருக்கின்றன. இதில் ஒன்றுதான் பொருளாதாரம். சமாதானம் ஏற்பட்டிருந்தாலும் அபிவிருத்தி குறைவாகவே உள்ளது.

நாட்டின் ஏனைய இடங்களை விட வடக்கில் அபிவிருத்திகள் மிகவும் குறைவு.

பெண்களின் பிரச்சினைகள், கைதிகளின் பிரச்சினைகள் என்பனவும் இங்கு உண்டு அவை பற்றிப் பின்னர் பேசுகிறேன். இங்கே விவசாயிகளுக்கு நிறையப்பிரச்சினைகள்உண்டு. அவர்கள் அதிக கடன்களைப் பெற்றிருக்கின்றார்கள்.

எனவே இந்தக் களஞ்சிய சாலை மூலம் விவசாயிகளிடத்தில் ஒரு மாற்றம் ஏற்படவிருக்கிறது. நல்ல விலை கிடைக்கும் வரை நெல்லைக் களஞ்சியப் படுத்தி வைத்திருக்க முடியும். களஞ்சியப்படுத்தி வைத்திருக்கும் காலத்தில் இதனை வைத்துக்கடன்களைப்பெற்றுக் கொள்ள முடியும்.

கம்பெரலிய வேலைத்திட்டத்தின் மூலம் இந்தப் பிரதேசங்களில் அபிவிருத்திகள் மேற்கொள்ளப்படவுள்ளன. இதன் மூலம் இந்தப் பிரதேசங்களின் ஒப்பந்தகாரர்களுக்கும்வேலைகள் கிடைக்கவுள்ளன. எனவே இப்படியானவேலைத்திட்டத்தின் மூலம் பிரதேச மக்களுக்கு நன்மை பயக்கும் வகையில் பணிகளை முன்னெடுக்கவுள்ளோம். மேலும் இந்தச் செயற்றிட்டத்தின் மூலம் இந்தப் பிரதேசங்களில் உள்ள குளங்களையும் புனரமைக்கவுள்ளோம். இதன் மூலம் விவசாய நடவடிக்கைகள் மேம்பட்டு விவசாயிகள் நன்மையடைவார்கள்.

என்ரபிரைஸ் சிறிலங்கா திட்டத்தின்மூலம் விவசாயிகளுக்கு அதிக நிதிகள் கிடைக்கப்பெற்று அவர்கள் மேலும் நன்மையடைவார்கள். ஒரு லட்சம் ரூபாவாக இருந்தாலும் சரி ஐந்து லட்சம் ரூபாவாக இருந்தாலும் சரி விவசாயிகளுக்கு குறைந்த வட்டி வீதத்தில் அல்லது வட்டி இல்லாமல் கடன்களைப் பெற்றுக்கொடுக்க முடியும். விவசாயிகளுக்குக் கடன்களை வழங்கிய பின் அவர்களிடம் இருந்து அந்தக் கடனை மீளப் பெறுவது கடினமானது. எனவே அதற்கான ஒரு சிறந்த வழியை நாங்கள் அறிமுகப்படுத்தவுள்ளோம்.

சிறந்த போக்குவரத்து வசதியை ஏற்படுத்தும் வகையில் பூநகரி, மன்னார், வவுனியா ஊடான பெருந்தெரு மற்றும் திருகோணமலைக்கான பாதை உட்படபலபாதைகளைஅமைக்கவுள்ளோம். அதேபோன்று இந்திய அரசின் உதவியுடன் பலாலி விமானநிலையம், காங்கேசன்துறை உட்பட துறைகள் என்பவற்றையும் அபிவிருத்தி செய்யவுள்ளோம். இதன் மூலம் நீண்டகாலத் திட்டங்களை மேற்கொள்ளவுள்ளோம். இவை அனைத்தும்கிளிநொச்சிமாவட்ட மக்களுக்கே.

இலங்கை மக்கள் என்ற வகையில் சந்தோசம், துக்கம் இரண்டையும் பகிர்ந்துகொள்ள வேண்டும். உங்களின் துக்கத்தை நாமும் பகிர்ந்துகொள்கின்றோம். அனைவருக்கும் சிறந்த வாழ்க்கை கிடைக்கட்டும் – என்றார். (ஐ)

## ‘1990’...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிங்கவால் இந்த அம்புலன்ஸ் சேவை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

நேற்றைய நிகழ்வில் அம்புலன்ஸ் சேவையில் ஈடுபடும் பொருட்டு வடக்கு மற்றும் ஊவா மாகாணங்களுக்கு 55 புத்தம் புதிய மருத்துவ வண்டிகள் வழங்கப்பட்டன.

இந்தத் திட்டத்துக்கென இந்திய மக்களால் சுமார் 22.5 மில்லியன் அமெரிக்க டொலர் இதுவரை வழங்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்துக்கு 7 அம்புலன்ஸ்களும்,கிளிநொச்சி மாவட்டத்துக்கு 4 அம்புலன்ஸ்களும், மன்னார், வவுனியா, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்குதலா3அம்புலன்ஸ்களும்மற்றும்மேலதிகமாக ஒரு அம்புலன்ஸும் என இந்தத் திட்டத்தின் கீழ் வடக்கு மாகாணத்துக்கு 21 அம்புலன்ஸ்கள் வழங்கப்பட்டு இந்த அவசர சேவை நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

அத்துடன் ஊவா மாகாணத்திற்கு 34 வண்டிகளும் இந்தச் சேவையின் கீழ் வழங்கப்பட்டன.

இந்த இலவச அம்புலன்ஸ் சேவையில் ஆயிரத்து 500 இளையோருக்குப் புதிதாக பணி வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

அம்புலன்ஸ்சாரதிகள்மற்றும் அவசர மருத்துவத் தொழிநுட்பவியலாளர்கள் ஆகியோருக்கான நியமனக் கடிதங்களும் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் இந்தியப் பிரதமர்நரேந்திரமோடிநேரலை காணொலி தொழில்நுட்பத்தில் பங்கேற்று உரையாற்றினார்.

இந்த நிகழ்வில் இலங்கைக்கான இந்திய தூதுவர் தரன்ஜித் சிங் சந்து, வடக்கு முதமைச்சர் சி.வீ. விக்னேஸ்வரன்,தேசிய கொள்கைகள்மற்றும்பொருளாதார அலுவல்கள் பிரதி அமைச்சர் ஹர்ஷ டி சில்வா,தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின்நாடாளுமன்றஉறுப்பினர்கள்,மாகாண சபை உறுப்பினர்கள் மற்றும் உள்ளூராட்சி உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (ஐ-7)

## ரயில்வே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காததன் காரணமாக இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக ரயில்வே தொழில்நுட்ப உதவி அதிகாரிகள்சங்கத்தின்பிரதான செயலாளர்பியு.டி.எஸ்.கமல் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

ரயில்வே திணைக்களத்தின் அரசுடைமையைத் தனியாருக்கும் வழங்குவதற்கும் அதற்காக சபையொன்றை நியமிப்பதற்கும் அரசாங்கம் முன்னெடுத்துள்ள தீர்மானத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்துமே இந்த சட்டப் படி வேலையை முன்னெடுக்கத் தீர்மானித்துள்ளதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார். (உ)

## தானியக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தானியக்களஞ்சியசாலைநேற்றுப்பிரதமர்ரணில்விக்கிரமசிங்கவால் உத்தியோகபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது.

மாவட்ட விவசாயிகளின் முன்னேற்றம்கருதிஅமைக்கப்பட்ட இந்தக் களஞ்சியசாலையில் நெல்லைக்களஞ்சியப்படுத்திய விவசாயிகள் மூவருக்குப் பிரதமர் அதற்கான சிட்டையை வழங்கினார்.

இந்த நிகழ்வில் நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீர, கைத்தொழில் அமைச்சர் ரிஷாத் பதியூதீன், இராஜாங்க அமைச்சர் இரான் விக்கிரமரட்ன, நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி விஜயகலா மகேஸ்வரன்,அமைச்சுக்களின் செயலாளர்கள், மாவட்ட அரசஅதிபர், பிரதேச சபை உறுப்பினர்கள், விவசாயிகள், பொதுமக்கள்எனப்பலர்கலந்துகொண்டனர். (ஐ)

## துயரில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதனால் அவர்களை அடுத்த கட்ட நிலைக்குக் கொண்டு செல்வதற்காகவே இதனைச் செய்கின்றோம்.

– இவ்வாறு தெரிவித்தார் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி.

இந்திய அரசின் உதவியுடன் வடக்கு மாகாணத்துக்கு அவசர அம்புலன்ஸ் சேவைக்கான வண்டிகள் வழங்கும் நிகழ்வு யாழ். மாநகர மைதானத்தில் நேற்று மாலை நடைபெற்றது. இந்த நிகழ்வில் இணையவழி மூலமாகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே இந்தியப் பிரதமர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

நான் இலங்கைக்கு வந்த போது இலங்கை மக்களுக்கும் அரசுக்கும் அளித்த வாக்குறுதியை நிறைவேற்ற எனக்குச் சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு இந்த சேவை நடைபெறுவதை முன்னிட்டு அனைவருக்கும் எனது நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இலங்கை முழுவதும் இவ்வாறான அவசர அம்புலன்ஸ் சேவையை விஸ்தரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. வடக்கில் முதன் முதலாக இந்தச் சேவையைத் தொடங்குவதற்கான காரணம் வடக்கு மாகாணத்தில் வாழ்கின்ற மக்கள் துக்கத்திலும் துயரிலும் வாழ்ந்து வந்திருந்தார்கள். அதனால் அவர்களை அடுத்த கட்ட நிலைக்குக் கொண்டு செல்வதற்காகவே இதனைச்செய்கின்றோம். இது, இலங்கையின் தென் பகுதி உட்பட ஏனைய பகுதிகளுக்கும் விஸ்தரிக்கப்படுமென்பதை நாங்கள் கூறிக் கொள்கிறோம். இந்தச் சேவையினூடாகப் பல வசதி வாய்ப்புக்களும் மக்களுக்குக் கிடைக்கக் கூடியதாக அமையும்.

நான் இலங்கைக்கு இரண்டு தடவைகள் வந்திருக்கிறேன். அதிலும் இலங்கையின் யாழ்ப்பாணத்துக்குவிஜயம்செய்வதில் ஒரு இந்தியப் பிரதமருக்குக் கிடைத்த வாய்ப்பாக எனக்குக் கிடைத்ததையிட்டுமகிழ்ச்சியுடன் ஞாபகப்படுத்திக் கொள்கிறேன். அத்தோடு கொழும்பில் நடைபெற்ற வெசாக் பண்டிகையின் போதும் நான் பங்குகொண்டிருக்கிறேன்.

குறிப்பாக எல்லாச் சந்தர்ப்பங்களின்போதும் இலங்கை இந்தியாவுக்கு உதவுவதற்காக எப்போதுமே முன்னிற்கும் முதலாவதுநாடுஎன்பதைவலியுறுத்திக் கூறிக் கொள்கின்றேன். இலங்கைப் பிரஜைகளின் அபிலாஷைகளை, எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவதற்காக ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோர் மிகுந்த ஆர்வத்துடனும் தியாகத்துடனும் பாடுபட்டு வருகின்றார்கள். ஆகையால் அவர்களுக்கும் எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்தியாவுக்குஉதவுவதற்காக எப்போதுமே முன்னிற்கும் முதலாவது நாடு இலங்கை. இந்து சமுத்திரத்தில் நம்பிக்கை மிக்கபங்குதாராகவும்இலங்கை இருக்கின்றது. ஆகையால் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இலங்கைக்கு ஏற்படும் இன்ப துன்பங்களில் இந்தியா முதல் நாடாகக்கலந்துகொண்டுதனது பிரதிநிதித்துவத்தைக் காட்டி வருகிறது–என்றார். (ஐ-7)

## மரணதண்டனை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடத்தலில் ஈடுபடுபவர்களுக்கு மரண தண்டனை வழங்க வேண்டுமென்ற அரசாங்கத்தின் தீர்மானத்தை ஒருபோதும் மாற்றப்போவதில்லை எனவும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

போதைப்பொருள் கடத்தலில் ஈடுபடுபவர்களுக்கு மரண தண்டனை வழங்குதல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட அரசாங்கத்தின் தீர்மானம் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக தேசிய பத்திரிகை ஒன்றில் வெளியிடப்பட்டுள்ளசெய்தி தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி எவ்வாறான எதிர்ப்புகள் தோன்றிய போதிலும் போதைப்பொருள் கடத்தலில் ஈடுபடுபவர்களுக்கு மரண தண்டனை வழங்குவதற்கான நடவடிக்கைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுமென வலியுறுத்தினார்.

சட்டம், சிறைச்சாலைகள் மற்றும் நீதித்துறை பிரதானிகளுடனான கலந்துரையாடலொன்று எதிர்வரும் செவ்வாய்க்கிழமை இடம்பெறவுள்ளது. இதன்போது இந்த சகல துறைகளும் உள்ளடக்கப்படும் வகையில் குழுவொன்று நியமிக்கப்படவுள்ளதுடன், மரண தண்டனை வழங்கப்பட வேண்டியவர்களின் பெயர்ப்பட்டியலும் திகதியும் அக்குழுவினரால் தீர்மானிக்கப்படும் எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

சீன அரசாங்கத்தின் பூரண நன்கொடையில் பொலன்னறுவையில் நிர்மாணிக் கப்படும் சீன –இலங்கை நட்புறவு தேசிய சிறுநீரகவிசேடமருத்துவமனையின் நிர்மாணப் பணிகளை ஆரம்பித்துவைக்கும் நிகழ்வில் நேற்று முற்பகல் கலந்து கொண்டபோதே ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன இதனைத் தெரிவித்தார்.

நிகழ்வில் தொடர்ந்தும் உரையாற்றிய ஜனாதிபதி–

சமூகச் சீரழிவுகள் ஏற்படக் கூடிய நிலைமையில் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதைத் தாமதித்தலும், தடுத்தலும் உகந்ததல்ல என தெரிவித்தார்.

போதைப்பொருள் கடத்தல் காரர்களுக்கு மரண தண்டனை வழங்குதல் தொடர்பாக எதிர்ப்பு தெரிவிக்கும் எவரும் போதைப் பொருள்களால் ஏற்படும் சமூக சீரழிவைத்தடுப்பதற்கு எந்தவித ஒத்துழைப்பையும் பெற்றுக் கொடுக்கவில்லை என்பதே கவலைக்குரிய விடயமாகும் எனத் தெரிவித்த ஜனாதிபதி, போதைப்பொருள்களினால் நாட்டிற்கு ஏற்படும் அழிவைத் தடுப்பதற்கு தம்முடன் ஒன்றிணையுமாறு அனைவருக்கும் அழைப்பு விடுக்கிறார் எனவும் கூறினார். (உ)

## மீளவும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கணிப்பு போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை கல்வித்துறையில் அரசியல்பழிவாங்கல்நியமனம் எனும் போர்வையில் தகுதியற்றவர்கள் ஆயிரத்துக்கும் அதிக மானவர்களுக்கு நியமனங்கள் வழங்கப்படவுள்ளன என்று குற்றஞ்சாட்டி ஆசிரியர் சங்கம் உட்பட கல்விசார் தொழிற்சங்கங்கள் கடந்த 4ஆம் திகதி சுகயீன லீவு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

எனினும் வடக்கு – கிழக்கு உள்பட நாடுமுழுவதும் இந்தப் போராட்டம் பெரியளவில் வெற்றியளிக்கவில்லை.

இந்த நிலையில் வரும் 26ஆம் திகதி மீண்டும் பணிப் புறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுபட அதிபர் மற்றும் ஆசிரியர் சங்கங்கள் தயாராகி வருகின்றன.

## இலங்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உதவியுடன் வடக்கு மாகாணத்தில் இலவச அம்புலன்ஸ் சேவையை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு யாழ். மாநகர சபை மைதானத்தில் நேற்று மாலை நடைபெற்றது. இதில்பங்கேற்று உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இலங்கை – இந்தியா ஆகிய இரண்டு நாடுகளும் சம காலத்தில் இயற்கை போன்ற சிக்கல்கள், சவால்களை எதிர்கொண்டிருந்தாலும்கூடச்சமூகசேவைகள் மற்றும் சுகாதார நல சேவைகளில் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டு வருகின்றன. அந்த அடிப்படையிலேயே இலங்கையின் வேண்டுகோளை ஏற்று அவசர சிகிச்சையை வழங்குவதற்காக அம்புலன்ஸ்களை வழங்கியமைக்காக மக்கள் சார்பிலும் நானும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

குறிப்பாக யாழ்ப்பாணத்தில் பலாலி விமான நிலைய விஸ்தரிப்புமற்றும்காங்கேசன்துறை துறைமுக அபிவிருத்தி மற்றும் வீடுகளை அமைத்தல் மாத்திரம் அல்லாமல் மலைநாட்டிலே தோட்டப் பகுதிகளில் உள்ள மக்களுக்கும் வீடுகளைக் கட்டிக் கொடுப்பதற்கும் இந்திய அரசு முழுமையான ஒத்துழைப்புக்களை வழங்கியிருக்கிறது.

இவ்வாறு இந்திய அரசு எமது நாட்டுக்கும் மக்களுக்கும் வழங்கி வரும் உதவிகளுக்கு நான் மனதார நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

கலாசார ரீதியாகவும் நட்பு ரீதியாகவும் நாங்கள் எவருக்கும் உண்மையிலையே அடிபணியாதவர்கள். இவ்வாறு இரண்டு நாடுகளும் கலாசாரத்திலே பின்னிப் பிணைந்து இருக்கின்றோம்.

எங்கள் இரு நாடுகளுடைய நட்பை யாராலும் மதிப்பிட முடியாது. எங்களுக்குள் இணையற்ற நட்பு இருக்கின்றது. அதேபோலவே ஜனநாயக ரீதியிலே நாங்கள் பின்னிப் பிணைந்து உறுதியாக வாழ்ந்து கொண்டிருக்கிறோம். நாங்கள் ஒவ்வொரு வருடத்திலும் செய்யும் சேவைகளை மக்கள் மனங்களில் அறிந்து கொண்டிருக்கின்றார்கள்.

பாரதப் பிரதமர்நரேந்திரமோடி அவர்களே! நீங்கள் எமக்கு அளித்த வாக்குறுதிகளின் பிரகாரம் இலங்கைப் பிரஜைகள் முழுக்கவும் சுகாதாரமான நலமான வாழ்வுக்கு இட்டுச் சென்றமைக்காக எமது மக்கள், எமது அரசு சார்பில் மனமார்ந்த நன்றிகளை மீளவும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்திய நாடாளுமன்றத்தில் பிரதமர் நரேந்திர மோடிக்கு எதிராகச் சில தினங்களுக்கு முன்னர் நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்று கொண்டு வரப்பட்டிருந்தது. அதேபோன்று இலங்கையில் எனக்கு எதிராகவும் கடந்த மாதங்களில் நம்பிக்கையில்லாப்பிரேரணை கொண்டு வரப்பட்டிருந்தது. அதில் நான் வெற்றி பெற்றமை போன்று இந்தியப் பிரதமரும் வெற்றி பெற்றிருக்கின்றார். அவருக்கு எனது வாழ்த்துக்கள் – என்றார். (ஐ-7)


# மாதச் சம்பளம் பெற்றதும் புத்தக...

(13 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மேமன்கவி தனது முதலாவது (யுகராகங்கள்) கவிதைத் தொகுதியை வைத்து – தாம்பாளத்தை தூக்கியவாறு அடுத்து என்ன செய்வது எனத் தெரியாமல் தயங்குகின்றான்.

தம்பி எனக்கு எழும்ப முடியாது இனி அந்தத் தட்டத்தை என்னிடம் தாரும்.

மேமன்கவியும் அவ்வாறே செய்கின்றான்.




கனகசெந்தியின் நடுங்கும் வலது கரம் அந்த அழகிய மலரை மேமன்கவியின் தலையில் வைத்து ஆசீர்வதிக்கின்றது.

நன்றாக இருக்கவேண்டும் தொடர்ந்தும் எழுத வேண்டும். எனது வாழ்த்துக்கள் என்றும் உண்டு. கவிதை நூலை அவர் எடுத்துக் கொள்கிறார்.

இந்த அதியற்புதக் காட்சியைக் கண்டு எனது கண்கள் பனிக்கின்றன. கனக செந்திக்கே உரித்தான இந்த குணாதிசயம் எம்மில் எத்தனை பேருக்குண்டு...? அவர் மறக்க முடியாத மனிதர்.

தனது நண்பர்களை – அட....சொக்கா.... என அவர் செல்லமாக அழைப்பதுண்டு. அவ்வாறு என்னையும் அழைக்கவில்லையே என்ற ஏக்கமும் எனக்குண்டு. அவரை எனது வாழ்நாளில் இரண்டு தடவைகள்தான் சந்தித்திருக்கின்றேன். அதுவும் நீரிழிவு நோயினால் கடுமையாகப் பாதிக்கப்பட்டு படுக்கையில் விழுந்து விட்ட வேளைகள் அவை.

அவர் எப்படியிருப்பார்? – அவர் வாழும் அந்த அழகிய சிற்றூர் எப்படி இருக்கும்? – அவரது அந்தக் கதைகளில் பயின்ற செம்மண் ஒழுங்கைகளினூடே நடைபயில வேண்டுமே – இந்த ஆசைகள் 1972 இல் துளிர்விட்டபோதிலும் நிறைவேறியது 1975 இல் தான்.

மல்லிகை – ஆசிரியர் டொமினிக் ஜீவா என்னை இலக்கிய உலகிற்கு அறி முகப்படுத்தியவர் மட்டுமல்ல பல எழுத்தாளர்கள் எனக்கு நண்பர்களாவதற்கும் வழிவகுத்தவர்.

எனது முதலாவது சிறுகதைத் தொகுதிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் அறிமுகவிழா ஒழுங்கு செய்து – அழைப்பிதழும் அச்சடித்த பின்பு என்னை அழைத்தார். பத்து ஆண்டுகளின் பின்பு மீண்டும் யாழ் மண்ணில் கால் பதித்தேன்.

ரயில் நிலையத்தில் என்னை வரவேற்ற ஜீவாவைக் கண்டதுமே ஏதோ கனகசெந்தி பக்கத்தில்தான் இருப்பார் என்ற எண்ணத்தில் – அவரைப் பார்க்க வேண்டும் – என்றேன். எனது ஆவலைப் புரிந்து கொண்ட ஜீவா என்னை மறுநாளே குரும்பசிட்டிக்கு பஸ் ஏற்றி விட்டார். அன்றுதான் அந்த அழகிய கிராமத்தை தரிசித்தேன்.

கொட்டும் மழையில் அந்த ஊரில் இறங்கி வீட்டுக்கு வழிகேட்டுச் சென்று அவரது இனிய உபசரிப்பில் திளைத்து பல புதினங்கள் பேசி கலந்துரையாடினேன்.

எழுத்தாள சகோதரர் அன்பளிப்புச் செய்த சக்கரநாற்காலியில் அமர்ந்து கொண்டே புதினம் பேசினார் கனகசெந்தி. அந்தச் சக்கர நாற்காலியை வழங்கியவர் டானியல் என்ற தகவல் பின்புதான் தெரியும்.

இலக்கிய உலகத்தைப் பற்றி மாத்திரமல்லாமல் எழுத்தாளர்களின் பின்னணிகளையும் நன்கு தெரிந்து வைத்திருந்த நடமாடும் நூல் நிலையம் கனகசெந்திநாதன்.

அவர் உண்மையிலேயே வியப்பான மனிதர்தான். ஆசிரியராகப் பணிபுரிந்த காலத்தில் மாதச் சம்பளம் எடுத்ததுமே புத்தகக் கடைக்கு முதலில் சென்று பத்திரிகை – சஞ்சிகை – புத்தகங்கள் விலை கொடுத்து வாங்கி வரும் வித்தியாசமான மனிதர் அவர்.

எங்காவது உதை பந்தாட்டம் நடக்கிறது என அறிந்தால் அங்கும் ஓடிச்சென்று விளையாட்டு வீரர்களை உற்சாகப்படுத்தும் விளையாட்டுப் பிரியர் என்று கவிஞர் அம்பி சொல்லக் கேட்டதுண்டு.

இந்த நடமாடும் நூல்நிலையம் மிகுந்த பிரயாசையுடன் ஈழத்து இலக்கிய வளர்ச்சி என்ற நூலை வெளியிட்டது. அதன் உள்ளடக்கம் தொடர்பாகப் பல்வேறு கருத்துக்கள் உண்டு. சிலரை கனகசெந்தி மறந்துவிட்டார் என்ற குற்றச்சாட்டும் – அதனை வெளியிட்டவர்கள் தமது கைச்சரக்குகளையும் 'கனக செந்தியே அறியா வண்ணம் அதில் திணித்து விட்டார்கள் என்றும் கூறப்பட்டதுண்டு.

எது எப்படி இருந்தபோதிலும் ஈழத்து தமிழ் இலக்கிய உலகில் அவர் வித்தியாசமான மனிதர்தான்.


எனது கதைகளைப் படித்ததன் மூலம் மாத்திரம்தான் என்னையும் அறிந்திருப்பார் என நினைத்தேன். ஆனால், அவரோ எனது பூர்வீகத்தையும் தெரிந்து வைத்துள்ளார் என்பதை முதல் முதலில் அன்று சந்தித்து உரையாடிய பொழுதுதான் புரிந்து கொண்டேன்.

ஓ.. இந்த மனிதருக்கு எப்படி இதெல்லாம் தெரியும்? எனக்குள் ஆச்சரியம் படர்ந்தது.

நீர்கொழும்பு வீதிகளில் தாம் நடமாடியதையும் அங்கு கடற்கரை காற்றில் மிதந்ததையும் சுவை பொங்கக் கூறினார். அந்தக் காலங்களில் நான் சிறுவன். நண்பர்களுடன் கள்ளன் – பொலீஸ் விளையாடியிருக்க வேண்டும்.

ஜீவா.... நல்ல காரியம் செய்திருக்கிறான். நீர்கொழும்பிலும் – திக்குவல்லையிலும் – அநுராதபுரத்திலும் – புத்தளத்திலும் தமிழ் எழுத்தாளன் பிறக்கிறான் என்பதை எமக்கு மல்லிகை மூலம் சொன்னவன் ஜீவா. கனகசெந்தி உதிர்த்த இந்த வார்த்தைகள் நிஜம்தானே.

அச்சந்திப்பு முடிந்து சுமார் ஓராண்டு காலத்தின் பின்பு நண்பர் – கவிஞர் மேமன்கவியை அவரிடம் அழைத்துச் சென்றேன். இம்முறை எம்மை உரும்பிராயிலிருந்து குரும்பசிட்டிக்கு தத்தமது சைக்கிள்களில் ஏற்றிச்சென்று வழிகாட்டியவர்கள் நண்பர்கள் செல்வமும் தம்பையாவும்தான். இருவருமே நல்ல இலக்கியச் சுவைஞர்கள். அவ்வப்போது எழுதியவர்கள்.




சைக்கிள் பாரில் அமர்ந்து கால் தொடை நசிந்து – பாதம் விறைத்து பலமுறை வீதியோரங்களில் மேமன்கவி அமர்ந்து புலம்பிய கதையை இங்கே சொல்ல வேண்டிய அவசியமில்லை.

இந்த இரண்டாவது சந்திப்பின்போது அவருக்கு 60 வயதாகி மணி விழாவுக்கான ஏற்பாடுகள் ஆரம்பமாகியிருந்த காலம். அவரை நேரில் வாழ்த்திவிட்டு – ஐயா! உங்கள் மணிவிழாவை எங்கள் ஊரிலும் நடத்த விரும்புகிறோம். – உங்கள் அபிப்பிராயம் எப்படி...? எனக் கேட்டேன்.

தம்பி .. ...என் நிலைமை உமக்குத் தெரியும். நடமாட முடியாமல் இங்கு முடங்கிக் கிடக்கின்றேன். பாராட்டு விழாக்கள் – மணி விழாக்களில் மினக்கெடுறதை விட உருப்படியாக ஏதும் செய்தால் நல்லது. வெளிவராத பல படைப்புகள் இங்கே இருக்கு. அவற்றை அச்சில் பார்க்க விருப்பம். அதற்கு ஏதும் வழி இருந்தால் சொல்லும்.

நல்ல யோசனை. உங்களுடைய ஏதாவது நூல் கையெழுத்துப் பிரதியில் இருந்தால் தாருங்கள் நாங்கள் நூலாக்கி வெளியிட ஆவன செய்கிறோம் எனச் சொல்லி அவரது ஒருபிடி சோறு நாடகப் பிரதியை வாங்கிச் சென்றேன்.

நீர்கொழும்பில் கனகசெந்திக்குத் தெரிந்த வர்த்தக நண்பர்கள் – இலக்கிய நண்பர்கள் நிதி உதவி வழங்க முன்வந்தனர். எழுத்தாளர் சாந்தன் முகப்போவியத்தை வரைந்தார். நண்பர் மு.கனகராசன் நூலின் பின்புற அட்டையில் கனக செந்தியைப் பற்றிய குறிப்பை எழுதினார்.

இரசிகமணி விழா நீர்கொழும்பு இந்து இளைஞர் மன்ற மண்டபத்தில் எமது இலக்கியவட்டத்தின் சார்பில் நீர்கொழும்பு விஜயரத்தினம் மகாவித்தியாலயத்தின் அப்போதைய அதிபர் வ.சண்முகராசா தலைமையில் நடந்தது. கவிஞர் அம்பியும் கலந்து கொண்டு கனகசெந்தியின் சிறப்பியல்புகளைச் சிலாகித்துப் பேசினார்.

கனகசெந்தியின் புதல்வர் முருகானந்தன் தந்தையின் சார்பில் கலந்துகொண்டு – ஒருபிடி சோறு நூலின் பிரதிகளை தலைவரிடமிருந்து பெற்ற பொழுது மண்டபத்தில் எழுந்த கரகோஷம் கனகசெந்திக்கு கேட்டிருக்காதுதான். ஆயினும் ஒரு நல்ல எழுத்தாளருக்கு எந்தத் திசையிலும் நல்ல வரவேற்புக் கிடைக்கும் என்பதற்கு அந்த மணிவிழாவும் நல்ல உதாரணம்.

நாயகன் இல்லாமலே மணிவிழா நீர்கொழும்பில் மாத்திரம் நிறைவு பெறவில்லை பின்னர் கொழும்பிலும் இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் சார்பாக வெள்ளவத்தை தமிழ்ச் சங்க மண்டபத்திலும் இரசிகமணிவிழா நடைபெற்றது. அங்கும் ஒரு பிடி சோறு அறிமுகப்படுத்தப்பட்டது.

விழாவுக்கு எழுத்தாளர்கள் திரண்டு வந்தனர். முன்னேற்பாடாக ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்துக்கும் அறிவித்திருந்தோம். நிகழ்ச்சியை ஒலிப்பதிவு செய்ய வந்தவர்கள் மறுநாள் திங்கள் மாலையே அதனை ஒலிபரப்பவிருப்பதாகச் சொன்னபோது அதிர்ந்து விட்டேன். இந்தவிழா நிகழ்ச்சிகளைக் கண்டுகளிக்க முடியாத கனகசெந்திநாதன், வானொலி மூலமாவது கருத்துக்களைக் கேட்க வேண்டுமே என்ற ஆதங்கமே அவ்வதிர்ச்சிக்குக் காரணம்.

விழா முடியும் பொழுது இரவு 10 மணியும் கடந்து விட்டது. இன்னும் சில மணி நேரங்களில், அதாவது மறுநாள் மாலை இந்த நிகழ்ச்சி ஒலிபரப்பப்பட்டு விடும். படுத்த படுக்கையில் இருக்கும் கனகசெந்தி இதனைக் கேட்கச் சந்தர்ப்பம் கிட்டுமா...? கடுமையாக யோசித்தேன். கவிஞர்கள் அம்பியும் சில்லையூர் செல்வராசனும் நல்ல யோசனை சொன்னார்கள்.

உடனே தொலைத்தொடர்பு தலைமையகத்துக்குச் சென்று கனகசெந்திக்கு அவசர தந்தி மூலம் தகவல் அனுப்பினேன். வானொலியை குறிப்பிட்ட நேரத்தில் செவி மடுக்கவும். இதுதான் தகவல்.

மறுநாள் கனகசெந்திக்கு தந்தியும் கிடைத்து, அவரும் வானொலி கேட்டு நன்றி கூறிக் கடிதம் எழுதினார்.

சுறுசுறுப்பு மிக்க அந்தப் படைப்பாளியை காலம் அவ்வாறு கட்டிலில் முடக்கிப் போட்டிருக்க வேண்டாம். விதி அவருடன் நன்றாக விளையாடியது. அவரும் சளைக்காமல் ஈடுகொடுத்து விளையாடினார்.

குரும்பசிட்டி வீட்டின் ஒரு புறத்தில் கொட்டில் அமைத்து, அங்கே ஏராளமான நூல்களைச் சேகரித்து வைத்திருந்தார். அவரைப் பார்க்கச் செல்வோர் அந்த நூலகத்தையும் தரிசிக்கத் தவற மாட்டார்கள்.

கவிஞர் கந்தவனம் – கலைஞர் ஏ.ரி. பொன்னுத்துரை முதலானோர் அவ ரது ஊரையே பிறப்பிடமாகக் கொண்டவர்கள். அடிக்கடி அவரைச் சந்தித்து அவரது உற்சாகம் தளராமல் பார்த்துக் கொண்டார்கள் என்பதா அல்லது கனகசெந்திதான் அவர்களை உற்சாகப்படுத்தி எழுதத் தூண்டினாரா? என்பது தெரியாது.

பேராசிரியர் கைலாசபதியும் இரசிகமணி கனகசெந்தியும் இலக்கியக் கருத்து ரீதியாக முரண்பட்டவர்கள்தான். கைலாஸ் தமது விமர்சனங்களை மாக்ஸீயக் கண்ணோட்டத்தில் அணுகியவர். ஆனால், கனகசெந்தி அப்படியல்ல. கனகசெந்தி பெரும்பாலும் நயப்புரைகளையே எழுதியவர். ஈழத்துப்பேனா மன்னர்கள் என்ற அவரது தொடர் முன்னர் வெளியான ஈழகேசரியில் பிரசுரமானபொழுது அதற்கு இலக்கிய வட்டாரத்தில் நல்ல வரவேற்பு இருந்திருக்கிறது.

கனகசெந்தியின் இலக்கிய நயப்புரையில் அதிகம் ஆர்வம் காண்பிக்காத பேராசிரியர் கைலாசபதி, யாழ்.பல்கலைக் கழகத்தில் தமிழ் நாவல் நூற்றாண்டு ஆய்வரங்கை நடத்தியபொழுது அதில் கலந்து கொள்வதற்காக தமிழகத்திலிருந்து வருகை தந்திருந்த எழுத்தாளர் அசோகமித்திரனிடம் – கனகசெந்தியைப் பற்றி மிகவும் உயர்வாகச் சொன்னதுடன்



இரசிகமணி கனகசெந்திநாதன்

கவிஞர் எம்.ஏ.நுஃமானுடன் அசோகமித்திரனை குரும்பசிட்டிக்கு அனுப்பிவைத்தார்.

கனகசெந்தியை சந்தித்துத் திரும்பிய அசோகமித்திரன் வழங்கிய சான்றிதழ் உங்கள் நாட்டில் எழுத்தாளர்களிடையே நிலவும் சகோதரத்துவமான நட்புணர்வு என்னைச் சிலிர்க்க வைக்கின்றது.

இறுதியாக அவரை நான் சந்தித்த இரண்டாவது சந்தர்ப்பத்தில் அவர் நீரிழிவு உபாதையினால் தனது கால் கை விரல்களையும் இழந்திருந்தார். இனிப்பு அவரை உடனிருந்து அழித்தது. அவர் இனிமையான மனிதர். இலக் கியத்தையும் இனிப்பையும் நேசித்தார்.

அவரைப்பற்றி கவிஞர் அம்பி சுவாரஸ்யமான தகவல் ஒன்றை என்னிடம் சொல்லியிருக்கிறார்.

யாழ்ப்பாணத்தில் தாமோதர விலாஸ் என்ற சைவ ஹோட்டலுக்கு வடையும் பால் கோப்பியும் அருந்துவதற்கு கனகசெந்தியுடன் இலக்கிய நண்பர்கள் செல்வார்களாம்.

கனகசெந்தியே உரத்த குரலில் சர்வரிடம் குரல் கொடுப்பாராம். தம்பி எல்லோருக்கும் வடை கொண்டுவாரும். அத்தோடு எல்லோருக்கும் சுடச்சுட பால் கோப்பி . ஆனால் எனக்கு மாத்திரம் சீனி போடாமல் கோப்பி என்பாராம்.

முதலில் வடை வரும். கனகசெந்தி விரைந்து சாப்பிட்டுவிட்டு விரைந்து எழுந்து கைகழுவச்செல்லும்பொழுது கோப்பி தயாரிப்பவரின் அருகில் சென்று சன்னமான குரலில் எல்லாத்துக்கும் சீனி போடு தம்பி. ஆனால் மேசைக்கு கொண்டுவரும் பொழுது என்னிடம் சீனி இல்லாத கோப்பி என்று ஒரு டம்ளரைத் தந்துவிடும் என்பாராம்.

ஒருநாள் கனகசெந்தியின் இந்த கோப்பி – சீனி விளையாட்டு கையும் களவுமாகப்பிடிபட்டதாம். இந்தச் சுவாரஸ்யத்தை எழுத்தாளர்களின் மறுபக்கம் என்ற தொடரை பல வருடங்களுக்கு முன்னர் தினக்குரல் ஞாயிறு இதழில் எழுதியபொழுது கனகசெந்தி பற்றிய அங்கத்தில் பதிவு செய்துள்ளேன்.

கவிஞர் அம்பியிடம் மானிப்பாய் கிறீன் மருத்துவமனையை ஸ்தாபித்த அமெரிக்க பாதிரியார் சாமுவேல் பிஸ்க் கிறீன் அவர்கள் பற்றிய தகவலைச் சொல்லி ஆய்வு செய்யவைத்தவர் கனகசெந்திதான். கனகசெந்தி எழுதியிருக்கும் நூல்கள்:

வெண்சங்கு (சிறுகதைகள்) – ஈழத்து இலக்கிய வளர்ச்சி (ஆய்வு)

வெறும் பானை (நாவல்) – விதியின் கை (நாவல்)

ஒருபிடி சோறு (நாடகம்) ஈழம் தந்த கேசரி

கவின்கலைக்கு ஓர் கலாகேசரி – கலை மடந்தையின் தவப் புதல்வன்

நாவலர் அறிவுரை – கடுக்கனும் மோதிரமும்

இன்றைய இளம் தலைமுறை எழுத்தாளர்கள் கனக செந்தியின் நூல்களைத் தேடி எடுத்துப் படிக்க வேண்டும். அவர் வாழ்ந்த வாழ்க்கையை அவருடன் பழகிய நண்பர்களிடம் கேட்டுத் தெரிந்த கொள்ள வேண்டும். மிகவும் எளிமையான மனிதர். இனிய பண்புகள் நிறைந்த படைப்பாளி. எம்மிடையே நினைவுகளைப் பதிந்து விட்டுப் பிரிந்து விட்டார். (தொடரும்)

# தானியக் களஞ்சியசாலை கிளிநொச்சியில் திறந்து வைப்பு











# புதிய பேருந்து நிலையத்துக்கு முல்லைத்தீவில் அடிக்கல் நாட்டு







# 30 ரவைகள் பாய்ந்த நிலையில் வலியால் அவதிப்பட்ட யானை



அம்பாந்தோட்டை வனப்பகுதியில் 30க்கும் மேற்பட்ட துப்பாக்கி குண்டுகள் பாய்ந்த நிலையில், வலியால் அவதிப்பட்ட யானை ஒன்று மக்களின் உதவியை நாடி வந்த சம்பவம் நிகழ்ந்துள்ளது.

கடந்த 1986ஆம் ஆண்டிலிருந்து இலங்கையில் யானை அருகி வரும் இனமாக பட்டியலிடப்பட்டது, எனவே யானையைக் கொல்வது தண்டனைக்குரிய குற்றமாக்கப்பட்டதுடன், நிரூபிக்கப்பட்டால் 2 முதல் 5 ஆண்டுகள் வரை சிறைத்தண்டனையும் வழங்கப்படும்.

இருப்பினும் ஓர் ஆண்டுக்கு பிறப்பு விகிதம் 100 என்றாலும் இறப்பு விகிதம் 250 ஆக உள்ளது, எனவே யானைகளை காப்பாற்ற இலங்கை அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

இந்நிலையில் கடந்த வாரம் ஹம்பாந்தோட்டை வனப்பகுதியிலிருந்து 30 துப்பாக்கி குண்டுகள் பாய்ந்த நிலையில், யானை ஒன்று மக்களின் வசிப்பிடத்தை நோக்கி வந்துள்ளது.

இதை பார்த்த மக்கள் மருத்துவருக்கும், வனத் துறையினருக்கும் தகவல் அளித்தனர்.

விரைந்து வந்த அதிகாரிகள் யானைக்கு சிகிச்சை அளித்து வருகின்றனர், குண்டடிபட்ட இடத்திலிருந்து சீழ் வடிவதாகவும், காயங்களிலிருந்து அந்த யானை மீள ஆறு மாதங்கள் ஆகலாம் எனவும் மருத்துவர் தெரிவித்துள்ளார்.

இதனைதொடர்ந்து காயமடைந்த யானை மேலதிக சிகிச்சைக்காக மறுவாழ்வு மையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கனகராயன்குளம் பகுதியில் இறந்த யானையின் சடலம்





வவுனியா கனகராயன்குளம் காட்டுப்பகுதியிலிருந்து உயிரிழந்த நிலையில் யானையின் உடல் மற்றும் எச்சங்களை கனகராயன்குளம் பொலிஸார் நேற்று முன்தினம் மாலை மீட்டுள்ளனர்.

கனகராயன்குளம் பகுதியில் அமைந்துள்ள வயலுக்கு சென்ற விவசாயிகள் சிலர் அருகில் காணப்பட்ட காட்டுப்பகுதிக்கு சென்றிருந்த சமயத்தில் உயிரிழந்த நிலையிலிருந்த யானையின் எச்சங்களைக் கண்டுள்ளனர்.

இதையடுத்து கனகராயன்குளம் பொலிஸாருக்கு அவர்கள் தகவல் வழங்கியுள்ளனர். கனகராயன்குளம் பொலிஸார் வனஜீவராசிகள் திணைக்களத்திற்கு அறிவித்தமையுடன், சம்பவ இடத்திற்குச் சென்று இது குறித்த விசாரணைகளையும் மேற்கொண்டனர்.

கடந்த இரண்டு தினங்களுக்கு முன்னர் இந்த யானை இறந்திருக்கலாம் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்த யானையின் சில பாகங்கள் உடற்கூற்று பரிசோதனைக்காக எடுத்துச் செல்லப்பட்டுள்ளன.

(உ-100)

# 1991 இலவச அம்புலன்ஸ் சேவை யாழ்ப்பாணத்தில் நேற்று ஆரம்பம்















இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 22.07.2018 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.